இந்திய கைத்தொழில் அபிவிருத்தி.

இதில்
நம் நாட்டிற்கான பல நூதன தொழிற்களும்,
தொழிற் திட்டங்களும் சேர்க்கப்
பட்டிருக்கின்றன.

ஆசிரியர்,

T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார்,

F. R. S. A. (London.)

இந்திய கைத்தொழில் அபிவிருத்தி.

இதில்
நம் நாட்டிற்கான பல நூதன தொழிற்களும்,
தொழிற் திட்டங்களும் சேர்க்கப்
பட்டிருக்கின்றன.

ஆசிரியர்,
T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார்,
F. R. S. A. (London).

சென்னை, கேசரி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.

1937.

 [விலை அணா 8.

இதிலுள்ளனவற்றை காங்கிரஸ் அரசாங்கத்தார் கவனித்து நம் நாட்டுத் தொழில்களை விரைவில் நல்வழிப்படுத்துவார்களாயின், அதுவே அவர்களின் பொறுப்பாட்சியை அசையா அஸ்திவாரத்தின் மீது அமர்த்தியதாகும்.

அவசரத்திலெழுதிய இப்புத்தகத்திலுள்ள குற்றங்களை நீக்கி குணங்களை மட்டுமே அறிஞர்கள் கொள்ள வேண்டுகிறேன்.

T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார்,
F. R. S. A. (London)
பொதுக்காரியதரிசி,
தென்னிந்திய விஸ்வகர்ம மகாஜன
கான்பரன்ஸ் மத்திய போர்டு. 'விஸ்வகலாநிதி'
தலைமை ஆசிரியர்.

சென்னை,
10 டிசம்பர் 1937.



T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார், F.R.S.A. (London.)
ஆசிரியர்.



T. M. [illegible] London.)

[illegible]

இந்திய கைத்தொழில் அபிவிருத்தி.

முதல் அத்தியாயம்.

பூர்வாங்கம்.

உலக நாகரீகத்திற்கெல்லாம் முற்பட்ட இந்திய தேசக் கைத்தொழில்கள்யாவும் தற்காலம் உன்னதம் குன்றி, மிக க்ஷீண தசைக்கு வந்துவிட்டன. பூர்வீகக் கைத்தொழிலாளர்கள் செய்வதற்கு தக்க வேலையும், உண்ண உணவும், உடுக்க உடையுமின்றி பரதவித்து வருந்துகின்றனர். இதற்குக் காரணம் பலவற்றுள்ளும் அந்நிய நாட்டு உற்பத்திச் சரக்குகளின் ஏராளமான இறக்குமதியும், உள்நாட்டு உற்பத்திச் சரக்குகளுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தேவையில்லாதிருப்பதுமே தலையாயதாகும். இப்போதைய நாகரீகத்தில் அந்நிய நாட்டு உற்பத்திச் சாமான்களிலே உயர் வகுப்பைச் சார்ந்த இந்தியர்கள் மிகநாட்டம் வைக்கலாயினர். ஏனெனின், அச்சாமான்களின் தீர்மானம் மிக நாணயமாக விருப்பது ஒருபுறமிருக்க, அவைகள் இந்திய சாமான்களை விட விலை வெகு மலிவாகக் கிடைப்பதேயாகும். அந்நிய நாட்டுச் சாமான்கள் இயந்திர சகாயங்களின் மிகுதியால் வியாபார நோக்கங்கொண்டு பெருவாரியாகச் செய்யப்படுவனவைகளாகும். இந்தியசாமான்களோ மானிட உழைப்பால் வெறும் கையினால் சிறுகச் செய்யப்படுவனவைகளாகும். எனவே, இந்தியத் தொழிலாளிகள் இயந்திர உற்பத்திச்சாமான்களுடன் உற்பத்தியிலும், விலைவாசியிலும் போட்டி போட்டு தங்கள் தொழில்களை விளக்கமாகச்செய்ய இயலாமலே இன்றும் இருந்துவருகின்றனர்.

இந்த பரிதாபகரமான நிலைமையை முதன்முதலாவதாக நமது இந்தியன் நாஷனல் காங்கிரஸ் மகாசபை 1887-ம் வருடம் சென்னையில் கூடிய மூன்றாவது கூட்டத்தில் மிகக் கவனம் செலுத்தி கவர்ன்மெண்டாரின் ஒத்தாசையைக் கேட்டது. பின்னர் 1888-ம் வருடம் அலகாபாத்தில் கூடிய 4-வது காங்கிரஸில் தொடர்ந்து சில தீர்மானங்கள் இந்திய கைத்தொழிலபிவிருத்தி சம்பந்தமாகச் செய்யப்பட்டன. பின்

னர் கூடிய காங்கிரஸ் மகாசபைகளில் கைத்தொழிலல்லாத ஏனைய அரசாங்கப் பிரச்னைகளே பிரதிவாதிக்கப்பட்டு கைத்தொழில் பிரச்னைகள் முற்றிலும் மறந்து கைவிடப்பட்டன.

என்றாலும், வங்காளப் பிரிவினையால் நேர்ந்த தொழிற்புரட்சியாலும், பின்னர் நேரிட்ட உலக யுத்த காரணமாகவும், இந்தியாவில் கைத்தொழிலபிவிருத்தியென்னும் பேச்சே எங்கும் முழங்கிற்று. சுதேசியம் தலையெடுத்ததாலும், தேசத் தலைவர்களால் வற்புறுத்தப் பட்டமையாலும் பல நூதன தொழில்கள் தோன்றின. சில பழைய தொழில்கள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டன. தோன்றினும், உயிர்ப்பிக்கப்பட்டும் என்? அரசாங்க ஆதரவு இல்லாமையால் மீண்டும் இத்தொழில்கள் உறக்கங்கொள்ளலாயின. மூலதனம் இல்லாமையாலும், அந்நியநாட்டு இறக்குமதிக்கு அரசாங்க ஆதரவு இருந்துவருவதாலும், சிறிது மூலதனம் கொடுத்துதவும் முதலாளிகளின் கொடுமையாலும் தொழிலாளர்கள் மீண்டும் தங்கள் பழைய நிலைமையைச் சென்றடைந்து விட்டனரென்பது மிகையாகமாட்டாது. இன்று நமது நாட்டுத் தொழிலாளர்களின் நிலைமை மிக்க பரிதாபகரமானதென்பது மிக வெளிப்படை.

இவ்வித துர்ப்பாக்கிய நிலைமையை வருந்திநோக்கிய இந்திய சட்டசபை பிரதிநிதிகளில் சிலர் 1916-ம் வருடத்தில் இந்திய கவர்ன்மெண்டாரை இந்தியக் கைத்தொழிலபிவிருத்தி சம்பந்தமாக திட்டமான உதவி புரியவேண்டுமென்றும், இயந்திரப் போட்டியால் சீரழிந்த குடிசைத் தொழில்களையும், சித்திர சம்பந்தத்தாலாகிய அற்புதத் தொழில்களையும் உயிர்ப்பித்துத் தரவேண்டுமென்றும் போராடியதின் பயனாக, இந்தியக் கைத்தொழில் கமிஷன் ஒன்று 1917ஆ அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டது. அக்கமிஷனில் ஆங்கிலேய, இந்திய அங்கத்தினர்கள் பலர் நியமிக்கப்பட்டனர். இக்கமிஷன் இந்தியாவிலுள்ள எல்லா பிரதான நகரங்களுக்கும் சென்று, கைத்தொழில் நிபுணர்களை அழைத்து, நாட்டுத்தொழிலபிவிருத்திக்கான யோசனைகளையும், திட்டங்களையும் அவர்களிடமிருந்து எழுத்து மூலமாகவும், வாக்கு மூலமாகவும் பெற்றனர். அக்கமிஷன் சென்னைக்கு வந்திருந்தபோது விஸ்வகர்ம கைத்தொழிலாளர்களின் சார்பாக, இதன் ஆசிரியரையும், ஸ்ரீமான் என். துரைவேலாச்சாரியாரையும் அழைத்து விஸ்வகர்ம சமூகத்தினரின் குறைகளை 1917ஆ ஜனவரி மாதம் 30உ சென்னை சட்டசபை மண்டபத்தில் விசாரித்தனர். அச்சமயம் விஸ்வகர்ம சந்ததியின்

ஐந்து பிரிவினை கொண்ட மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ ரெனும் கொல்லர், தச்சர், கன்னர், சில்பி, தட்டார் முதலியோர் களின் தற்காலதொழில் நிலைமையும், அவைகளை நவீன நாகரீகத்தை யொட்டி எப்படி உயிர்ப்பிக்கலாமெனும் வழிவகைகளும் வெகு விமரி சையாக எடுத்துக் காட்டப்பட்டன. இக்கமிஷன் மூலமாக நமது நாட்டுக் கைத்தொழில்களனைத்தும் சீர்படுமென்று நம் நாட் டார் மிக நம்பியிருந்தது ஒருபுறமிருக்க, விஸ்வகர்மர்களின் பாரம் பரியத்தொழில்கள் தழைத்தோங்கி, பல நூதனத்தொழில்களும் தலை யெடுக்குமென்றும், அதன் காரணமாக நமது நாட்டுச் சார்புத் தொழில்களான விவசாயம், நெசவு முதலியவைகளும் அபிவிருத்தி யடையுமென்றும் கொண்டிருந்த பொதுமக்களின் ஆவலான முழு நம்பிக்கை வெறும் கானலின் நீராகவே முடிந்தது.

1919-ம் வருடத்தில் இந்தியக் கைத்தொழில் கமிஷனின் விசாரணை வேலைகள் முடிவடைந்து அவர்களால் செய்யப்பட்ட சிபார்சுகளின் பெரும்பாகம் இந்தியா மந்திரியால் ஒப்புக்கொள் ளப்பட்டு, மாகாண கவர்ன்மெண்டாருக்கும் பல உத்திரவுகள் விடுக்கப்பட்டன. இந்திய கைத்தொழில்களின் அற்புதங்களை யும், இந்திய தொழிலாளர்களின் சாமர்த்தியத்தையும், வான ளாவி இந்த கமிஷன் ரிப்போர்ட்டில் எழுதப்பட்டிருக்கின் றன. நமது தேசாபிமானப் பெரியோராகிய பண்டித மதன் மோகன மாளவியா அவர்கள் தமக்கு இயற்கையான அநு தாபப் பெருக்கைக் காட்டி ஓர் தனி ரிப்போர்ட்டும் எழுதியுள்ளார். கமிஷனின் ரிப்போர்ட்டில் கண்டுள்ள சிபார்சுகளின் அடிப்படையான நோக்கங்கள் இரண்டாகும். நாட்டின் கைத்தொழிலபிவிருத்தியில் இந்தியா கவர்ன்மெண்டார் இனி அதிக கவனம் செலுத்தி உருப்படி யான வேலைகளைச் செய்யவேண்டுமென்பது ஒன்று. இரண்டாவதாக, அதற்கு வேண்டிய சிப்பந்திகளையும், ரசாயன சாஸ்திர ஞான முடையவர்களையும், தொழில் நிபுணர்களையும் தேடிப்பிடித்து உத்தி யோகத்திலமர்த்த வேண்டுமென்பதே. இந்த இரண்டு கருத்துக் களையும் உடனே தழுவி நடப்பதற்குச் சென்னை மாகாண கவர்ன் மெண்டாருக்கு தக்க வசதிகள் இருந்தன. கமிஷன் ஏற்படாத முன் னரே சென்னையில் கைத்தொழில் அபிவிருத்தி இலாக்கா ஒன்று மாகாண சர்க்காரால் ஸ்தாபிக்கப்பெற்று நாட்டுக்கு உபயோகமான சில வேலைகளைச் செய்துகொண்டிருந்தது. முக்கியமாக அலுமினியத் தொழிலையும், கைத்தறி நெசவையும், குரோம் தோல் பதனிடும்

தொழிலேயும், சோப் செய்யும் தொழிலேயும், பென்சில் செய்யும் தொழிலேயும், எண்ணே இறக்கும் தொழிலேயும் இங்கு முக்கியமாகக் குறிப்பிடலாம். எனவே, இவ்வித பரிபக்குவ நிலேயிலிருந்த சென்னே துரைத்தனத்தார் 1923ஆ "கைத் தொழில்களுக்கு அரசாங்க ஆதரவு" என்னும் ஆக்டை ஏற்படுத்திஞர்கள். இதன் நோக்கம் கைத்தொழிலபிவிருத்திக்கான சில குறிப்பிட்ட கைத் தொழில்களுக்கு அரசாங்கத்தார் பண உதவி செய்யவேண்டுமென் பதே. கிராமக் கைத்தொழில் புனருத்தாரண முயற்சிகளும் இந்த ஆக்டின் கீழ் அடங்கும். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் காங்கிரஸ் கவர்ன்மெண்டார் இந்த ஆக்டை சிறிது திருத்தம் செய்து 1937ஆ அக்டோபர் மாதத்தில் மீளவும் வெளியிட்டிருக்கின்ருர்கள். இந்த திருத்தங்களால் இந்தியத் தொழிலாளர்களும், தொழில் முறைகளும் அரசாங்க உதவியை மிகுதியாகப் பெற இயலுமென எங்கும் கருதப்படுகின்றது. எனவே, நம் நாட்டுப் பூர்வீகக் கைத் தொழிலாளர்களும், பிரதமக் கைத்தொழில் வல்லோரான விஸ்வகர்ம சந்ததியாரும் இனியும் உதாசீன உறக்கம் கொள்ளாமல் இந்த அரிய சந்தர்ப்பத்தை முன்னிட்டு, தங்கள் தொழில்களே சிறக்கச் செய்ய முற்படுவதுடன், வியாபார முறையில் தங்கள் தொழில்களேப் பெருக்கி முன்னேற முயற்சிப்பது மிக அத்தியாவஸ்யமாகும்.

இரண்டாம் அத்தியாயம்.

கைத்தொழில் அபிவிருத்தியைப்பற்றிய சில அபிப்பிராயங்கள்.

நம் நாட்டுக் கைத்தொழிலபிருத்தி யென்னும் பேச்சு சென்னே மாகாணத்தில் சென்ற 32-வருடங்களாக செவிடுபட முழங்கினும், உண்மையான தொழிலபிவிருத்தியடையாததற்குக் காரணம் பல உண்டு. அவைகளுள் பண முடை, தப்பிதமான நோக்கம் ஆகிய இரண்டும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவைகளாகும்.

யுத்த நெருக்கடியால் எங்கும் பணமுடையும், பொருளாதார மந்தமும் பல வருடம் நிறைந்திருந்தது. இந்த நிலேமையில் அரசாங்

கத்தார் பொக்கிஷமும் மிகக் குறைந்திருந்தது. எனவே, பணமுடையால் இதுவரையில் கைத்தொழிலபிவிருத்திக்கு அரசாங்கத்தார் உதவிசெய்யக்கூடவில்லை யெனும் காரணம் ஒரு வகையில் ஒப்புக் கொள்ளப்பட வேண்டியதாயிற்று. எனினும், மற்றொரு காரணமாகிய தப்பிதமான நோக்கமும், அபிப்பிராயமும் நமது பிந்திய உண்மை அநுபவத்தை யொட்டி, திருத்திக்கொள்ளப்படவேண்டியவைகளாக யிருக்கின்றன. இந்தியாவானது விவசாய தேசமென்றும், கைத்தொழில் தேசமல்லவென்றும், விவசாயவேலைகள் ஒழிந்த காலங்களிலும், அறுவடைமுடிந்தபின்னும், வேலையற்று விருதாவாகக் காலங்கழிக்கும் நம்நாட்டாருக்கு அதாவது, விவசாயிகளுக்கு பயன் படக்கூடிய வழியில் நமது தேசக் கைத்தொழில்களைச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றும் இந்தியா கவர்ன்மெண்டாராலும் மாகாண அரசாங்கத்தாராலும் கொண்டுள்ள கொள்கை மிகத் தவறுதலென இங்கு வற்புறுத்தவேண்டியிருக்கின்றது. இந்நாட்டில் விவசாயம் செய்யும் தனிப் பகுதியாரும், தொழில்களைச் செய்யும் தனிப் பகுதியாரும், பூர்வ காலந்தொடங்கியே இரண்டு பெரும் பிரிவினையாகயிருந்துவந்தனரென்றும், இன்றும் இருந்துவருகின்றன ரென்பதும் யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மையாகும். இந்நாட்டில் விவசாயம் ஒழிந்த காலத்து கைத்தொழில்களைச் செய்யும் விவசாயிகளைக் காணக் கிடைப்பது அருமை. எனவே, அவரவர்கள் தொழில்களுக்கேற்ப இப்பகுதியார்கள் சில சாதிப்பிரிவினைக் குள்ளானூர்கள். அவர்கள் மூலமாக நம் நாட்டுக் கைத்தொழில்கள் நாளும் நடைபெற்று வருகின்றன. நம் நாட்டில் கைத்தொழிலாளர்களை விவசாயத்தில் புகுத்துவதும், விவசாயிகளை கைத்தொழில்களில் பழக்குவதும் மிகக் கடின காரியமாகும். தற்காலம் விவசாயத்தில் ஈடுபடுவோர்களெல்லாம் கல்வியற்றவர்களும், சமூக அந்தஸ்தில் குறைவுபட்டவர்களும், தொழில் ஞானமற்றவர்களுமாகவே எங்கும் இருந்துவருகின்றனர். தொழிலாளர்களில் பெரும்பாலோர் கல்வியிலும், தொழில் ஞானத்திலும், சாஸ்திரப் பயிற்சியிலும், மனோதர்மத்திலும், கற்பனு சாமர்த்தியத்திலும் தேர்ச்சி பெற்று விளங்கினூர்களென்பதற்கும், ஆங்காங்கு விளங்கி வருகின்றூர்களென்பதற்கும், நம் நாட்டு ஆலய, நகர நிர்மாணங்களும், தொழிலாளர்களின் கைத்திறனுலாகிய பற்பல அற்புத வேலைகளுமே தக்க சான்று பகரும். இத்தகைய வேலைகளை, விவசாய காலமொழிந்த மற்றயக்காலங்களில் வேலையற்றிருக்கும் விவசாயிகளைக்கொண்டு

உயிர்ப்பிக்கலாமென அரசாங்க வகுப்பினர் கொண்டுள்ள அபிப்பிராயம், சுருங்கச்சொல்லில் மிகத் தவறுதலெனவும், விரைவில் திருத்திக்கொள்ளப்படவேண்டுமெனவும் இங்கு வற்புறுத்துவது மிக அவசியமாகும்.

இதற்குப் பற்பல உதாரணங்களை எடுத்துக்காட்டுவானேன்? நம் நாட்டுக் கைத்தறி நெசவை எடுத்துக்கொள்வோம். இத்தொழிலை பல சாதியினர் பூர்வ காலந்தொடங்கியே உரிமையாகச் செய்துவருகின்றனர். சௌராஷ்டிரர்கள், செங்குந்தர், தேவாங்கர், பத்மசாலிகள் முதலியோர் சாதி வழக்க ஒழுக்கங்களில் மிக வித்தியாசப்பட்டிருந்தாலும், அவர்கள் தொழில் முறைகளில் மிக ஒற்றுமையாகவே யிருந்து வருகின்றார்கள். மெல்லிய நூல்களினின்று செய்யும் வஸ்திரங்களை உற்பத்தி செய்வோரும், புடவைகளை நெய்வோரும், லுங்கி முதலியவைகளைச் செய்வோரும் அவர்களுள் பல தொழிற் பிரிவினை கொண்டவர்களாகயிருந்து வருகின்றார்கள். இவர்கள் இவ்வித அளவற்ற தொழிற் பழக்கம் பெற்றிருந்தும் ஒரு பகுதியார் மற்றொரு பகுதியாரின் தொழிலைச்செய்யும் ஆற்றலுடையவர்களல்லர்; அப்படிச் செய்ய ஆசிப்பவர்களுமல்லர்.

இவ்வித உண்மைகளை இந்திய கவர்ன்மெண்டாரும், மாகாண அரசாங்கத்தாரும், உணர்ந்து பூர்வீக நெசவாளிகளைக் கொண்டே கைத்தறி நெசவை விருத்திசெய்ய வேண்டுமென்றும், வேலையொழிந்த விவசாயிகளைக்கொண்டு விருத்திசெய்ய இயலாதெனவும் இப்பொழுது கண்கூடாக்கண்டு அவர்களுக்கு அரசாங்கப் பொருளுதவியும், ஐக்கிய நாணயச் சங்க உதவியும், தீர்ந்த சரக்குகளை விற்பனைசெய்ய (மார்க்கெட்டிங்) விற்பனை ஆபீஸர்களையும், மத்திய விற்பனை ஸ்தலங்களையும், இப்பொழுது ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றனர். இவ்வருடம் அக்டோபர் மாதம் முடிவுபெற்ற சட்டசபையில் மாகாண அரசாங்கத்தாரும் காங்கிரஸ் ஆட்சியின் சிபார்சைத் தழுவி ஒரு லட்சம் ரூபாயை கைத்தறி நெசவின் அபிவிருத்திக்காகச் செலவிடுவதென ஒதுக்கிவைத்திருக்கின்றனர். அந்நிய நாட்டுத்துணிமணிகளை விற்பவர்களுக்கும் தீர்வை ஏற்படுத்தியிருக்கின்றனர். இந்தியாவில் சாதிபேதம் ஒழிந்து, இந்தியர் ஒரே சமூகத்தாராக அரசியல் விவகாரங்களில் விளங்கவேண்டுமென்கிற கொள்கையுடையவராகயிருந்தும், கைத்தொழிலபிவிருத்தி சம்பந்தத்தில் காங்கிரஸ் வாதிகள், அந்தந்த சாதியரைக்கொண்டே அந்தந்த தொழில்களை அபிவிருத்தி

செய்வது முறையென்னும் உண்மையை உணர்ந்துகொண்டு அதற்கேற்ப நடந்துகொண்டிருக்கிறார்களென்பதற்கு இதனினும் தக்க சான்று வேறு வேண்டுவதில்லை. எனவே, மேற்குறித்த நெசவுத்தொழில்களுக்கும், அத்தொழில் பிரிவினைகளுக்குமான பல்வேறுபட்ட விசைத்தறிகளையும், நூதன சுழற்றறிகளையும், பொந்து கரை முதலிய வேலைபாடுகளை சுலபத்தில் செய்யக்கூடிய கருவிகளையும், சிக்கறுக்கும் இயந்திரங்களையும், கஞ்சி கோர்க்கும் இயந்திரங்களையும், மடியாக முடுக்கும் அச்சுக்களையும், கைராட்டினங்களையும், மனித உழைப்பைக் குறைக்கக்கூடிய மற்றய நெசவுக் கருவிகளையும், விசித்திர பூம்பட்டாடைகளுக்கு வேண்டிய நாநாவித வர்ணந்தீட்டிய சித்திரங்களைச்செய்யும் துளைக்கருவிகளையும் அபிவிருத்தி செய்தலும், பூர்வீக நாட்டுத்தொழிலாளர்க்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து, நூதன நெசவுக்கருவிகளைச் சிருஷ்டிக்க முயலச்செய்து நாட்டுக் கைத்தறி நெசவை அபிவிருத்தி செய்தலே நல்ல பலனளிக்கும் முறையாகும். இதைப்போலவே, நாட்டின் க்ஷேமைஸ்வரியத்திற்கு அடிப்படையான விவசாயத் தொழிலுக்கு வேண்டிய, முள், உழுபடை, மண்வெட்டி, கதிரறுக்கும் இயந்திரம் முதலிய கருவிகளையும் தேசாச்சாரத்திற்கும், தேவைக்கும் தக்கவாறு சீர்படுத்திக்கொள்வதும், நூதன கருவிகளை உண்டுசெய்து கொள்வதும், மிக்க வேண்டற்பாலதாகும். மேல்நாட்டாரின் குதிரை கட்டிய ஏர்களும், மின்சார உழவுக்கருவிகளும், நீராவி இயந்திரங்களும் நம் நாட்டின் விவசாயத்திற்கு ஏற்றவைகளல்லவென்னும் உண்மையைக் கண்டுகொண்டபின்னரும், நமது நாட்டின் தேவைக்குரிய முறையில் நமது விவசாயக் கருவிகளைச் செய்ய முயலுதலும், அவைகளுக்கான அரசாங்க உதவிகளை நமது நாட்டின் பிரதமக் கைத்தொழிலாளரான விஸ்வகர்ம இரும்புத்தொழிலாளருக்கு செய்து கொடுப்பதால், விவசாயமட்டுமேயல்ல, நாட்டு நெய்தற்தொழிலும், ஏனைய சார்புத்தொழில்களும் அபிவிருத்தியடையுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெற்றென விளங்குகின்றதன்றோ?

விவசாயத்திற்கு மிக அடிப்படையான—ஜீவாதாரமாயுள்ள நீர்ப்பாசனக் கருவிகளும், கிணறு தோண்டும் ஆயுதங்களும், இயந்திரங்களும், அத்தொழிலைச் சுலபப்படுத்தும் ஏனைய கருவிகளும் இந்நாட்டிற்கு மிக அவசியமாக யிருக்கின்றன. குதிரை கட்டியடிக்கும் கவலைகளும், மின்சாரப் பம்புகளும், நீராவி சுழற்பம்புகளும், பெரிய நீர்ப்பாசனங்களுக்கும், விளைநிலங்களுக்கேற்றவைகளாயினும்

சுவற்ப விஸ்தீரணங்களுக்கேற்ற பாசனக் கருவிகளை விருத்தி செய்துகொள்வதும், இவைகளுக்காக அந்நிய நாட்டார் உற்பத்திப் பொருள்களை எதிர்பாராமல், நம் நாட்டிலே நமது கம்மியர்களைக் கொண்டு அபிவிருத்தி செய்துகொள்வதும், அதற்கான உதவிகளை அரசாங்கத்தார் புரிவதும் முற்றிலும் முறையாகும்.

இவைமட்டோ. கைக்குத்து அரிசியின் ஆவசியகம் வற்புறுத்தப் படும் இக்காலத்து, பழைய வழக்கத்தையொட்டி மர உரல்களில் உலக்கைகொண்டு கடின மானிட உழைப்பால் அரிசி உற்பத்தி செய்வதை விடுத்து, மர இயந்திரங்களையும், சுழல் சக்கரங்களைக்கொண்டும் சுலபத்திலும் ஏராளமாகவும் உற்பத்தி செய்யும் வழி வகைகளும் விரைவில் ஆராய வேண்டியவைகளாக இருக்கின்றன. அரிசியினின்றும் உமியைப் பிரித்தல், தவிடு நீக்குதல், தீட்டுதல் முதலியவைகளை சுகாதார முறையைத் தழுவி செய்யக்கூடிய சிறிய இயந்திரங்களும், மாவரைக்கும் இயந்திரங்களும் விவசாயிகளின் சகாயத்திற்கும், இலாபத்திற்கும் நமது நாட்டுக் கம்மியரால் நூதன வழியில் கண்டு பிடிக்கவேண்டியவைகளாக இருக்கின்றன. நாட்டுப் பூர்வீகத் தொழிலான வெல்லம் காய்ச்சுதல், சர்க்கரை செய்தல் முதலிய இலாப கரமான தொழில்களுக்கு இன்றியமையாத கரும்பாலைகளையும், செம்புத்தொட்டிகளையும், அச்சுகளையும் சீர்திருத்தம் செய்யவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கின்றது. விவசாய உற்பத்திச் சாமான்களில் ஒரு பகுதியாகிய கனிவர்க்கங்களின் ரசங்களையும், புஷ்பங்களின் தைலச் சத்துக்களையும் இறக்குவதற்கான வாலைகளையும், குப்பிகளையும், செய்யும் மர்மங்களையும் நமது உலோகத் தொழிலாளர் உணரவேண்டுவது அத்தியாவஸ்யமாகும். சோற்றுப் பற்றுள்ள மரங்களினின்றும், மூங்கில், இலவமரம் முதலிய இலேசான மரங்களினின்றும் காகிதம் செய்யும் தொழிலுக்குவேண்டிய சிறு இயந்திரங்களும், சுழல் மூள் தொட்டிகளும், உருளைகளும், திகிரிச் சக்கரங்களும், கம்பிச் சட்டங்களும் இன்னும் அழுத்துவதற்கான மர மறையாணி இயந்திரங்களும் கண்டுபிடிக்கப்படுவதும், அந்நிய நாட்டு இயந்திரங்களை ஆசிக்காமல் உள்நாட்டிலேயே செய்யப்படுவதும் அவசியமல்லவென யார்தான் துணிந்து கூறக்கூடும்? இன்னும் மலைப் பிரதேசங்களில் உற்பத்தியாகும் காப்பிக்கொட்டை முதலியவைகளை, வறுத்தல், பொடித்தல், வடித்தலாகிய குடும்பக் காரியங்களுக்கு உபயோகமான சிறு நூதன இயந்திரங்களையும் வியாபார நிமித்தம் உள்நாட்டிலேயே செய்தலும் அவசியமாகும்.

எனவே, மேற்கூறியவற்ருல், இப்பொழுது கிராமக் கைத்தொழில் புனருத்தாரண நிமித்தமாக செய்யப்படவிருக்கும் கைதொழிற் புரட்சியில் விஸ்வகர்ம கைத்தொழிலாளர்கள் எவ்வித கடின உழைப்பையும், பொறுப்பையும் வகிக்கக் கடமைப்பட்டிருக்கிருர்களென்பதை உணர்ந்து பொது மக்களும், அரசாங்கத்தாரும் அத்தொழிலாளர் வழியே வேண்டிய தொழிலுபகாரம் பெற்று, நாட்டுக் கைத்தொழில் அபிவிருத்தியையும், இதர தொழிலாளர்களின் க்ஷேமைஸ்வரியத்தையும் உண்டுசெய்யும் மார்க்கங்களையும் கடைப்பிடிப்பார்களென பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மூன்ருவது அத்தியாயம்.

கதர் உற்பத்தியும், கைத்தறியும்.

நம் நாட்டிற்கோர் நற்குறியாக கதர் உற்பத்தி நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்து வருகின்றது. கதராடைகளையும், நாட்டுக் கைத்தறி நெசவையும் காங்கிரஸ் அரசாங்கத்தார் ஆதரிக்க முற்பட்டதிலிருந்து, கதராடை உற்பத்தி அதிகப்படவும், வெகு நாணயமான ஆடைகள் இனி நெய்யப்படவும் பல அநுகூலங்கள் உண்டாகலாம். தற்காலம், கதர்த்துணிகள் சில பகுதியர்களால் விரும்பப்படாதிருப்பதற்கும், வாங்கப்படாதிருப்பதற்கும் இருமுக்கிய காரணங்களுண்டு. ஒன்று கதர் துணிகள் நாணயமில்லாத முரட்டு வஸ்திரங்களாகவும், இலேசாக உடுக்கவும், தூக்கித் துவைக்கவும் கூடாதவைகளாகயிருப்பது. விலை அதிகமாகயிருப்பதும், அது காரணமாக கூலி ஜனங்களுக்கு அவைகள் கிட்டாதிருப்பதும் மற்ருெரு காரணமாகும். கதர் நூற்கள் கையினுல் கைராட்டினங்களின் உதவிகொண்டு மிகக்கடின உழைப்பினுலும், ஓய்வுகாலங்களில் மட்டுமே நூற்கப்பட வேண்டியவைகளா யிருப்பதாலும், தற்காலம் உயர் அந்தஸ்துடைய குடும்பங்களில் மட்டுமே கதர் நூற்கள் ஒழிந்த வேளைகளில் உற்பத்தி செய்யப்படுவதாலும், நூற்கள் நயமில்லாதிருப்பதற்கும், உற்பத்திச் சரக்குகள் நாட்டின் தேவைக்கும், மக்களின் விருப்பத்திற்கும் ஏற்றவாறு அதிகமாக உற்பத்தி செய்வதற்கும் கூடவில்லை. இந்நிலையில் கதர் துணிகளின் விலைவாசிகளைக் குறைத்தலும், அவைகளை ஏழை மக்களின் உபயோ

கத்திற்கு ஏராளமாகக் கொடுத்துதவுவதும் கடினமாகின்றது. பணக்காரர் முதல் கூலிவர்க்கத்தினராகிய பரம ஏழைகளின் இல்லங்களில் பலதரப்பட்ட கதர் நூற்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றனவென வைத்துக்கொண்டாலும், அவைகளைத் தறியிலிட்டு துணிகளாக நெய்வதற்கும், வேலைப்பாடான கரைகளையும், வர்ணந் தீட்டிய முத்திரைக் கரைகளைக் கட்டுவதற்கும், நாட்டுக் கைத்தறி நெசவாளர்களின் உதவியையும், சாயத் தொழிலாளர், அச்சடிக்காரர் சகாயத்தையும் கோரவேண்டி யிருக்கிறது. ஏனெனின், கைத்தொழிலுன்னதத்திற்கு பாரம்பரியக் கைப்பழக்கமும், தொழில் ஞானமும் இன்றியமையாதவைகளாகும். இவ்வுண்மையை கைத்தறி நெசவாளர் தமது தறிகளினிடையே வேலை செய்துகொண்டிருக்கும்போது ஊன்றி கவனித்தால் நன்கு புலப்படும். அறுந்த நூற்களை நாவினால் நிரடிச் சேர்ப்பதும், பாவுக்களுடன் ஓடியாடுவதும், ஒதுங்கும் நூற்களை மூங்கிற் குச்சிகளினால் இருந்த இடத்திலேயே இருந்து தட்டி வரிசைக் கிரமப்படுத்துவதும், குறுக்கிழைகளாலமையும் கட்டங்களையும், வீடுகளையும், அளவுகோலின் உதவியின்றி கண் நிதானத்தாலும், கையோட்டத்தாலும் ஒழுங்குப் படுத்தும் அழகும் பாரம்பரிய நெசவாளர்களின் சொந்த—அந்நியர்களால் இலேசில் ஆக்கிரமிக்கப் படக்கூடாத தொழில் கைவரிஞ்சகளாகும்.

எனவே, இந்நாட்டின் கதராடை உற்பத்திச் சரக்குகள் காலக் கிரமத்தில் கைத்தறி நெசவினுள்ளடங்கும் என்பதிற்கையமில்லை. இப்பொழுதிருக்கும் கதரின் மயக்கமும், மோகமும் படித்த, செல்வமுள்ள மக்களிடத்தும் காணக்கூடாத ஓர் காலமும் ஏற்படும். கும்பி கூழுக்கழும் ஏழை வர்க்கத்தினர் கைராட்டினங்களின் உதவி கொண்டு கதர் நூற்களை ஏராளமாக நூற்கும் காலமும் அவைகளை கைத்தறி நெசவாளர்க்கு முடைப்படாமல் வேலைக்கு கொடுத்துதவும் காலமும் விரைவில் உண்டாகும். இதனாலும், இப்பொழுது அரசாங்கத்தாரால் செய்யப்படவிருக்கும் பண உதவியாலும், கைத்தறி நெசவுக்கும், கைத்தறி நெசவாளராகிய பாரம்பரிய நெய்தற் தொழிலாளர்களுக்கும் ஒரு நூதன சகாப்தம் தானாகவே தோன்றும். இதனோடே கதர் உற்பத்தி ஆடைகள் வெகு நாணயமாகவும், மக்கள் தேவைக்கும், உபயோகத்திற்கும், வியாபாரத்திற்கும், ஏற்ற முறையில் மாற்றி உண்டு செய்வதற்கும்இடங்கொடுக்கும்.

ஆயினும், இவைகளை எதிர் நோக்கி முற்கூட்டியே சில வழி வகைகளையும், தொழில் முறைகளையும் சீர்படுத்த வேண்டுவது அவ

சியமாகும். நாட்டுக் கதர் நூல் உற்பத்தியை, உண்டு செய்வோர் எண்ணிக்கை குறைந்தாலும், அதனை ஈடுபடுத்திக் கொள்ளும் வழிகளை முதலில் தேடிக் கொள்வது முறையாகும். 35 கோடி இந்திய மக்களும், நாள் தவருது கதர்நூல் நூற்பார்களென்னும் எண்ணம் மிக்க தவறுதலுடையதென்பதை யாவரே உணரார்? எனவே, இப்பொழுது வேலையற்றுத் திரிபவர்களையும், மதுவிலக்குப் பூட்டினுல் வேலையற்றிருப்பவர்களையும், இனி வேலை யொழியும் மக்களையும் நாட்டுத் தொழிலாளச் சிறுவர்களையும், ஸ்திரீகளையும் கொண்டு அநேக படித்தரமான கதர் நூற்களை வியாபாரநோக்கத்துடன் உற்பத்தி செய்வித்தல், காலங்கருதி மிக்க அத்தியாவஸ்யமாகும். கதர் நூல் உற்பத்தியில் பொது மக்களுக்கு உருசியும், அக்கரையும் உண்டுசெய்ய வேண்டுமாளுல், நூற்கும் தேகசிரமத்தைக் குறைத்து, உற்பத்தியை அதிகப்படுத்துதல் அதாவது, நூற்பதில் சில தந்திரோபாயங்களையும், நூதன முறைகளையும் அநுஷ்டிப்பதால், உற்பத்தியை பதின்மடங்கு அதிகப்படுத்தும் வழி வகைகளையும் ஆராய்தல் வேண்டும். வெறுங் கைராட்டின உற்பத்திச் சரக்குகளைக்கொண்டே, கைத்தறி நெசவுக்கான நூற்களை தொடர்ந்து கொடுக்க வியலாதென்பதையும், எத்துணை அரசாங்கப்பொருள் சகாயம் கொடுப்பினும் நாட்டுக் கைத்தறிகளனைத்திற்கும் ஓர் முழுநாள் வேலை கொடுக்க முடியாதென்பதையும் இங்கு வற்புறுத்திக் கூறுகின்ருேம்.

எனவே, இப்பொழுதிருந்துவரும் கைராட்டினங்களில் சில மாறுதல்களையும், நூற்கும் வழியில் சில நூதன முறைகளையும் காலவியல்பிற்கேற்ப புகுத்துவது அவசியமாகும். சென்னையில் ஓர் விஸ்வகர்ம யாந்திரீகர் சில வருடங்களுக்கு முன் ஓர் கதர் நூற்கும் இலேசான மர இயந்திரத்தை கண்டுபிடித்திருந்தனர். இதில் ஒரு புறத்தில் பஞ்சை புகுத்தி மற்ளுரு புறத்தில் பல வரிசைப்பட்ட நூற்கள் உண்டையில் தாளுகவே சுற்றிக்கொள்ளும் இயல்புடையதாகவும் அதை அமைத்திருந்தனர். அக்காலத்தில் கதர் நூற்கும் வேலை வெறும் கையினுல் செய்யப்படவேண்டுமென்கிற நிபந்தனை ஏற்பட்டிருந்ததாலும், கதர் மயக்கம் வெகு உச்சியிலிருந்தபடியாலும் இவ்வியந்திரத்தை பொதுமக்கள் ஆதரிக்க முடியாமற்போயிற்று. கதர் ஆடை உற்பத்தியும், கைத்தறி நெசவும் நம் நாட்டில் எங்கணுமே பரவி உன்னதம் பெறவேண்டுமாளுல், இவ்வித நூதன கருவிகளை சிருஷ்டிக்கவும், அவ்விதமாகச் சிருஷ்டித்துக் கொடுக்கும் ஆற்றலுடைய பாரம்பரியக் கைத்தொழிலாளர்களாகிய விஸ்வகர்ம தச்சர்,

கொல்லர் முதலியோருக்கு அரசாங்க ஆதரவும், மாதிரித் தொழிற் பண்ணைகளை பஞ்சு ஏராளமாக உற்பத்தியாகும் ஸ்தலங்களில் நிறுவுவதும் இன்றியமையாத வெகு முக்கிய காரியங்களாகும்.

நிற்க, கைத்தறி நெசவு சம்பந்தமாகவும் பல நூதன இயந்திரங்களையும், வேலையை துரிதப்படுத்தும்வழிவகைகளையும் கைத்தறி நெசவுட்புகுத்துவதும் மிகஅவசியமாகும். கவர்ன்மெண்டு டெக்ஸ்டைல், அல்லது நெசவு சம்பந்தமான பாடசாலைத்தலைவராகிய ஸ்ரீ அமல்சாத் என்னும் நிபுணர் பல நூதன கைத்தறிகளையும், கஞ்சிபோடும் தறிகளையும், கரைகளை சித்தரிக்கும் தறிகளையும் கண்டுபிடித்து வியாபார நோக்கமாகவும், பிறர் பின்பற்றும் எண்ணங்கொண்டும் செய்திருக்கின்றனர். இவ்வித தறிகளின் வேலை நுட்பங்களை கவனமாக ஆராயும்போது அவைகளின் பூட்டுப் பிரிப்பினை வெகு கடினமானதென்றும், கிராமத் தச்சர், கொல்லர்களால் சுலபத்தில் செப்பனிடக் கூடியவைகளல்லவென்றும் புலப்படுகின்றது. தண்டவாள பற்சக்கிரங்களும், எஃகு வில்லும், லீவர்களும் கொண்ட கைத்தறிகள் நமது நாட்டு கைத்தறி நெசவாளரின் தேவைகளுக்கும், தொழில் முறைகளுக்கும், பழக்கத்திற்கும் ஏற்றவைகளாக மாட்டா. ஆகையின் இவ்வித கைத்தறிகள் நமது நாட்டு பூர்வக் கைத்தறிகளையொத்துமரத்தினும், அடியிரும்பாலும் செய்யப்பட்டு சிற்சில நூதன முறைகளுடன் மட்டுமே அமைக்கப்படல் வேண்டும். இதற்கு நமது நாட்டுக் கம்மியரும், கைத்தறி நெசவாளர்களும் ஒருமித்து தங்கள் யுக்தியைச் செலுத்தி நூதன தறிகளை, சீர்திருத்தியமைத்தலும் மிக அவசியமாகும். அதற்கானபொருளுதவியை அரசாங்கத்தார் அளித்தலும், இவ்வித வேலைக்காரர்களை அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு அடிமைப்படுத்தாதிருத்தலும் வேண்டும். இவ்வித ஒரு ஸ்தாபனத்தை ஐக்கிய தொழில் சங்க மூலமாக சென்னையில் பரீக்ஷார்த்தமாக விரைவில் ஸ்தாபித்தால் கதர் உற்பத்திக்கும், கைத்தறி நெசவுக்கும் கவர்ன்மெண்டார் பேருதவி செய்தவர்களாவர். இன்றேல், கதர் உற்பத்தி காலக்கிரமத்தில் குறைவதும், கைத்தறி நெசவு, அரசாங்கத்தார் எண்ணத்திற்கு முற்றும் மாறாக, தலைதூக்காதொழிவதும், மில் துணிகள் மிக்க உச்சம் பெறுவதும் மிக நிச்சயமென்றே உறுதி கூறலாம்.

நான்காவது அத்தியாயம்.

நமது குடிசைத் தொழில்கள்.

தற்காலம் நமது அரசாங்கத்தார் கையிலும், நமது பொதுமக்களின் கருத்திலும் "குடிசைத்தொழில்கள்" என்னும் பதம் வெகுபாடு படுகின்றது. இந்திய கைத்தொழில் கமிஷன் ரிப்போர்ட்டின் 206 பாராவில், உள்நாட்டின் தேவைக்கானவும், உள் வீட்டிலேயே செய்யக்கூடிய சிறிய தொழில்களென "குடிசைத் தொழில்கள்" வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வித உற்பத்திச் சரக்குகள் உற்பத்தி ஸ்தலங்களுக்கு புறம்பாகவும், வேறுவெளி ஸ்தலங்களுக்கும் வியாபார நோக்கமாகவும் அனுப்பப்படுவதால், இப்பதம் முற்றிலும் பொருந்தாதெனக் கருதிச் சென்னை மாகாண கவர்ன்மெண்டார் வேறு வியாக்கியானம் கொடுத்தார்கள். அதாவது குடிசைத் தொழிலென்றால், தொழிற்சாலைகளில் செய்யப்படுவதற்கு நேர் மாறாகத் தொழிலாளர்களின் வீடுகளில் செய்யப்படும் கைத்தொழில்களென்று பெயரிட்டனர். இப்பதமே சென்னை கவர்ன்மெண்டார் கைத்தொழில் உதவி ஆக்டின் கீழ் ஏற்பட்டிருக்கும் கைத்தொழில் போர்டாராலும், இவ்வருடம் அக்டோபர் மாதம் காங்கிரஸ் அரசாட்சியில் திருத்தியமைக்கப்பட்ட கைத் தொழிலுதவி ஆக்டாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இப்பதத்தை விளக்கிக் கூறினால், அஃது கைத்தொழிலாளர்களின் முழு நன்மைக்காகவே—அவர்கள் வீட்டிலேயே அவர்களால் செய்யப்படும் தொழில்களெனவும், மத்திய தரகிரிகளின் நன்மைக்காகவும், பெரிய தொழிற்சாலைகளில் செய்யப்படும் தொழில்கள் அல்லவெனவும் ஏற்படும். இந்த நிபந்தனையை எழுத்தெண்ணி ஆக்டின் பிரகாரம் பிரயோகித்தால், தற்காலம் நடைபெற்றுவரும் பல குடிசைத் தொழில்களுக்கு சர்க்கார் பண உதவி செய்வது அச் சட்டத்திற்குப் புறம்பான காரியமாகலாம். இதனை உத்தேசித்து சட்டசபையில் இந்த ஆக்ட் இவ்வருடம் திருத்தியமைக்கப்பட்டபோது சில ஆட்சேபங்கள் கிளம்பின. ஆயினும் எல்லாக் குடிசைத்தொழில்களுக்கும், கிரமமறிந்து யுக்தா யுக்தம்போல் பொருளுதவி செய்யப்படுமென காங்கிரஸ் ஆட்சியால் உறுதி கூறப்பட்டது. எனவே, நம்நாட்டுக் குடி

சைத் தொழில்கள் சீர்பெருவதற்கும், சர்க்கார் பண உதவியைப் பெறுவதற்கும் இதுவே தக்க சமயமாகும்.

பூர்வகாலத்தில் ஒவ்வொரு கிராமமும் தனிப்பட்ட ஓர் ஸ்தலமாகவும், அக்கிராமக் கைத்தொழிலாளர்கள் அக்கிராமப் பயிர்தொழிற் தேவைகளுக்குமட்டுமே உபயோகப் படுத்தப்பட்டும், மகசூல் காலங்களில் தங்கள் கூலிக்கான பங்குகளைப் பெற்றும் வந்தனர். அந்தந்த கிராமங்களின் தேவைக்குவேண்டிய வஸ்துக்களின் அளவு அதிகப்பட்டாலும், வேறு இடங்களிலிருந்து தருவிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் அவைகளை சுலபத்தில் பெறக்கூடிய வசதிகள் இப்போதிருப்பதுபோல் அக்காலத்தில் இல்லை. ஆகவே, தங்கள் வேலைகளுக்கும், உற்பத்திச் சரக்குகளுக்கும் தேவையற்றுக் கிடந்த கிராமத் தொழிலாளர்கள் காலக்கிரமத்தில் பெரிய பட்டிணங்களுக்கும், ஊர்களுக்கும் சென்று குடியேறலானார்கள். மதுரை, தஞ்சாவூர், கும்பகோணம், சேலம், கோயமுத்தூர், காஞ்சீபுரம், முதலிய பெரிய கைத்தொழிற் பட்டிணங்களில் பலவிதத் தொழிலாளர்கள் நிரம்பியிருப்பதற்கு இதுவே முக்கிய காரணமாகும். இதன்மூலமாகவே பெரிய நகரங்களில் தொழிலபிவிருத்தி ஒருவாறு அதிகமாயிற்றெனலாம். ஆயினும் கிராமங்களிலோ, நல்ல தொழிலாளிகளில் பலர் வெளியேறிவிட, கிராமத் தொழில்களை அரைகுறையாகவே செய்யும் தொழிலாளர்களே கிராமங்களில் தங்குவாராயினர். வெளிநாடுகளில் தங்கள் தொழில்களை விரிவாகவும், வியாபார முறையிலும் செய்யப்படுவதை அறியாத கிராமத் தொழிலாளர்கள் தங்கள் தொழில் ஞானத்தை விருத்திசெய்துகொள்ளவும், வருடமுழுதும் தங்கள் தொழிலை ஓய்வின்றி நடத்தி வயிறு வளர்க்கவும் வகையற்று இன்றும் இருந்து வருகின்றனர். கிராம வாசிகளான மிராசுதார்களும், நிலச்சுவான்தாரர்களும், ஜமீன்தாரர்களும், பணமுடையற்ற பொதுமக்களும், தங்கள் தேவைக்கான பண்டங்களை பட்டிணங்களினின்றும் தருவித்தும், கொண்டுவந்தும் தங்கள் தேவைகளை தவிர்த்துக்கொள்ளலாயினர். நாட்டு நெசவுத்தொழிலுக்கான கருவிகளும், விவசாயத்திற்கான ஏர், படை, ஏற்றம் முதலிய கருவிகளும் பிறநாட்டிலிருந்து கிராம உபயோகத்திற்கு தருவிக்கப்பட்டன. இவைகள் கெட்டு, பழுதடையும் காலத்திலும் அவைகளைச் சீர்படுத்துவதற்கும், செப்பனிடுவதற்கும் அதிகப் பணச்செலவு செய்தாகிலும் பட்டிணத் தொழிலாளர்களே தருவிக்கப்பட்டனர். கிராமத் தொழிலாளர்களின்

நிலைமையையும், தொழிற் ஞானத்தையும், தொழிலுபயோகத்தையும் பெருக்கவேண்டுமென்னும் அக்கரை பொதுமக்களிடம் அப்பொழுதும் உதித்ததில்லை. இந்நிலையில் கிராமத் தொழிலாளர்களும், அவர்கள் தொழிலும் வருந்தி வாடவும், சிதைந்து அழியவும் கேட்பானேன்?

சில சுதேச அரசாங்கத்திலும், ஜமீன்தாரர்களின் ஆதரவிலும், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், போன்ற சமஸ்தானங்களைச் சென்றடைந்த தொழிலாளர்கள் தங்கள் தொழில் முறைகளை ஒருகாலத்தில் சிறக்கச் செய்திருந்தனர். சமஸ்தான வேலைகளில் போட்டியும், ஒரு சமஸ்தான வேலைக்காரரை, மற்றொரு சமஸ்தான வேலைக்காரர் போட்டி போட்டு வெல்லவேண்டுமென முயன்று வந்ததாலும், அதற்கான சமஸ்தான ஆதரவு லோபமின்றி கொடுத்துதவப்பட்டதாலும், நமது நாட்டு குடிசைத்தொழில்களுள்ளடங்கும் எல்லாக் கைத்தொழில்களும் ஓர்காலத்தில் மிகப் பிரகாசமாக விளங்கின. அப்பிரபல்யத்தின் தொடர்பே இன்றும் ஆங்காங்கு சிற்சில இடங்களில் சிறிதளவேனும் பிரகாசித்துக்கொண்டும், பல இடங்களில் ஒளி மழுங்கியும் இருந்துகொண்டு இந்திய குடிசைத் தொழில்களின் முற்காலச் சிறப்பை ஒருவாறு உணர்த்தி வருகின்றது. இவ்வித நிலைமையிலும் சில ஸ்தலங்கள் ஒவ்வோர் குடிசைத் தொழிலில் இன்றும் சிறப்புப் பெற்றிருக்கின்றன. இவ்வித தொழில் பெருமை 19-ம் நூற்றாண்டில் வெகு பிரபல்யமாக விளங்கி மேற்றிசையாரும் அதிசயப்படும் நிலைமையிலிருந்ததெனினும், தற்காலம் அவ்வித ஊர் பிரக்யாதிகள் பெயர் மாத்திரமாகவேயிருந்து வருகின்றன வென்பது மிக உண்மையாகும்.

நம் நாட்டு அரைகுறை கிராமத் தொழிலாளர்களை இருந்தவிடம் விட்டுப் பெயர்வதற்கின்றி, கிராம நிலச்சுவான்தார்களால் நிர்ப்பந்திக்கப்பட்டு கிராமங்களிலேயே தங்கி அகப்படும் வேலைகளை அப்போதைக்கப்போது அரைகுறையாகச் செய்து கூலிக்காக வெகு நாள் காத்திருந்து காலங்கழிக்கலாயினர். அவர்களை நித்திய தாரித்திரிய நிலைமையினின்றும் சற்று உயர்த்தினால் அவர்கள் கிராமங்களை விட்டு அகன்று விடுவார்களென்னும் அச்சமும், அடங்கி நடக்கமாட்டார்களென்னும் பீதியும் இன்றும் நாட்டுப் புறங்களிலும், கிராமங்களிலுமிருந்து வருகின்றது. கிராமப்பயிர்த் தொழிலில் ஈடுபட்டிருந்து வெறுங் கூலிகளாகவும், அடிமைகளாகவும் நடத்தப் பட்டு வந்த குடிமக்களுக்கு இப்பொழுது சுயேச்சையும், சமூக அந்தஸ்தில்

சமத்துவமும், கோயில், குளங்கள், கிணறுகளும் தாராளமாகத் திறந்துவிடப்படும் இக்காலத்து, நாட்டுத் தொழில்களுக்கும், விவசாயத்திற்கும் அடிப்படையான விஸ்வகர்ம தச்சர்கட்கும், கருமாரெனப்படும் இரும்புக் கொல்லர்கட்கும் அவர்கள் நிலைமையையும், தொழிலின் உபயோகத்தையும் அதிகப்படுத்துவது காலங்கருதி மிக நியாயமாகும். இன்றேல், கிராமக் குடிசைத் தொழிலபிவிருத்தியென்னும் முயற்சியும், அதற்காக ஏற்பட்டுள்ள 'ஆக்ட்' அல்லது அரசாங்கச் சட்டமும் வெறும் வாய்ப் பேச்சாகவும், அர்த்தமற்றதாகவும் முடியும்.

நம் நாட்டுக் குடிசைத் தொழில்களை இரண்டு பெரும் பிரிவினைக்குள்ளாக்கினால், அவைகள் நெய்தற் தொழிலிலும், கம்மியத் தொழிலிலும் அடங்கும். மற்ற சார்புத் தொழில்களெல்லாம் இவ்விரண்டு தொழில்களின் பிரிவினைகளாகவும், இவைகளைத் தழுவிய கிளைத் தொழில்களாகவுமிருக்கும். தோல் பதனிடுதல், காகிதத் தொழில், கண்ணாடிச் சாமான் தொழில், பீங்கான் செய்தல், இனமல் வேலை, சங்கறுத்தல், சரிகை நூற்றல் முதலிய தனித்த வேலைகளை நூதன வழியில் செய்யவேண்டுமானாலும் அவைகளின் அபிவிருத்திக்கு அடிப்படையான நாட்டுப் பிரதமக் கைத்தொழில்களாகிய மரவேலையும், இரும்புவேலையும், கிராமங்களிலும், பட்டிணங்களிலும் முதலில் வெகுவிரைவில் சீர்படவேண்டியவைகளாயிருக்கின்றன.

அந்நியநாட்டு உற்பத்திச் சாமான்களும், ஜப்பான் தேசச் சரக்குகளும் அளவுகடந்து இந்நாட்டுக்கு இறக்குமதியாகும் தற்காலத்து நமது குடிசைத் தொழில்களும் அவைகளினாலாகிய உற்பத்திச் சாமான்களும் தலையெடுக்கமாட்டாதென தர்க்கிக்கப்புகுவது வெறும் வாசாஞானமாகும். ஏனெனில், நாகரீக மிகுந்த மேல்நாடுகளில் ஆலைகளாலும், இயந்திர உதவியை மிகுதியாகப்பெற்ற தொழிற்சாலைகளாலும் முறியடிக்கப்படாமல் வெற்றியுடன் நடைபெறும் குடிசைத் தொழில்களும், விசேஷ கைத்தொழில்களும், நாளும் பிரபலமாக நடந்து வருகின்றன. பலவித கத்திகளையும் நானுவித எஃகு கத்தரிக்கோல்களையும், முட்களையும் ஷெப்பீல்டில் செய்வது பிரபல இயந்திர உதவியைக்கொண்டு செய்யும் வேலைகளல்ல. ஜினீவாவில் செய்யப்படும் கடிகாரத்தொழில் பெரிய தொழிற்சாலைகளில் மட்டும் செய்யப்படுவனவைகளல்ல. ஜெர்மனியிலும், ஜப்பானிலும், ஆஸ்திரியாவிலும் பிரிட்டனிலும் செய்யப்படும் மர, உலோக விளையாட்டுச் சாமான்களும் பெரிய ஆலைகளின் உதவியால் செய்யப்படுபனவைக

ளல்ல. பிளாக் கவுண்டி என்னப்பட்ட ஊரினின்றும், ஜப்பான்தேசத்தினின்றும் வரும் பலவகைப்பட்ட ஆணிகளும், மறையாணிகளும், இரும்பு முலாமிட்ட வளையங்களும், கீல், கைப்பிடி முதலிய சாமான்களும், பலவகைப்பட்ட பூட்டுகளும், இரும்புச் சங்கிலிகளும் பெரிய இயந்திரகளின் உதவியாலும், ஆலைகளாலும் செய்யப்படவில்லை. இன்னும் இரும்புத் தகடுகளின்மீது இனுமல் பூச்சுகளால் செய்யப்படும் பாத்திரங்களும், தட்டு முட்டுகளும், ஜெர்மனியிலும், ஜப்பானிலும், ஆஸ்திரியாவிலும் பெரிய ஆலைகளில் செய்யப்படுபனவைகளல்ல. வெள்ளை மண்ணினின்றும் செய்யும் பீங்கான்களும், கோப்பை முதலிய பாத்திரங்களும் பெரிய தொழிற்சாலைகளினின்றும் வெளிவருபனவைகளன்று. எனவே, இவைகளனைத்தும் கிராமக் குடிசைத் தொழில்களாலாகும் வியாபாரப் பண்டங்களெனவும், அவைகள் உள்நாட்டுத் தேவைகளுக்கும் உதவி, வெளிநாடுகளுக்கும் லாபகரமான வழியில் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவெனும் உண்மையை கருத்திவிருத்தி நமது நாட்டுக் கிராமக் குடிசைத்தொழில்களை அபிவிருத்தி செய்தலும், அதற்காகஅரசாங்கத்தார் உதவிசெய்தலும் தேசக்ஷேமத்திற்கு அடிப்படையென்பதை யார்தான் மறுத்துக் கூறக்கூடும்?

மனிதர் கைகளைப் பார்க்கிலும், சிறந்து மனம்போல் வளைந்து கொடுக்கக்கூடிய ஆயுதம் வேறில்லையென்பது இந்திய குடிசைத் தொழிலாளர்களின் கொள்கை. தொழில் நுட்பங்களையும், அருமையான வேலைப்பாடுகளையும், இயந்திர உதவியால் பெறுவது முடியாதென்பதே இவர்களின் உறுதிப்பாடான எண்ணம். இதற்கு நமது நாட்டிலுள்ள பண்டைய—மற்றவர்களால் செய்து காட்டக்கூடாத வேலைகளின் அருமைப்பாடே தக்க சான்றாகும். இவ்வித அருமைப்பாட்டினை மேற்றிசைத் தொழில் நிபுணர்கள் பலரும், இந்தியக் கைத்தொழில் கமிஷனும் ஒப்பியும், பலவாறாகப் புகழ்ந்தும் எழுதியிருக்கின்றனர். 1918-ம் வருடத்திய இந்தியக் கைத்தொழில் கமிஷன் ரிப்போர்ட்டில் கீழ்க்கண்ட மிக ருசிகரமான விஷயம் அதன் தலைப்பிலேயே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. "தற்காலம் யாந்திரீகக் கைத்தொழில்களின் பிறப்பிடமாகிய ஐரோப்பிய மேற்றிசை நாடுகள் கேவலம் அநாகரீகப் பிரஜைகளால் குடியேறப்பெற்றிருந்த காலத்திலேயே, இந்தியா தேசமானது, மன்னர்களின் அளவற்ற செல்வத்திற்கும், தொழில் வல்லோர்களின் உன்னதமான, பிரமிக்கக்கூடிய கைத்தொழிலற்புதங்களுக்கும் பெயர்பெற்று விளங்கிற்று. அதற்குப் பிற்காலத்தில் மேற்றிசை வியாபாரக் கொள்ளைக்காரர் இந்தியா

விற்கு முதல் தடவையாக வந்த காலத்திலும், இப்போது நாகரீக முதிர்ந்த ஐரோப்பிய நாடுகளுக்கு சமத்துவமாக இந்தியா தேசம் அந்தக்காலத்தில் கைத்தொழிலில் பிரகாசித்திருந்தது. நளினமான துணிகளை நெய்வதிலும், சாயத் தொழிலிலும், உலோகத் தொழிலிலும், நவரத்தின பதிப்பு வேலையிலும் இன்னும் மற்றெல்லா கைவேலைகளிலும் உலகம் மெச்சத்தக்க கீர்த்தி இந்தியர்கள் பெற்று விளங்கினர்களென ஆசிரியர் வெப்பர் கூறியிருக்கிறார். கிறிஸ்து பிறப்பதற்கு 2,000 வருஷங்களுக்கு முன் சமாதி செய்யப்பட்டிருக்கும் எகிப்துதேசச் சவங்கள் வெகு மெல்லிய இந்திய மஸ்லின் துணிகளால் சுற்றப்பட்டு புதையுண்டிருப்பதை இப்பொழுதும் காண்கிறோம். ரோமர்கள் இந்திய உற்பத்திச் சாமான்களை மிகுதியாக உபயோகப்படுத்தி வந்திருக்கிறார்கள். 'கஞ்சடிக்கா' என்னும் உயர்ந்த இந்திய மஸ்லின்களை கிரேக்கர்களும் விசேஷமாக உபயோகித்து வந்திருக்கின்றனர். இரும்புத்தொழில் அக்காலத்தே மிக்க உச்சநிலையிலிருந்ததென்பதை டெல்லி நகருக்கு அருகாமையிலுள்ள பிரம்மாண்டமான அடியிரும்பாலாகிய தூணும், தஞ்சாவூரிலுள்ள 50 டன் நிறையுள்ள இராஜகோபால் பீரங்கியும் நிரூபிக்கின்றன. பட்டு நெசவிலும், மெல்லிய உரோமப்போர்வை உற்பத்தியிலும், சந்தணப் பெட்டித் தொழிலிலும், கத்தி வேலையிலும் நம் நாடு பிரக்யாதி பெற்றிருந்தது. கிழக்கு இந்தியக் கம்பெனியாருக்கு லாபகரமான வியாபாரப் பெருக்கையும், பெருத்த ஊதியத்தையும், அரசாங்க ஆதிக்கத்தையும் கொடுத்தது இந்நாட்டுக் குடிசைத்தொழில்களன்றி வேறில்லை.

இவை மட்டோ. உலோகத் தொழில்களும், பித்தளை, வெங்கல வார்ப்படங்களும், பொன் வெள்ளி வேலைகளும், சரிகை உற்பத்தியும், தந்தத்தொழிலும், மரப்பெட்டி வேலைகளும், இந்தியா முழுவதுமே குடிசைத்தொழில்களாக வியாபித்திருந்தன. ஒரு நூறு வருடங்களுக்கு முன்னும் கப்பற்கட்டும் தொழில் பரங்கிப்பேட்டையிலும், தரங்கம்பாடியிலும் விமரிசையாகச் செய்யப்பட்டிருந்தது. இவ்வித தொழிற்பெருமை பெற்றிருந்த இந்தியாவில், தொழிலுன்னதம் விளங்கிய தென்னாட்டில், காங்கிரஸ் ஆட்சியின் கீழ் ஏற்படவிருக்கும்—யாவராலும் ஆவலாக விரும்பப்படும் தொழிற் புரட்சியில் முரட்டுக் கதர் துணி உற்பத்தியும், நாட்டு வெல்லம் காய்ச்சும் தொழிலும், கை நெல் குத்துதலும் கனத்த காரியமாகக் கருதப்பட்டு அவைகளை நாட்டின் குடிசைத் தொழில்களெனக்கொண்டு

அவைகட்கு அரசாங்க உதவி புரிய முயலுதல் எத்துணை நகைப்பிற்கிடமான காரியமென்பதை உணர்ந்து, உண்மையான நாட்டுக் குடிசைத் தொழில்களை நவீன முறையில் புதிப்பிக்கவேண்டியது தற்கால அரசாட்சியின் முழுப்பொறுப்பாகவேண்டும். இல்லையேல், ஒருகாலத்தில் கைத்தொழிலுன்னதத்தில் சிறந்ததாகச் சொல்லிக் கொள்ளும் இந்தியரும் முக்கியமாக நமது தென்னாட்டாரும் “இலங்கையைச் சுட்டெறித்த குரங்கு மொச்சைக்கொட்டைக்கு தாளமிட்ட” கதையாக முடியும்.

ஐந்தாவது அத்தியாயம்.

நமது குடிசைத் தொழில்களின் வீழ்ச்சி.

நமது குடிசைத் தொழில்களின் வீழ்ச்சிக்குக் காரணம் யாதென இங்கு சிறிது ஆராய்வதும் முறையாகும். விவசாயிகளும், நிலச்சுவான்தார்களும் சுவற்ப பொருளுக்காசைப்பட்டு தங்கள் விளை பொருள்களையும், தொழிலுக்கான மூலப்பொருள்களையும் அந்நிய நாடுகளுக்கு அளவற்று ஏற்றுமதி செய்வது நமது குடிசைத் தொழில்களின் வீழ்ச்சிக்கு முதற் காரணமாகும். சோப்புகள், மெழுகுவர்த்திகள் செய்வதற்காகும் கொப்பரை, மணிலாக் கொட்டை, தேங்காய் எண்ணை, இலுப்பெண்ணை, வேப்பெண்ணை முதலியவைகளும், சந்தணத் தைலம், வெட்டிவேர்த் தைலம், எலிமிச்சம்பழப்புல் தைலம் முதலியன தீர்ந்த சரக்குகளாகவும், விசேஷமாக, தாதுப்பொருள்களாகவும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருவதால், சோப்பு, மெழுகுவர்த்தி செய்யும் தொழில்களை இன்னும் இந்நாட்டில் சிறக்கச் செய்யக்கூடவில்லை. பதனிடாத தோல்களும், பதனிடுவதற்கென ஒருவாறு பட்டையிற் சிறிது பதன் செய்த தோல்களும் கப்பல் கப்பலாக இந்நாட்டினின்றும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனை தடை செய்வதற்கு சென்ற 30 வருடங்களுக்கு முன்னரே “குரோம்” பதனிடு முறையும், தொழிலும் சென்னை மாகாணத்தில் அரசாங்க உதவியால் மிக அபிவிருத்திக்குக் கொண்டுவரப்பட்டிருந்தும், இன்னும் இவ்வித அபரிமிதமான ஏற்றுமதி குறைந்தபாடில்லை.

நம் நாட்டு அரசர்களின் ஆதரவும், சீமான்களின் அபிமானமும் மறைந்துவிட்டதே நமது கைத்தொழில் வீழ்ச்சிக்கு மற்றொரு முக்கிய காரணமாகும். நவீன நாகரீகத்தில் நாட்டுக்கைத்தொழிற் உற்பத்திச் சாமான்களின் தேவை அவர்களுக்கு அற்றே போயிற்று. படித்த வகுப்பினர் உள்நாட்டு உற்பத்திச் சாமான்களை உதாசீனம் செய்துவிட்டு, அயல்நாட்டுப் பொருள்மீது ஆசை கொள்வாராயினர். இங்கிலாந்தில் சமீபத்தில் நேர்ந்துள்ள தொழிற் புரட்சியும், ஜெர்மனி யுத்த காரணமும், நமது நாட்டுக் குடிசைத்தொழில்களனைத்தையும் நாசப்படுத்தின. யுத்தகாலத்தில் எல்லா ஐரோப்பிய வல்லரசுகளும், அமெரிக்காவும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்ததால், உறங்கிக்கொண்டிருந்த ஜப்பான் தேசம் விழித்துக்கொண்டு அந்த அரிய சந்தர்ப்பத்தை மிக விரைவில் பயன்படுத்திக்கொண்டு, இயந்திர சகாயத்தால் உற்பத்திச் சரக்குகளை எல்லாத்துறைகளிலும் ஏராளமாகச் செய்து இந்தியாவில் கொணர்ந்து குவித்துவிட்டது. அவைகளின் மிகச்சகாயமான விலைவாசிகளும், நாணயமும் இந்தியர் மனதை பெரிதும் கவர்ந்துவிட்டன. இந்நிலை தற்காலத்தும் மாறுதலின்றி நீடித்து வருவதால், கடின உழைப்பால் இருகைகளை மட்டும் கொண்டு செய்யும் நமது குடிசைத் தொழில்கள் தலைதூக்கக்கூடவில்லை. இவ்வித அந்நியநாட்டு சரக்குகளுடன் போட்டிபோட நமது தொழிலாளர்களிடம் வேண்டிய பொருளும், இயந்திர சகாயமுமில்லை. அந்நியநாட்டுச் சரக்குகள் வருவதைத் தடுப்பதற்கும், போட்டியில்லாமல் ஒழுங்குபடுத்துவதற்குமான அரசாங்க சட்டதிட்டங்கள் அமைக்கப்படவுமில்லை. இந்நிலையில், நமது குடிசைத் தொழிலாளர்கள் அந்நியநாட்டுச் சரக்குகளுடன் பயனற்ற போட்டி போடவும், தங்கள் உற்பத்திச்சாமான்களை விலைப்படுத்தவும் முயல்வதால் நமது தொழில் வினைஞரின் கைத்தொழிலுன்னதமும், உற்பத்திப் பொருள்களின் நாணயமும், அழகும் வெகுவாகக் கெட்டு கீழ்நிலைக்கு வந்துவிட்டன.

சில சாரார் இந்தியக் கைத்தொழில்களைப் பாழ்படுத்தியதற்கு ரஸ்தா, தந்தி, ரயில் முதலிய வசதிகளும், சூயேஸ் ஜலசந்தித் திறப்பும், கப்பல் கேழ்வுகள் குறைந்ததும் முக்கியகாரணங்களில் ஒன்றுமெனச் சொல்வதில் சிறிது உண்மையிருப்பினும், இவ்வசதிகளே நமது தொழிலாளர்களும், ஆதரிப்பவர்களும் வேறு ஊர்களுக்கு விரைவில் செல்லவும், வெளிநாட்டு தேசாந்திரிகள் தஞ்சாவூர், கும்பகோணம், மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய தேவஸ்தலங்களையும்

ஆங்கு நடைபெறும் பலவகைப்பட்ட நமது குடிசைத்தொழிலின் பயனைக்கண்டு களிக்கவும், உற்பத்திப் பொருள்களை ஏராளமாக வாங்கிச்செல்லவும் தக்க ஹேதுக்களாயிருக்கின்றன. உள்நாட்டில் விரும்பப்படாத தஞ்சாவூர் நகாசுத்தாம்பாளங்களும், மதுரையில் செய்யப்படும் பல்லி, ஓணன், பசு முதலிய வார்ப்பட விளையாட்டுச் சாமான்களும், கும்பகோணத்திலுற்பத்தியாகும் பித்தளை, வெள்ளிப்பாத்திரங்களும், திருச்சியில் வெள்ளி, பொன்னாலாகும் பேர்போன கைத்தொழில் ஆபரணங்களும் இலாபந்தரும் வகையில் விற்பனை செய்யப்படுவதற்கும் மேற்குறித்த வசதிகள் அநுபவத்தில் மிக அவசியமாகத் தோன்றுகின்றன.

நம்நாட்டுக் குடிசைத் தொழில்களை நடத்தும் பலதிறப்பட்ட சாதிமக்கள் கல்வியறிவிலும், உலக ஞானத்திலும் இன்றுவரை மிகக் கடைப்பட்டவர்களாகவே யிருந்துவருகின்றனர். இவர்களுள் படித்தவர்களையும், கையெழுத்திடக்கூடியவர்களையும், அதிமாகக் காண்பது அருமை. உள்நாட்டில் நடைபெறும் உலக விஷயங்களையும், வெளிநாட்டுச் சமாச்சாரங்களையும், இவர்கள் அறிந்துகொள்ள வசதியும், அதற்கான அக்கரையுமில்லை. தமதுமக்களையேனும் கல்விபிற்புகுத்தவேண்டுமென்கிற கவலையுமில்லை. எனவே, தமது சிறுவர்களை உடல் உறுதிப்படாத இளம்பிராயத்திலேயே தாங்கள் தட்டுத் தடுமாறிவரும் தொழில்களில் பழக்கவும், தங்கள் வருமானத்தைப் பெருக்கவும் நினைந்து அவர்களை கல்விவாசனை யற்றவர்களாகவும், தொழில் ஞானமற்ற முழுமூடர்களாகவும் செய்து நமது நாட்டுத் தொழில்களை நாசப்படுத்தி வருவது ஓர் ஆச்சரியமாகுமா ?

நமது நாட்டில் எவ்வளவோ அருமைப்பாடான வேலைகளைச் செய்யும் எண்ணிக்கையற்ற தொழிலாளர்கள் இன்னுமிருந்தும், அவர்கள் சுவற்ப மூலதன மில்லாக்குறையால், தங்கள் தொழில்களை தாங்களே செய்து இலாபம் பெறுவதைவிட்டு சிறிது மூலதனமும், தளவாடப் பொருள்களையும் முதலில் கொடுத்துதவும் முதலாளிகளுக்கும், சவுக்கார் களுக்கும் முறிச்சீட்டு எழுதிக்கொடுத்து அடிமைப்படவேண்டிய கொடுமை இந்த 20-வது நூற்றாண்டில் நடைபெறும் நாகரீக ஆட்சியிலிருந்து வருமாயின் அஃது எங்ஙனம் நமது நாட்டுத்தொழில் வல்லோர்களையும், அவர்கள் தொழில்முறைகளையும் தலையெடுக்கச் செய்யுமென்பதை யூகித்துணரக்கூடவில்லை.

மேற்றிசையை ஒத்து நமது நாட்டுக் கைத்தொழிலாளர்களுக்கென தனித்த கில்டுகளும், அதாவது தொழிற்சங்கங்களும், ஐக்கிய

நாணயச் சங்க உதவிகளும், பல தொழிற்சாலைகளும், தங்களிருப்பிடங்களை இலவசமாகக் கட்டிக்கொள்வதற்கான வசதிகளும் நம் நாட்டில் இல்லாததும், நமது கைத்தொழில்கள் விரைவில் நசித்ததற்கும், நசிப்பதற்கும் மற்றய முக்கிய காரணங்களாகும். இவைகளெல்லாம் ஒருபுறமிருக்க, நமது நாட்டுத் தொழிலாளர் ஒருநாள் உண்ண உணவிருப்பதைக்கண்டு திருப்தியடைந்துவிடாமல், மறுநாளுக்கும் வேண்டுமே யென்னும் சிக்கன உணர்ச்சியும், தம் மக்கள் முன்னேற வேண்டுமென்னும் அக்கரையும் கொண்டு, "தங்கள் கையே தங்களுக்கு உதவி" என்னும் உயரிய உண்மையைக் கடைப்பிடித்தொழுகும் நாளே, நமது குடிசைத் தொழில்கள் யாவும், தொழிலாளர் வகுப்பினர் பலரும் சீர்படும் நாளெனச் செப்பலாம்.

ஆறுவது அத்தியாயம்.

நாட்டின் பிரதமக் கைத்தொழில்கள்.

இரும்பு வேலை.

முந்திய அத்தியாயங்களில் நமது நாட்டின் குடிசைத் தொழில்களின் முற்கால, தற்கால நிலைமைகளையும், அவைகளைச் சீர்படுத்தும் முறைகளையும், கதர் உற்பத்தியை அதிகப்படுத்தும் உபாயங்களையும் கைத்தறி நெசவை விருத்தி செய்யக்கூடிய வழிவகைகளையும் சூசனையாகவும், சில இடங்களில் விரித்தும் கூறப்பட்டிருக்கின்றது. இனி நாட்டின் பிரதமக் கைத்தொழில்களாகிய இரும்புவேலை, மரவேலை, உலோக வேலை, கல்தச்சு வேலை, பொன் வேலை முதலியவைகளைப் பற்றி தனித்தனியே பரிசீலனை செய்வதும் நமது குடிசைத் தொழிலாராய்ச்சியில்அடங்கும். எனவே, நமது நாட்டு இரும்புத் தொழிலை முதலில் ஆராய்வோம்.

தென்னிந்தியாவில் நாம் கண்ணுறும் பல அருமையானவும், விசித்திரமுள்ள பழய இரும்பு வேலைகளெல்லாம் இந்நாட்டில் உற்பத்தியான தாதுப் பொருள்களைக்கொண்டே செய்யப்பட்டவைகளென்றும், அந்நிய தேசத்திலிருந்து தருவிக்கப்பட்ட இரும்புகளைக் கொண்டு செய்யப்பட்டவைகளல்லவென்பதும் நாமறிந்த உண்மையாகும். நான்கு அடி குறுக்களவுள்ள குண்டு வாய்களையுடைய

பெரிய பீரங்கிகள் முதல், கைம்மரம் தைக்கும் ஆணி யீருக உள்ள எல்லாச் சாமான்களையும் இந் நாட்டுக் கம்மியர் அந்நிய நாட்டார் உதவியின்றி செய்து வந்திருக்கின்றனர். ஆளித்தலைகளையுடைய வாகுவலயங்களையும், சிங்க முகமுடைய புஜக்கிருதுகளையும், எஃகுச் சங்கிலிப்போர் அங்கிகளையும், சூரிய சந்திர வடிவமுடைய பற்பல கேடயங்களையும், பலம் பொருந்திய வாள்களையும், போர்க்கோடறி, ஈட்டி, பாலா, சூலம் முதலிய யுத்தத்திற்கு வேண்டிய பல விசித்திர மான ஆயுதங்களையும் நம்மனோர் முற்காலத்தில் சிருஷ்டித்திருக் கின்றனர். இவ்வித எஃகுச் சாமான்களைப் பார்வையிடும் மேற்றிசை யார் நவீன இயந்திர சகாயங்களின்றி இந்நாட்டுக் கம்மியர் அவைகளைச் செய்து முடித்த சாமர்த்தியத்தைப் பலகாலும் வியந்து பேசியும், எழுதியும் கொண்டாடி யிருக்கின்றனர். அதனோடும், இந்நாட்டில் மலிந்து கிடக்கும் பற்பல உலோகக் கனிகளையும், அவைகளினின்றும் அபரிமிதமாய்க் கிடைக்கும் உலோகங்களினுயர்வையும் கண்டு வியப் படையாதார் இல்லையென்றே சொல்லலாம். நமது நாட்டின் பல தாதுப் பொருள்களையும், தொழில் முறைகளையும் அசட்டை செய்த தின் பயனாக, சுமார் 50 வருடங்களுக்குள் எத்தனையோ கோடிக்கணக் கான திரவிய நஷ்டத்தை வருடந்தோறும் அடைந்துவந்துவிட்டோம். நமது நாட்டில் ஏராளமாகக் கிடைக்கும் இரும்பு மணற் சத்துக்களை யும், கனிகளையும் மறந்தோம். அக்கனிகளினின்றும், அந்நிய நாட்டு இரும்புகளை ஆசியாமலே, எடுக்கப்பட்ட இரும்புகளைக்கொண்டு நாம் நடத்திவந்த பூர்வ இரும்புத் தொழிலையும் துறந்தோம். அந்நிய டார் செய்தனுப்பும் சாமான்களைக்கண்டு பெரிதும் வியப்புற்று வாய் திறந்தோமென்பது மிகையாக மாட்டாது.

தென்னிந்தியாவில் இரும்பு உற்பத்தியாகும் ஸ்தலங்களை ஆராய்ந்தால், சேலம் ஜில்லாவே எவ்வாற்றானும் முற்பட்டிருக் கின்றது. இங்கு உயர்ந்த இரும்பு மணற்சாரிகளும், கனிகளும் ஏராளமாய்க் காணப்படுகின்றன. கோயமுத்தூர், தென்னாற்காடு, மதுரை முதலிய ஜில்லாக்களிலும் இரும்புக் கனிகள் ஏராளமாயிருக் கின்றன. இவ்விரும்புக் கனிகளை நம் முன்னோர் முற்காலத்தில் கண்டுபிடித்து அச் சத்துக்களை உருப்படுத்தும் முறைகளை முற்றும் உணர்ந்திருந்தார்களென்பதற்கு ஐயமில்லை. தம்மன்பட்டி, ஆத்தூர், எத்தாப்பூர், துவரங்குரிச்சி முதலிய சிறு கிராமங்களிலும், எண் ணிறந்த உலைக்கூடங்கள் சென்ற 40 வருடங்களுக்குமுன்னும் இருந்த தாகக்கூறப்படுகின்றது. இவ்வித உலைக்கூடங்களினின்றும்அடியிரும்பு

மட்டுமேயன்றி, முதல்தரமான இரும்புக் கட்டிகளும், பாளங்களும், எஃகுக் கட்டிகளும் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது. நவீன இயந்திரங்களினுதவியின்றியும், சுரிகுழற்றுருத்திகள், கனத்த இரும்புச் சூளைகள், நிலக்கரி முதலிய பல சாதனங்களின்றியும் இந்நாட்டுக் கம்மியர் எவ்வாறு இரும்புச் சத்துகளையும், மணலையும் உருக்கிப் பதப்படுத்தினார்களென்னும் சந்தேகம் பலருக்கும் உண்டாகலாம். ஆனால் மேற்றிசையாரின் தற்கால நாகரீகத்தைச் சற்று மறந்து, பூர்வகால ஸ்திதியைமட்டும் கவனித்தால் அச்சந்தேகத்திற்கு சமாதானம் தானே அமையும். நவீன இயந்திரங்கள் யாவும் தற்கால நாகரீக முதிர்ச்சியால் அடையப்பெற்றவைகளாகும். இவைகளைப் பெறு முன்னர் அயல்நாட்டார் எவ்வழியால் தங்கள் குறைபாடுகளைத் தவிர்த்துக்கொண்டனரோ அவ்வழியே நம்நாட்டாரும் தமது குறைபாடுகளையும், தேவைகளையும் தவிர்த்துக்கொண்டனர். நவீன சுரிகுழற்றுருத்திகள் கண்டுபிடிக்கப்படு முன்னர் நம்நாட்டுக் கொல்லர்கள் சாதாரண உலைக்கூடங்களில் முழு எருமைத் தோலால் செய்யப்பட்ட நான்கு, ஐந்து துருத்திகளை மாட்டி இவ்வித இரும்புச் சத்துக்களை உருக்கிவந்தனர். அக்காலத்தில் காட்டிலாக்கா நிர்ப்பந்தமில்லாமையால் சொற்பச் செலவில் ஏராளமாக அகப்பட்ட மரக்கரிகளை நிலக்கரிக்குப் பதிலாக உபயோகப்படுத்தினர். கனத்த இரும்புத் தகட்டினால் செய்யப்படும் நவீன சூளைகளுக்குப் பதிலாக ஓர்வகை சேர்மான மண்ணினால் செய்யப்பட்ட பெரிய மூசைகளைக் கையாடினர். குறித்த காலத்தில், குறிப்பிட்ட சூட்டினளவில் இரும்புமணல்களை தற்போது உருக்கப்படுவதற்குமாறாக இரவு பகலாக துருத்திகொண்டு கைமாறி மாறி ஊதி உருக்கி கட்டிகளாகவும், பாளங்களாகவும் செய்துவந்தனர். இவ்வழியே எஃகுக்கட்டிகளையும், பாளங்களையும் செய்து முடித்து வேலைகளுக்கு உபயோகப்படுத்தினர். இந்நாட்டு பழய எஃகுக்கட்டிகள் மேல்நாட்டு எஃகுக்கட்டிகளைவிட உறுதியுள்ளவைகளாகவும், கடின துவைச்சலை யடையக்கூடியவைகளாகவும் இருப்பதைத் தொழில் வல்லோரனைவரும் ஒப்புவர். அக்காலத்தில் செய்யப்பட்ட "ஒற்றை வட்டுளி" "இரட்டை வட்டுளி" என்னும் எஃகுக்கட்டிகள் இன்னும் பிரசித்தி பெற்றவைகளாகவே யிருக்கின்றன. இவைகள் இப்போது அகப்படுமாயின், அதிக விலைகொடுத்து இப்பழைய சாக்குகளை வாங்கும் அந்நிய நாட்டார் இன்றும் இருந்துவருகின்றனர்.

இவ்வித சுதேசீய இரும்புத் தொழிற் முயற்சிகளை கிழக்கு இந்தியா கம்பெனியாரால் அறிந்த மேனுட்டார் சுமார் கி. பி. 1820-ம் வருடத்தில் பரங்கிப்பேட்டை என்னும் போர்ட் நோவாவில் இரும்பாலை யொன்றை ஸ்தாபித்து, முற்கூறிய இடங்களிலிருந்து இரும்பு மணல்களையும், சத்துக்களையும் பரிசல்களிலேற்றிக் கொணர்ந்து அத்தொழிலை நடத்தி வந்தனர். அத்தொழிற்சாலையில் வண்டி அச்சுக்களும், வில்லுகளும், வண்டிப்பட்டரைகளும், சக்கரங்களும், பல தினுசு திரணைக்கம்பிகளும், பலரகத் தகடுகளும் செய்யப்பட்டு வந்தன. இவ்வாலை ஏற்படவே வெளியூர்களினின்றும் பல வேலைக்காரர்கள் இங்கு குடியேறினர்கள். பரங்கிப்பேட்டையில் பல வருடங்களாக நடைபெற்ற இந்த ஆலை கள்ளிக்கோட்டைக்கு அருகாமையிலுள்ள பேப்பூருக்கு மாற்றப்படவே பரங்கிப்பேட்டையில் மிதமிஞ்சிக் குடியேறிய இரும்புக்கம்மியர் தொழிலிழந்து பலவித கஷ்டத்திற்காளானர்கள். நம் தென்னுட்டு இரும்புத் தொழிலாளரின் தொழிற் கஷ்டம் இதுமுதல் ஆரம்பமாயிற்றெனலாம். இந்தக் கஷ்டமே நாளும் அபிவிருத்தியடைந்துகொண்டு, மரத்தினிழலிலும், கோயில், சத்திரம், சாவடி, குளக்கரைகளிலும் இரும்பு வேலைகளை வெகு விரைவாகவும், அற்புதமாகவும் செய்து வந்த நம்நாட்டுக் கம்மியர், தற்காலம் இயந்திரப்போட்டியின்முன் காலங்கழிப்ப தெவ்வாறெனத் தோன்றுது உயிர்வாழ்ந்து வருகின்றனர்.

இந்நாளில் இவர்களுக்கு அகப்படும் இரும்பு வேலைகளோ மிகக் கீழ்த்தரமானது. அதிக ஊதியத்தைக் கொடுக்கக்கூடியவைகளுமன்று. உழுபடை அடித்தல், பாக்குவெட்டி, அறியாமணைகளைச் செய்தல், வண்டிச் சக்கரங்களுக்கு இரும்புக்கட்டு மாட்டுதல், ஒடிந்த வண்டி யிருசுகளைத் திரட்டுதல், கடையாணிகளை நீட்டுதல், இரும்புக் குடையாணிகள், கீல் முளைகள் அடித்தல் முதலியவைகளே நமது நாட்டுப் பூர்வீக விஸ்வகர்மக் கருமார்கள் செய்துவரும் தற்காலத் தொழில்களாகும். நவீன உழவுக் கருவிகளை உபயோகிக்கும் இடங்களில் உழுபடை செய்யும் தொழிலும் இல்லையென்றே சொல்லலாம். வண்டிச் சக்கரங்களுக்கு இரும்புக்கட்டுப் போடும் தொழிலும் ‘டன்லப்’ காற்றடிக்கும் ரப்பர் கட்டுகளை குப்பை வண்டிகளுக்கும், மற்ற பளுச் சுமக்கும் வண்டிகளுக்கும் மாட்டி வருவதால் இந்த அற்ப வேலையும் நமது நாட்டுக் கொல்லர்கள் கையினின்றும் பிடுங்கிவிடப்பட்ட துர்ப்பாக்கியத்தை என்னென்போம்!

அயல் நாட்டாரால் இந்நாட்டில் ஏராளமாய் நிரப்பியிருக்கும் இரும்புச்சாமான்களுடன் நம் நாட்டு இரும்புத்தொழிலாளர் இன்றே போட்டியிட்டு தங்கள் கைச்சரக்குகளை விலைப்படுத்துவது கடின காரியமாயினும், கிராம விவசாயக் கருவிகளையும், அது சம்பந்தமான மாவாலை, கரும்பாலை, கவலை முதலிய இயந்திரங்களையும் கிராமத் தேவைகளுக்காயினும் செய்து கொள்ளும் பழக்கத்தையும், வசதிகளையும் அடைதல் நன்றாகும். டிரிலிங் மெஷீன், பஞ்ச் எனப்படும் துளைக்கும் கருவிகளையும், லேத் என்னும் கடைச்சல் பட்டரைகளையும் கையாளும் பழக்கத்தை நமது நாட்டுக் கருமார் பெறவேண்டும். இவைகளின் பழக்கத்தின் மிகுதியை தற்காலம் பட்டிணங்களில் பெரிதும் காணலாம். நம் நாட்டுக் கம்மியர் எத்தொழிலை ஆரம்பித்தால் இலாபங்கிட்டுமென்றும், ஏராளமாகச் செலவழியக்கூடுமென்பதை ஆராய்ந்து அத்தொழிலை செய்தல் நலமாகும். இவ்விதமாக ஏற்படும் தொழிற்சாலைகளில் குறிப்பிட்ட ஒரு தொழிலைமட்டும் செய்ய வேண்டுமேயன்றி பலதொழில்களையும் செய்யமுயலுதல் பலனளிக்க மாட்டாது. இங்ஙனம் செய்யப்படும் தொழில்களும், அந்தப் பிரதேசங்களின் பூர்வீகத் தொழிற்பெருமைபெற்ற வேலைகளாக இருத்தலும் மிக அவசியமாகும்.

திண்டுக்கல்லில், பலவித இரும்புப் பூட்டுகளும், இரும்புப் பெட்டி வேலையும் அபிவிருத்தி செய்யப்படுவது அந்த ஸ்தலத்தின் பழைய தொழிற் பிரக்கியாதியை யொட்டியதாக விருக்கும். சேலம், இரும்பேடு, பெரும்பேறு, மலையாளம், குண்டாப்பூர், முதலிய இடங்களில் பேனாக்கத்திகளும், மற்றுமுள்ள வெட்டுக் கருவிகளையும் வியாபார முறையில் பெருக்கியும், சிறிய இயந்திரங்களினுதவியைப் பெற்றும் செய்தல் மிக இலாபந்தரக்கூடியதாகும். இங்கு செய்யப்படும் கத்திகள் மேனாட்டுக் கத்திகளைவிட கடின துவைச்சலுள்ளவைகளாகவும், உறுதியுள்ளவைகளாகவும் இருக்கின்றன. இப்பொழுது இந்நாட்டில் ஜப்பான் தேசத்து உற்பத்திக் கத்திகள், இரண்டு மடலுள்ளவைகளும், நிக்கல் முலாமிட்ட பிடிகளுடனும், சாவிகோர்க்கும் வளையத்துடனும், டஜன் பத்தணா மொத்த விலைக்கும், சில்லரையில் ஓரணாவாகவும் எங்கும் மலிந்து விற்பனை செய்யப்படுகின்றன. இவைகள் பார்வைக்குமட்டும் வெகு அழகாகவும், எடுத்துச் செல்வதற்கு வெகு அடக்கமாகவு மிருந்தாலும், அவைகளில் கடின துவைச்சலும், வில்லின் அழுத்தமும் இல்லை. எனவே, நமது நாட்டுக்கம்மியர் அதிக உற்பத்திக்கேற்ற வழி வகைகளையும்,

நாணயமான தீர்மானத்தையும் கைக்கொண்டால் ஏராளமாகக் குவிந்துகிடக்கும் ஜப்பான், ஜெர்மன் சத்திகளுடன் போட்டி போட்டு இலாபகரமாக விற்பனையாக்கலாம். பலவித கையாணி களையும், கம்பி ஆணிகளையும், சிறு பொடி ஆணிகளையும், ஜப்பான் இந்திய மார்க்கட்டிற்கு சமீபத்தில் ஏராளமாக அனுப்பி வருகின்றது. இதற்கு அரசாங்கத்தடையும், அதிக தீர்வையும் ஏற்படுமானால் இந்தியருக்கு இதனினும் இலாபகரமான தொழில் வேறு வேண்டுவதில்லை. இவ்வித தொழிற்சாலைகள் சென்னையிலும், சேலத்திலும், பெஜவாடாவிலும், மதுரையிலும், விசாகப்பட்டிணத் திலும், முதல் முதலாக ஸ்தாபித்தால் மிக்க பயனளிக்குமென்பதில் ஐயமில்லை. இதைப்போல் இலாபந்தரக்கூடிய சிறிய—நாட்டின் தேவைக்கு இன்றியமையாத பல—இரும்பு வேலைகளிருக்கின்றன. இவ்வித வேலைகளை நடத்த புத்தி நுட்பமுள்ள நாட்டுக் கம்மியரைத் தேடிப்பிடித்து, அரசாங்கத்தாரும், செல்வமுற்றவர்களும் சிறுகச் சிறுகப் பணமுதவி, உற்சாகமும், ஊதியமும் உண்டாக்கினால், தேச முழுதும் கவிந்து பரவக்கூடிய பெருந்தொழில்கள் நமது நாட்டில் ஏராளமாய் நடைபெறுமென்பதற்கும், பூதபௌதிகத்தால் இப் பொழுது அடுத்தடுத்து விவசாயத்திற்கு நேரும் குறைபாடு களும் ஒருவாறு ஒழிந்து, அவற்றால் நமதுநாட்டில் உண்மையான தொழிற்புரட்சியும் பலவழியிலும் சித்திக்கும். ஜனநாயக ஆட்சியின் அஸ்திவாரமும் இவைகள் மூலம் ஊடுருவிச் சென்று நாட்டின் பெருமையையும், நாட்டின் தலைவர்கட்கோர் தனிப்புகழையும், தாரா நிற்கு மென்பதில் ஓர் ஐயப்பாடுமில்லை.

ஏழாம் அத்தியாயம்.

மரவேலை.

அந்நியர்களால் ஆக்கிரமித்து கைக்கொள்ளப்படாத நம்நாட்டுக் கைத்தொழில்களில் மரவேலை யொன்றெனச் சொல்லலாம். இந்நாட் டில் காணப்படுகிற மரச்சாமான்களெல்லாம் இங்கு உற்பத்தியாகிற மரங்களைக்கொண்டும், இத்தேசத்து வேலைக்காரர்களைக்கொண்டும் செய்யப்பட்டவைகளாகும். இந்தியாவில் விலையுயர்ந்தனவும், பல வேலைகளுக்கும் நாணயமுமான தேக்கு, சந்தனம், பலா, செம்மரம்,

வெண்மரம், கருங்காலி, இரும்பகம், வேங்கை, பூவரசு, வேம்பு முதலிய பல மரங்கள் அபரிமிதமாக உற்பத்தியாகின்றதோடும், வெளிநாடுகளுக்கும் ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டும் வருகின்றன. ஆகையின், நமது நாட்டு மரவேலையை விருத்திசெய்வதற்கு அந்நிய நாட்டிலுற்பத்தியாகும் மரங்களின் இறக்குமதியை நாம் எதிர்பார்க்க வேண்டுவதில்லை. அதனேடும் இந்தியாவின் சீதோஷ்ண ஸ்திதியின் திடும்பிரவேசமான வேறுபாடுகளை அந்நிய நாட்டு மரங்களைக் கொண்டு செய்யப்படும் சில்லரைச் சாமான்களோ, தட்டுமுட்டுகளோ தாங்க சக்தியற்றவைகளாக விருக்கின்றன. ஐரோப்பாவில் அவர்கள் தொழின்முறைகளில் உபயோகப்படுத்திவரும் ஆஷ், மகாகினி, ஓக், பீச், பர், டீல் முதலிய மரங்கள் வேலைக்கு வெகு நாணயமுள்ளவைகளாகவும், அவற்ருல் செய்யப்படும் சாமான்கள் பார்வைக்கு மிக அழகாகவும், மனேவசீகர முள்ளவைகளாகவும் இருந்தபோதிலும், அம்மரங்களும், அவ்வித வேலைபாடுள்ள சாமான்களும் ஐரோப்பா முதலிய குளிர்தேசங்களுக்குரியனவேயன்றி, நம் நாடொத்த உஷ்ணப் பிரதேசங்களுக் கடுத்தனவைகளன்று.

ஆனதுபற்றியே அந்நிய தேசத்தினின்றும் ஏராளமாக இறக்குமதியாகிற இரும்பு, கண்ணுடி முதலிய பலசாமான்களைப்போல் மரச்சாமான்கள் இந்நாட்டிற்கு அனுப்பப்படுவதில்லை. மேலே சொல்லிய காரணங்களல்லாமல், இதற்கு இன்னுமோர் முக்கிய காரணமும் உண்டு. இரும்புச்சாமான்களனைத்தும் நிலக்கரியும், மின்சார சக்தியும் மலிந்து கிடக்கும் தேசங்களில் பெரும்பான்மை இயந்திரங்களினுதவியைக்கொண்டே செய்யப்படுகின்றன. மரச்சாமான்களோ வாள் கொண்டு அறுத்தல் முதலிய பெரும்படியான வேலைகளைத் தவிர்த்து, மற்ற மட்ட சுத்தம், இழைப்பு, இணக்கம், சிற்றுளி முதலிய வேலைகளனைத்தும் கையினுல் செய்யப்படவேண்டிய நிமித்தம்பற்றியும், மேனுட்டுக்கைத்தொழிலாளர்களின் கூலிக்கட்டணங்கள் நம் நாட்டு வேலைக்காரர்களுக்கேற்பட்டிருக்கும் கூலிகளைவிட பதின்மடங்கு அதிகமாகயிருந்து வருவதுபற்றியும், அக்கூலிக் கட்டணங்கள் அங்கு நாளுக்கு நாள் விருத்தியாகிக்கொண்டு வருவதுபற்றியும், அடிக்கடி வேலை நிறுத்தம் செய்யப்பட்டு வருவதாலும், அந்நிய நாட்டுமர உற்பத்திச் சாமான்கள் நமது நாட்டில் அதிகமாகப் பரவாத பெரும்பாக்கியத்தை பெற்றிருக்கின்ருேம். மரத்தொழிலையும் ஆரம்பமுதல் அந்தியம் வரையில் இயந்திர சகாயங்களால் முடித்துவிடக்கூடியதாக விருந்தாலும், அவைகளை சுலபத்தில் கப்பலேற்றக்கூடியதாகவிருந்தாலும்,

இந்நாட்டு மரவேலைகள் பல வருடங்களுக்கு முன்னரே மடிந்திருக்கும். சென்னையில் ரென்பென்னெட், ஸ்பென்ஸர், கர்சன் முதலிய மரவேலை கம்பெனிகளும் நீடித்திருக்கமாட்டா. பியோனு முதலிய வாத்தியப்பெட்டிகள், பர்மா, ஜப்பான் வர்ணத்தட்டு முட்டுகளைத் தவிர, அந்நியநாட்டார் போட்டியால் அவஸ்தைக்குட்படாத இவ்வருமையான தொழிலை நம்நாட்டாரும், கைத்தொழிலில் நாட்டம் கொள்ளும் காங்கிரஸ் ஆட்சியாரும் முக்கியமாய் கவனம் செலுத்தி விருத்திசெய்தல் அவசியமன்றோ?

இந்நாட்டு மரவேலை நான்கு பெரும் பிரிவினைக்குள் அடங்கும். அவைகளைப் பெரும்படி வேலையென்றும், சிற்றுளி வேலையென்றும், கடைச்சல் வேலையென்றும், இணக்க வேலையென்றும் சொல்லுவர். பெரும்படி வேலையானது மரங்களைச் செதுக்கி இழைத்தல், மூல மட்டத்திற்குப் பொருந்தப்பார்த்தல், கட்டிட வேலைகளுக்குரிய கைமரம், விட்டம், வளை, மோசனம், அனந்திரம், தூலம், போதியக் கட்டைகள், நிலைகள் கோர்த்தல் முதலியவைகளாகும். மேற்சொல்லிய விதமாய் மட்டசுத்தம் செய்யப்பட்ட மரவேலைகளில் செடி, கொடி, காய், கனி முதலிய தாவரப்பொருள்களையும், யானை, குதிரை, ஆளி முதலியவைகளையும், மனிதர், ஸ்திரீ முதலிய ரூபங்களையும், இன்னும் இவைபோன்ற பலசித்திரங்களையும் மற்றும் வேலைப்பாடான பலச் சித்திரமென்னும் துளைத்துச் செதுக்கும் வேலைகளையும் சிறுகச் சிறுகச் செதுக்கியெடுக்கும் வேலை சிற்றுளி வேலையாகும். கடைச்சல் வேலையென்பது மட்டசுத்தம் செய்யப்பட்ட கம்பிகளினிடத்தே பலவித குழவு திரணைகளை கடைச்சல் பட்டரையின் உதவிகொண்டு செய்வதாகும். இணக்கவேலை யென்பது சிறுமரத்துண்டுகளையும், பலகைகளையும் வஜ்ஜிரத்தாலும், நெம்புகளாலும்சேர்த்து உருப்படுத்தி கூர்சேர்த்து பெட்டிகள், அலமாரிகள், கதவுகள், ஜன்னல்கள், மெத்தைப்படிகள், நாற்காலிகள், மேஜைகள், கட்டில்கள் முதலியவைகளைச் செய்யும் வேலைகளைக்குறிக்கும்.

தென்னிந்தியாவில் பெரும்படி வேலைகளில் அதிக தேர்ச்சி பெற்றவர்கள் மலையாள தேசத்து தச்சர்களே. அந்நாட்டில் நல்ல மரங்கள் ஏராளமாக உற்பத்தியாகி சொற்ப விலைக்குக் கிடைப்பது பற்றி அத்தொழில் அங்கு மிகப் பிரபலமுற்றிருக்கிறது. அரசாங்க ஆதரவும், தங்கள் தங்கள் வசதி ஸ்தலங்களையும், தேவாலயங்களையும் தேச ரீதிக்கிணங்கி ஒரே மாதிரியாகக் கட்டவேண்டு மென்கிற உண்மை உணர்ச்சியும் பொதுமக்களிடம் இன்றும் இருந்து வருவதே

மரத்தொழில் அங்கு சிறந்து விளங்குவதற்கு மற்றொரு முக்கிய காரணமாகும். 50 அல்லது 60 அடி அகலங்கொண்ட பெரிய கூடங்களில் தூண்கள், உத்திரம், அனந்திரம் முதலியவைகளில்லாமலே ஏகாண்டமாகக்கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களை இப்பிராந்தியங்களில் மட்டுமே பார்க்கிறோம். இப்பொழுது நவீன நாகரீக முதிர்ச்சியாலும், யாந்திரீகசாஸ்திர ஞானத்தாலும் நாமறிகிற 'டிரஸ்' என்னும் தூலங்களின் உபயோகத்தையும், அவைகளை சாஸ்திரீகமாக இணக்கம் செய்யும் வழிகளையும் மலையாளத் தச்சர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அறிந்திருந்தார்களென்பதற்கு பல அத்தாட்சிகள் உண்டு. கிட்டுமானம் அதாவது 'ஜாயிண்டுகளை' இடமறிந்து, இழுத்தல், அழுத்தலென்னும் காரிய முணர்ந்து உபயோகப்படுத்துவதில் மலையாளத் தச்சர்கள் முற்பட்டவர்களாவார்கள்.

சிற்றுளிசெதுக்குவேலையில் நம்நாட்டார் ஒருவாறு கைதேர்ந்தவர்களென்றே சொல்லவேண்டும். சுபாவீக ரூபங்களைச் சித்தரித்துக்காட்டுவதிலும், கற்பிதமான ரூபங்களையும், இலை கொடிகளையும் இவர்கள் வெகு அலங்காரமாகச் செய்யும் திறமை வாய்ந்தவர்கள். நம்நாட்டில் சிற்றுளிவேலை தோன்றிய பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரே அவ்வேலை ஐரோப்பிய நாடுகளில் தோன்றிற்று. இங்கிலாந்தில் மேனாட்டு சிற்றுளி வேலைக்காரர் தாங்கள் செதுக்கும் பழங்களையோ அல்லது மிருகங்களையோ, பட்சிகளையோ சுய ரூபத்துடன் அமைக்க முயல்கிறார்கள். நம்நாட்டில் இவைகள் கற்பனையால் சுய ரூபம் பெறுவதில்லை. நம்நாட்டு தேவாலயங்களில் நிர்மாணிக்கப்படவேண்டிய அவசியமிருந்தும் யானை, குதிரை, ரிஷபம், மயில், மூஞ்சூறு, கருடன் முதலிய வாகனங்களை சுபாவீக ரூபத்துடன் அமைக்கக்கூடிய சந்தர்ப்பங்களை நம்மனோர் இழந்திருக்கின்றனர். இராமநாத புரத்தைச்சார்ந்த கோயிலூர் மடத்திற்குச் சொந்தமான கொற்றவாளீஸ்வரர் ஆலயத்திலமைத்துள்ள வாகனங்களும், காரைக்குடியில் செய்யப்படும் வாகனங்களும் சுபாவீக ரூபத்திற்குக் கொஞ்சமும் மாறுபடாமலிருக்கின்றன. இவ்வித சுயரூபம்பெற்ற சிற்றுளி வேலைகள் இங்கிலாந்து முதலிய தேசங்களில் மட்டும் மலிந்து காணப்படுவதால் நம்நாட்டுத் தச்சர்களுக்கு இவ்வித சக்தியில்லையென பலரும் சந்தேகிக்க இடமுண்டு. ஐரோப்பிய நாடுகளில், சிற்றுளி செதுக்குவேலை செய்வோர்களனைவரும் தங்கள் வேலையைக் கற்குமுன் சித்திரந்தீட்டுதலையும், களிமண்ணில் ஆஸ்செய்யும் பழக்கத்தையும் பெறவேண்டுவது கட்டாய விதியாகயிருப்

பதே அவர்கள் செதுக்குத் தொழிலில் வல்லவராயிருப்பதற்குக் காரணமாகும். இவ்வித வரன்முறையான பழக்கம் சிறிது வருட காலம் சென்னை கவர்ன்மெண்டு சித்திர கலா வித்தியாசாலையில் போதிக்கப்பட்டிருந்து இப்பொழுது கைவிடப்பட்டதால் நம் நாட்டு பழைய சிற்றுளி வேலைக்காரர்களின் வேலையின் உன்னதத்திற்கும், தற்காலம் அத்தொழிலைக் கையாள்பவர்களின் தொழில் பேதத்திற்கும் காரணமாகும். மேல்நாட்டில் செய்யப்படும் செதுக்கு வேலைகள் ஒளி சாஸ்திரத்தை அநுசரித்தே செய்யப்படுகின்றன. செதுக்கப்படும் வேலைகளில் எந்த பாகம் எவ்வளவு இருண்டு காட்டவேண்டுமென்றும், எவ்வளவு பாகத்தில் வெளிச்சம் படவேண்டுமென்றும் சீர்தூக்கியே அவைகள் செய்யப்படுகின்றன. சூரிய வெளிச்சம் படாத இடங்களில் வைக்கப்படும் வஸ்துக்களை அதிகச் சிறிய நுட்பமான சித்திரிப்புக் களால் ஒருபோதும் அலங்கரிக்கமாட்டார்கள். இவ்வித அருமையான தொழில் ஞானத்தை இந்திய தச்சர்கள் இனி அறிந்து, பழகவேண் டியவர்களாக யிருக்கிறார்கள். இங்குள்ள வேலைகளில் இவ்வித அரு மைப்பாடான குணங்கள் காணப்படின், அவைகள் நமதுநாட்டுக் கம்மி யரால் புத்திபூர்வமாக அமைக்கப்பட்டவைகளாகா. இன்னும், மேற் றிசையார் செய்கின்ற சிற்றுளிவேலைகளில் வார்னீஷ் முதலிய மெருகு எண்ணைகளை பூசுவதில்லை. மெருகெண்ணை பூசிய சிற்றுளிச் சித்திர வேலைகள் வெளிச்சத்தை விபரீதமாகப்பற்றி அவைகளைப் பிரதிபலிக் கச் செய்வதால் அவைகள் பார்ப்போர் மனதிற்கு அருவெறுப்பை விளைவிக்கின்றன. இவ்வுண்மையை நம்மனோர் நன்குணர்ந்து மரச் சிற்றுளி வேலைகளில் மாஎண்ணை கொண்டும், மஞ்சள் மெழுகு கற்பூரத்தைலம் முதலியவைகளை காய்ச்சி மெருகிடலாம். அல்லது தேங்காய் எண்ணையை உபயோகிக்கலாம். இவ்வித எண்ணைகள் மர வேலையை பாதுகாப்பதோடும், மேற்கூறிய ஒளி தோஷங்களை நிவர்த்திக்கின்றன. வார்னீஷால் சீர் குலைந்த அருமையான செதுக்கு வேலைகளை காரைக்குடி, கானாடுகாத்தான், தேவகோட்டை முதலிய நாட்டுக்கோட்டை நகரங்களிலும், மெழுகாலும், எண்ணையாலும் மெருகிட்ட அழகிய சிற்றுளி வேலைகளை சென்னை விக்டோரியா இன்ஸ்டிடுயூட்டிலும் காணலாம். பின்னால் கூறப்பட்ட கண்காட்சிச் சாலையில் நூக்கமரத்தால் செய்யப்பட்டுள்ள பல அருமைப்பாடான சாமான்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. நவீன நாக ரீகத்தையொட்டி நம்நாட்டு மர வேலையை எவ்விதம் நடத்தி இலாபம் பெறலாமென எண்ணமிட்டுக்கொண்டிருக்கும் நம் நாட்டு

மர வேலைக்காரர், இக்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கும் நாற்காலி, மேஜை, கட்டில், சோபா, பீரோ முதலியவைகளைப் பார்வையிடுவதவசியமாகும்.

இணக்க வேலை இத்தன்மையதென முன்னமே இயம்பியிருக்கிறோம். இவ்வேலையை சரிவர நடத்தவேண்டுமானால் பலவித கிட்டுமானங்களையும் (ஜாயிண்டுகள்) செய்யப் பழக வேண்டும். இவ்வித கிட்டுமான வேலையில் போதுமான ஞானமும், பழக்கமும் இல்லாமல் பெட்டிகள், நாற்காலிகள், 'மேஜைகள், கதவுகள், ஜன்னல்கள், அலமாரிகள் முதலிய சாமான்களைச் சிறக்கச் செய்ய இயலாது. வஜ்ஜிரப் பசை சம்பந்தத்தால் செய்யும் கிட்டுமானங்களும், நெற்றி முட்டாகச் சேர்த்து ஆணி அறையும் கிட்டுமானமும் மிகவும் கீழ்த்தரமான வேலைகளாகும். நமது தென்னாட்டில் மரப்பெட்டி வேலைகள் வெகு மும்மரமாக சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் நடை பெறுகின்றன. அவைகளின் வேலைப்பாட்டைக் கண்ணுறுபவர்கள் நகையாமலிரார். அவ்வித குற்றமுள்ள வேலைகளை பித்தளைப்பட்டங்களாலும், பளபளப்பான கைப்பிடிகளாலும் வார்னீஷ், வர்ணப் பூச்சுகளாலும் மறைத்து ஒருவாறு விலைப்படுத்தி வருகின்றனர். டீல் என்னும் கள்ளிப்பலகையையும், ஜாதிக்காய் மரத்தையும், தேக்குமரம்போல் பூச்சினால் காட்டுவதும், தேக்கு மரச்சாமான்களை நூக்கமரச்சாமான்களைப்போல் மேற்பூச்சுக்களால் தோற்றுவிப்பதும் நமது வேலைக்காரர்களிடத்துள்ள மற்றொரு பெருத்த குறை. எல்லா மரங்களும் நிறைந்து, மலிவாகக் கிடைக்கும் இந்நாட்டில் ஒரு பொருளை மற்றொன்றாகத் தோற்றுவிப்பதும், அப்பொருளின் உண்மை அழகைக் கெடுப்பதும், இவ்வித போலி உற்பத்தியைச்செய்து பொதுமக்களின் நம்பிக்கையையும், உற்சாகத்தையும், அபிமானத்தையும் அடியோடு கெடுக்க வேண்டிய அவசியமேயில்லை.

மரவேலை இந்நாட்டில் அபிவிருத்தி யடைவதற்கு பல முக்கிய சாதனங்கள் நமக்குண்டு. அத்தொழில் பலவித மரங்கள் ஏராளமாக அகப்படும் மலபார், தென்கன்னடம் போன்ற இடங்களிலே ஏற்படும் தொழிற்சாலைகள் மூலமாக நடத்துவது மிக்க பயனளிக்கும். அவைகளில் உற்பத்தியாகும் சரக்குகள் விற்பனையின்றி முடங்கிக் கிடக்காமல் உடனே உள்ளூரிலும், அதைச்சார்ந்த இடங்களிலும் செலவழியக்கூடிய வசதிகளிருக்கவேண்டும். இல்லையேல், கள்ளையில் இப்பொழுது உற்பத்தியாகும் சரக்குகளை ஏராளமாக சென்னைக்கும்,

இன்னும் மற்ற பிரபல நகரங்களுக்கும், ஏற்றுமதி செய்யக்கூடிய வசதிகள் ஏற்படவேண்டும். குண்டூர் ஜில்லாவைச்சேர்ந்த நரசராவ் பேட்டையில், மடக்கு நாற்காலிகளும், கட்டில்களும், மேஜைகளும் ஏராளமாகச் செய்யப்பட்டு அவைகள் சென்னை வியாபார ஸ்தலங்களுக்கும் விற்பனைக்காக வருகின்றன. சென்னையில் பிரம்புக்கடை, ஒற்றைவாடை, சிந்தாதிரிப்பேட்டை முதலிய இடங்களில் இத்தொழில்பிரபல்யமாகச் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டும், வெளியூர்களுக்கு ஏராளமாக அனுப்பப்பட்டும் வருகின்றன. இன்னும் அஞ்சுமான், ராமகிருஷ்ண மிஷன், செங்கல்வராய நாய்க்கர் கைத்தொழில் பாடசாலைகளில் இவ்வித உற்பத்திச் சாமான்கள் அதிகமாகச் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இவைகளுடன் பல ஜெயில்களில் செய்யப்படும் மரச்சாமான்களும் விற்பனை செய்யப்பட்டு வருவதோடும், வெளியூர்களுக்கும் அனுப்பப்படுகின்றன. எனவே, இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மரவேலைகள் எல்லாம் உள்நாட்டிலேயே செலவழிந்து விடுகின்றன. இனி இவைகள் அந்நிய நாடுகளுக்கு, தேவைகளை அநுசரித்தும், தேசாச்சாரங்களை யொத்தும் செய்தனுப்பும் வசதிகளை நம்நாட்டில் பரப்புவது மிக அவசிய மாகும். இன்னொரு முக்கிய விஷயத்தையும் நம் நாட்டுத் தச்சர்கள் கவனித்து நடத்தல்வேண்டும். பர்மிய, ஜப்பான் சாமான்களைப் பார்த்த மாத்திரத்திலேயே அந்தந்த தேச உற்பத்திச்சரக்குகளென பொதுமக்கள் அனைவரும் பிறரைக் கேளாமலே அறிந்து கொள்வதுபோல் இந்திய மரச்சாமான்கள் நூதனவழியில், பழய வழக்கங்களை அநுசரித்து செய்தல் முறையாகும். இப்பொழுது நம் நாட்டில் செய்துவரும், நாற்காலி முதலிய தட்டுமுட்டுகள், மேற்றிசையாரின் மாதிரிகளைப் பின்பற்றிச் செய்யப் படுபனவைகளாகும். பழய ராஜாங்கங்களிலும், ஜமீன் முதலிய சுதேச பிரமுகர்களின் இல்லங்களிலும், பழயமாதிரி இந்திய நாற்காலிகளெனும் குரிச்சிகளையும், கட்டில், மேஜை, அலமாரி முதலியவைகளையும் காணலாம். இன்னும்வண்டிகள், பல்லக்கு, மேனா முதலியவைகளைச்செய்வதிலும், நம் நாட்டுக் கம்மியர் மிகத் திறமைவாய்ந்தவர்கள். மதுரை கூண்டுவண்டிகளும், வேலூர் ஜட்காவும், தாராபுரம் வில்வண்டிகளும் மிகப்பிரபல மானவைகளாகவும், அந்தந்த ஊர்களுக்கு உரிமையுள்ளவைகளாகவும் இன்றும் செய்யப்பட்டு வருகின்றன. இவைகளிடத்து விசேஷமான அழகும், வேலைப்பாடும், உறுதியும், நாட்டுக்குணங் குறிகளும் நிறைந்து காணப்படுவதுடன், இந்தியரின் விசேஷித்த நாகரீகத்

தையும் விளக்கி காட்டுகின்றன. எல்லாத் தொழில்வன்மையினும் சிறந்துவிளங்கும், இந்நாட்டு பூர்வீக மரவேலைக்காரர்கள் மேற்கண்ட விதமாக அந்நியர் போட்டியில்லாத இம்மரத்தொழில்களை தேவைக்குத் தக்கவாறு மாற்றிச்செய்து, வியாபாரவழியே பெரும் பயனடைவதற்கு இதுவே தக்க தருணமாகும்.

எட்டாம் அத்தியாயம்.

உலோகத் தொழில்.

உலோகத் தொழிலென்பது பொதுவாக பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் முதலிய ஐந்து முக்கிய உலோகங்களாலாகும் தொழில்களையும், உப உலோகங்களாகிய பித்தளை, வெண்கலம், திரா, துத்திநாகம் முதலியவற்றாலாகும் பணிகளையும் குறிக்கும். இவைகளுள் முன்னர் கூறப்பட்ட ஐந்து உலோகங்கள் 'பஞ்ச லோகங்கள்' என்ற தனிப்பெயரை அடைந்து மற்ற உலோகங்கள் நான்குடன் சேர்ந்து நவலோகங்களென வழங்கப்பெற்று வருகின்றன. இவ்வொன்பது உலோகங்களுள் பொன், இரும்பு ஆகிய இரண்டு உலோகங்களும் விஸ்வகர்ம வகுப்பினருள் இரண்டு பிரிவினையாளர்களின் தனித் தொழில்களாக பூர்வகாலந்தொடங்கி ஏற்பட்டுவிட்டமையால், அவை நீங்கிய மற்றய ஏழு உலோகங்களாலாகும் நம் நாட்டுக் கைத்தொழில்களைப்பற்றி மட்டுமேஇங்குபிரஸ்தாபிப்போம்.

இந்நாட்டு உலோகக் கைத்தொழில் சம்பந்தத்தில் உபயோகிக்கப்பட்டுவரும் உலோகங்களனைத்தும் வெளி நாட்டினின்றும், நம் நாட்டிற்கு விசேஷமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றனவேயன்றி, உள் நாட்டிலே பெறப்படுகின்றவைகளல்ல. ஏனெனில், அவ்வித உலோகச் சத்துக்களில் சிற்சில நம்நாட்டில் உற்பத்தியாகின்றன வெனினும், அச்சத்துக்கள் நம்நாட்டுத் தொழில்களுக்கு வேண்டிய அளவிலும், தீவிரத்திலும் கிடைக்காமையாலும், அவைகளைச் சேகரிப்பதற்கான சரீர உழைப்பும், இயந்திரசகாயமின்மையாலும், இத்தொழில்களுக்கான உலோகங்களை அந்நிய தேசங்களினின்றும் அடைந்து, நாட்டுத்தொழில்களென பெயர் மாத்திரமாகச் செய்து வரப்படுகின்றன. ஏதேனும் ஓர் காரணம் பற்றி இவ்வுலோகங்களின் வரவு, இங்கிலாந்து, ஜெர்

மனி, ஆஸ்திரியா, ஜப்பான், ரஷ்யா முதலிய தேசங்களிலிருந்து நின்று விட்டாலும், வரத்தாமதம் அல்லது தடைப்பட்டாலும் நம் நாட்டுத் தொழில்களாகிய இவைகள் வெகுவாகப் பாதிக்கப்படும். நமது நாட்டுத்தொழிலாளர்களும் வேலையில்லாமல் உறக்கங்கொள்ள நேரிடும். ஆயினும், அவ்வித அசந்தர்ப்பங்கள் சமீபத்தில் நேறுவதற்கில்லை. பித்தளைத் தகடு செய்யும் தொழிலை பத்து வருடங்களுக்குமுன் கற்றுத்தேர்ந்த ஜப்பானியர்கள் ஜெர்மன் தகடுகளுக்குப் போட்டியாக சகாய விலைக்கு பித்தளைத் தகடுகளையும், செம்புத் தகடுகளையும் ஏராளமாக அனுப்பி வருகின்றனர். இப்பொழுது அவர்கள் சைனு தேசத்துடன் போர் தொடுத்திருப்பதால் ஜப்பான் தேசத் தகடுகளின் இறக்குமதி தற்காலம் இல்லை யென்றாலும், அந்நிய நாடுகள் இந்த சந்தர்ப்பத்தை நன்கு உபயோகப்படுத்திக் கொண்டு தங்கள் தேச உற்பத்திச் சரக்குகளை இரட்டிப்பாகச் செய்து இறக்குமதி செய்வதால், நம் நாட்டில் உலோகத் தொழிலுக்கு வேண்டிய இவ்வித தளவாடங்கள் முட்டுப்படாமல் கிடைக்கின்றன.

சென்ற வருடத்திய சென்னை மாகாண இறக்குமதியை கவனித்தால், சுமார் 150 லட்சம் விலைகொண்ட செம்பும், பித்தளையும், 250 டன் இடையுள்ள வெள்ளீயக் கட்டிகளும், 2000 டன் நிறையுள்ள அலுமினியமும் இங்கு இறங்கியிருப்பதாகத் தெரிகின்றது. இம்மாகாணத்தில் இன்று சுமார் 8,874 உலோகத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவைகளில் வேலை செய்வோர் 4,44,700 எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. எனவே, ஒவ்வொரு தொழிற்சாலையிலும் சராசரி 50 தொழிலாளர் இருந்து வருகிறார்களெனப் பெறப்படுகின்றது. இவைகளன்றி கும்பகோணம், நாச்சியார்கோயிலில் சுமார் 4,500 வேலைக்காரர்கள் சுமார் 20 லட்சம் மதிப்புடைய சரக்குகளை தங்கள் வீடுகளிலேயே வருடந்தோறும் உற்பத்தி செய்து வருகின்றனர். கோயமுத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த அநுப்பர்பாளையத்தில் சுமார் 2,000 உலோகத் தொழிலாளர் 4 லட்சம் மதிப்புள்ள உற்பத்திச் சரக்குகளை செய்கின்றனர். காஞ்சிபுரத்திலும், வேலப்பாடியிலும், ஸ்ரீ வில்லிபுத்தூர், சங்கர நயினார் கோயிலிலும் வருடந்தோறும் ஒன்று முதல் 3 லட்சம் பெறுமானமுள்ள வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. சென்னை மாகாணத்தில் விஸ்வகர்மரின் ஜனத்தொகை சுமார் 16 லட்சமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அவர்களுள் உலோகத் தொழிலைச் செய்பவர்கள் சற்றேறக்குறைய

கால்பாகங் கொண்டவர்களாயிருப்பினும் அவர்களில் சுமார் ஆறில் ஒரு பாகங்கொண்டவர்கள் வேறு ஜாதித்தொழிலாளர்களாக யிருக்கிறார்கள். காப்புஜாதியாரும், வலமர்களும், மகம்மதியர்களும், மராட்டியரும், கோவாகிருஸ்தவர்களும், கள்ளர்களும் உலோகத் தொழிலைச் செய்து வருகிறார்கள். பெரிய உலோகத் தொழிற்சாலைகளை வைத்து வியாபாரம் நடத்தும் மகம்மதியர்களைச் சென்னையிலும், காரைக்குடி போன்ற இடங்களில் நாட்டுக்கோட்டை செட்டிமார்களையும், கும்பகோணம் முதலிய இடங்களில் கவரைச் சாதி செட்டிமார்களையும் விசேஷமாகக் காணலாம். ஆயினும் இவைகளில் வேலை செய்வோர்களில் பெரும்பாலோர் விஸ்வகர்மத்தொழிலாளர்களே யாவர்.

வெள்ளி வேலை வெகுகாலந்தொடங்கி சென்னையிலும், கும்பகோணத்திலும் விசேஷமாக நடைபெற்று வருகின்றது. பெங்களூரிலும் அப்படியே. முன்னர் பி. ஆர். அண்டு சன்ஸ், பார்ட்டன், டாக்கர் முதலிய கம்பெனிகள் வெள்ளிவேலையில் பிரபலம் பெற்றிருந்தன. இப்பொழுது சென்னையில் பல இந்திய வெள்ளி தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன, அவைகளுள் வீகம்ஸ்ஜி, உம்மிடி ராமய்ய செட்டி கம்பெனி, சுராஜ்மல், பாப்பாலால் முதலிய பெரிய தொழிற்சாலைகளை இங்கு சுட்டிச்சொல்லலாம். இன்னும் சைனபஜார்சாலையில் நூற்றுக்கணக்கான வெள்ளிக்கடைகளில் விநோதமான சாமான்கள் நிரப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. வெள்ளியின் சுத்தமும், வேலையின் அருமைப்பாடும் கம்பெனியின் நற்பெயரையும், வேலைக்காரர்களுக்குக் கொடுக்கும் கூலியையும் பொறுத்திருக்கிறது. பொது ஜனங்கள் சகாயமான இடங்களையே நாடுவதால் தாங்கள் கொடுக்கும் பொருளுக்குத் தக்க சாமான்களை பெறமுடியாமல் போகின்றதோடும், அவைகளைச் செய்யும் தொழிலாளர்களுக்கும் நிந்தையை கற்பிக்கின்றனர். உள்நாட்டு வேலைக்காரர்களின் போட்டியாலேயே இத்தொழிலுன்னதம் குன்றியதோடும் கூலியும் தாறுமாறுகக்குறைந்துவிட்டது. ஒரு ரூபாய் இடைக்கு ஒரு ரூபாய் கூலியாக இருந்த சிற்சில வேலைகளுக்கு தற்காலம் சேர் ஒன்றிற்கு இரண்டு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரையில் கொடுக்கப்படுகின்றது. இயந்திர சகாயத்தால் தகடுகள் அடிக்கப்படுவதாலும், அச்சுகளாலும், கடைச்சல் பட்டரை உதவிகளாலும் டம்ளர், கூஜா, சொம்பு, குடம், தாம்பாளம் முதலியவைகள் பெருவாரியாகச் செய்யப்படுவதாலும் இவ்வேலையின் கூலிகள் வெகுவாகக் குறைந்துவிட்டன.

வெள்ளி இரதம், வாகனங்கள் விமானங்கள் செய்வதில் காரைக் குடிக் கம்மியரை வெல்வது எவராலும் இயலாது. இவர்கள் இவ்வேலை களில் வெகு கைதேர்ந்தவர்கள். பொருளாதார மந்தத்தினால் இவ் வேலைகள் செட்டிநாட்டில் முன்போல் அதிக மும்மரமாகச் செய்யப் படாவிடினும், புதுமை, கல்யாணம் முதலிய காலங்களுக்கென வெள் ளிப்பாத்திரங்கள் ஆங்கு இப்பொழுதும் ஏராளமாகச் செய்யப்பட்டு வருகின்றன. காரைக்குடி வெள்ளிவேலை நிபுணர் அருணாசலமாச்சாரி யாரின் தொழிற்சாலையை தொழில்வல்லோர் பார்வையிடத் தகுந்த தாகும். இங்கு வாகனங்கள் கற்பித ரூபபேதங்களாகச் செய்யப்படா மல் சுபாவீக ரூபங்களுடன் செய்யப்படுவதே குறிப்பிடக்கூடிய நூதன தொழில் முறையாகும். விக்ரஹங்களுக்கான கவசங்கள் குடந்தையிலும், சிதம்பரத்திலும், மதுரையிலும் நடைபெறுகின்றன இது பொது ஜனத்தேவைக்கு மிகஅவசியமான தொழிலல்லவாத லால் தேவஸ்தானங்களால் மட்டுமே ஆதரிக்கப்பட்டு வருகின்றது. இவர்கள் நூதன இயந்திரங்களைக்கொண்டு தங்கள் தொழிலை சீக்கிரம் நடத்திமுடிக்கும் அக்கரை கொண்டவர்களல்ல. மேலேகூறியவற்றால் இந்நாட்டில் வெள்ளிவேலை வெகு உச்சநிலையிலிருந்து வருகின்ற தென்றே சொல்லலாம். எனினும், மட்டவெள்ளியை தொழிலில் உபயோகிக்காதிருக்கும் சட்டங்களையும், 'ஹால் மார்க்' என்னும் பரிசுத்த அடையாளமிடும் கட்டாய விதியையும் அரசாங்கத்தார் மேற்றிசையாரையொத்து, நடைமுதலுக்குக் கொண்டுவந்து விடுவார் களாயின், வாங்குவோர் ஏமாற்றமடையாமலும், நிரபராதிகளான தொழிலாளர்கள் தலைமீது ஏற்றப்படும் வீண்பழியும் ஒழியும்.

மற்றய உலோகத் தொழில்கள் மூன்று முக்கிய பிரிவுகளை யுடையதாகும். அவற்றை 'வாட்டு வேலை', 'வார்ப்பு வேலை,' 'கொட்டு வேலை' யென்று சொல்லப்படும். வாட்டு வேலை யென்பது, பலவித உலோகத் தகடுகளை மட்ட சுத்தப்படுத்திய பின் னர் அவைகளை நெருப்பினுதவிகொண்டு அடித்து பல உரு வங்களைக்கொண்ட பாத்திரங்களையும், தட்டுமுட்டுகளையும் செய்வ தாகும். வார்ப்பு வேலையானது செம்பு, பித்தளை, வெண்கலம், திரா, ஈயம், நாகம், அலுமினியம் முதலிய உலோகங்களை உருக்கி, கருக் களில் வார்த்து பாத்திரங்கள், குத்துவிளக்குகள், மணிகள், பதுமை கள், விக்கிரஹங்கள், விளையாட்டுச் சாமான்கள் முதலியவைகளைச் செய்யும் தொழிலாகும். கொட்டுவேலை யென்பது வெண்கலம் அல் லது முறிமுதலிய சேர்மான உலோகங்களை பக்குவப்படுத்திஅடித்து

உண்கலம், தாலம், கிண்ணம்; வட்டில்கள் முதலியவைகளைச் செய்வதாகும். பல உலோகத்தகடுகளின் வெளிப்புறத்தில் மேல் கிளம்பி உப்பியெழுந்த சித்திரங்களைச் செய்யும் 'நகாசுத்தொழில்' முதலில் சொல்லப்பட்ட 'வாட்டுவேலை'யில் அங்யோங்யப்பட்டிருக்கிறது. அவ்வாறே கடைச்சல் வேலையும், வாட்டுவேலையுடனும், வார்ப்பு வேலையுடனும் ஐக்கியப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டு வேலைகளுள் முன்னர் கூறப்பட்ட 'நகாசுவேலை' பொன்வேலையிலும், வெள்ளிவேலையிலும் ஒரு முக்கிய பகுதியாக விருந்தபோதிலும் உலோகத்தொழில் சம்பந்தத்தில் தனித்ததொரு தொழிலெனக்கூறுவதற்கில்லை.

தென்னிந்தியாவில் பல ஊர்களிலும் இத்தொழில்கள் சாதாரணமாக நடைபெற்று வருகின்றனவெனினும், ஒவ்வோர் தொழிலும் ஒவ்வோர் ஊர்களில் பிரபலமாக நடத்தப்பட்டு அவ்வூர்களுக்கு விசேஷ பிரக்யாதியை விளைவித்திருக்கின்றது. உதாரணமாக வாட்டுவேலையின் வேலைப்பாட்டிற்கும், தொழிலுன்னதத்திற்கும் கும்பகோணம் பிரதம ஸ்தானம் பெற்றிருக்கின்றது. வார்ப்பு வேலையில் மதுரையும், பாலக்காடு, காளஹஸ்தி, நாச்சியார்கோயில், தாவூத்கான்பேட்டை முதலிய இடங்கள் கீர்த்திபெற்றிருக்கின்றன. கொட்டுவேலையில் அநுப்பர்பாளையம், நிலக்கோட்டை முதலிய ஊர்களின் பெயர்கள் நீடித்து வழங்குகின்றன. நகாசுத்தொழிலின் நாணயத்திற்கு தஞ்சாவூரும்,காரைக்குடியும் கவுரவம் பெற்றிருக்கின்றன. மற்றொரு சார்புத்தொழிலாகிய கடைச்சல் வேலையின் அருமைப்பாட்டிற்கு பாலக்காடு முதல் ஸ்தானத்தையும் கும்பகோணம், காஞ்சீபுரம் முறையே அடுத்த ஸ்தானங்களையும் வகித்துவருகின்றன

இவ்வூர்களில் செய்யப்படும் வேலைகளை நாமே புகழ்ந்துகொண்டாடுகிறோமேயன்றி, அவை அந்நியநாட்டாரால் புகழ்ந்துகொண்டாடப்பட்டவைகளல்ல. ஏனெனில், உலோகத்தொழிலாலாகிய சாமான்கள் அயல்நாடுகளுக்கு விசேஷமாக ஏற்றுமதிசெய்யப்படுகிறதில்லை இந்நாட்டு உலோகப்பாத்திரங்கள் அவர்கள் நாகரீகங்களுக்கும், வழக்கொழுக்கங்களுக்கும் பொருத்தமுள்ளவைகளாகா. எனினும், மின்சார வசதிகளும், சமையல்வேலையும் அயல்நாடுகளில் அவலம்பிக்கப்படவே செம்புகெட்டில்களும், தட்டுமுட்டுகளும் இப்பொழுது ஏராளமாக ஆங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வித நூதன தொழில்கள் இந்நாட்டிற்கும் மிக்க பயனளிப்பதோடும் அந்நியநாடுகளுக்கும் செய்தனுப்பப்படலாமென்பதை இங்கு குறித்துக்காட்டுறோம்.

நிற்க, இந்நாட்டினின்றும் ஏற்றுமதி செய்யப்படும் உலோகத் தொழில் சம்பந்தத்தாலாகிய சாமான்களை கவனித்தால் ஐரோப்பிய மாதிரிகளுக்கிணங்கிய கொஞ்சம் வெள்ளிச்சாமான்களும், பல உலோகங்கள் பதித்த 'இன்லெய்டு' தாம்பாளங்களும், பொம்மைச்சாமான்களும், யானை, குதிரை, ஒணான், பாம்பு, பல்லி முதலிய வார்ப்படச் சாமான்களும், பூந்தொட்டிகளைப் போன்ற சிறிய பித்தளை, செம்பு அண்டாக்களும் தவிர வேறு சாமான்கள் இந்நாட்டிலிருந்து வெளிப் போவதில்லை. எனவே, இங்கு உற்பத்தியாகிற சாமான்களனைத்தும் உள் நாட்டிலேயே விசேஷமாக விற்கப்படுகின்றன வென்றும், இத் தொழில்கள் தினேதினே விருத்தியாகிக்கொண்டு வருகின்றனவென்றும், அளவற்ற அலுமினிய உற்பத்திச் சரக்குகளால் உலோகத் தொழில் பாதிக்கப்பட வில்லையென்றும் பெறப்படுகின்றது. வெகு காலமாக கையாளப்பட்டுவந்த மண் பாத்திரங்களின் உற்பத்தி குறைந்து, மிக்க எளியவர்களும் தற்காலம் உலோகப்பாத்திரங்களுக்கு ஆசைப்பட்டு அவைகளை ஆண்டுவருவதால் பொதுமக்களின் சுபிட்ச நிலைமையையும், நாகரீக முதிர்ச்சியையும் ஒருவாறு ஊகித்தறியலாம். இஃது நம் நாட்டு உலோகத் தொழில்களின் எதிர்கால முன்னேற்றத்தை உணர்த்தும் அறிகுறிகள் ஆகலாம்.

நிற்க, சில உலோகத் தொழிலில் நம் நாட்டுக்கம்மியர் மிகவும் கைதேர்ந்தவர்களென்றே சொல்லவேண்டும். ஆரம்ப முதல் அந்தியம் வரையிலும், அதாவது தகடடித்தல் முதல் மெருகிட்டு தீர்மானஞ் செய்கிறவரையில் ஒரு வேலையை ஒருவரே செய்துமுடிக்கும் சாமார்த்தியத்தை அந்நியநாட்டார் மிகவும் வியந்து கொண்டாடி, அத்தகைய தொழில் வல்லோருக்கு இங்கு கிடைக்கும் கூலிக் கட்டணங்களையும், அவர்கள் படாடோபமின்மையையும் பார்த்து ஆச்சரிய முறுகிறார்கள். இவைகளினால் மட்டுமே நமது குலப்பணிகளினிடத்துள்ள குற்றங்களும், குறைபாடுகளும் கருத்தாளிகளின் கண்ணிற்குப் புலப்படாமற் போகா. ஆகையின், நவீன முறைகளை அநுசரித்து நமது நாட்டு உலோகத்தொழிலின் குறைபாடுகளைத் தவிர்த்து அவைகளைப் பலவழியிலும் செழிப்புறச்செய்ய முயலவேண்டும். நவலோகங்கள் நமதுவேலைகளுக்குரியவைகளாக விருந்தபோதிலும், அந்நிய நாட்டாரால் கையாளப்படும் மற்ற உலோகங்களையும், அவைகளின் உபயோகங்களையும் நம்நாட்டுக் கம்மியர் நன்குணர்ந்து, உபயோகித்த லவசியமாகும். மேற்றிசையாரால் சுமார் 64 உலோக சேர்மானங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இவைகள் ஒவ்வொன்றையும், உபயோகத்திற்குத் தக்கபடி, சாஸ்திரீய மான வழி தெரிந்து உபயோகப்படுத்தி வருகின்றனர். புதிய உலோகங்களை கையாடுவதினால் தொழில் கஷ்டம் நேராதென்பதற்கு 1898-ம் வருஷத்தில் சென்னை சித்திரகலா வித்யாசாலையில் தோன்றி, தென்னாடெங்கும் பரவியிருக்கும் அலுமினியத் தொழிற் சாலைகள் தக்க சான்று பகரும். உலோகத் தொழிலை பிரபலமாகச் செய்வதற்கு நம்நாட்டுக் கம்மியர் அந்நிய நாட்டாரின் பற்றவைப்புப்பொடிகளையும், அவைகளை வைத்தூதும் முறைகளின் பேதா பேதங்களையும் கையாளப் பழகவேண்டும். இப்பொழுது இந்நாட்டில் கையாளப் படும் பொடிவகைகள் பழயமாதிரியானவைகளும், கடின நெருப்பில் உருகக்கூடியவைகளாகவு மிருப்பதால் பற்றவைப்பில் பல குண தோஷங்களிருந்து வருகின்றன.

உலோக வாட்டு வேலையைச் சுலபமாகவும், இலாபமுடனும் செய்ய வேண்டுமானால், முக்கியமாக நம்நாட்டுக் கம்மியர் தகட்டாலைகளைக் கையாள வேண்டும். இவ்வித ஆலைகளை வெளிநாட்டினின்றும் வர வழைக்கத் தேவையில்லை. சென்னையில் இவ்வித ஆலைகள் செய்யப் பட்டு சொற்ப விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன. தகடுகளை வெட்டவும், துளைக்கவும், வில்லைபோடவும் அயல் நாட்டார் உபயோகிக்கிற 'பஞ்ச்' என்னும் இயந்திரத்தின் உதவி மிக அவசிய மாகும். இவ்வியந்திரங்களனைத்தையும் தற்காலம் மின்சார சக்தி சுலபமாக எல்லா முக்கிய ஊர்களிலும் கிடைப்பதால் அதனை உபயோ கித்துக்கொள்வது நன்று. தகடுகளைச் சமனாகக் காய்ச்சுவதற்கு பழய தோல் துருத்திகளுக்குப் பதிலாக சுரிகுழற் றுருத்திகளை உபயோ கித்தல் வேண்டும். இன்னும் வாட்டு வேலைக் குபயோகமான சுத்தி யல்கள், கரணைகள், பணைகள் முதலியவைகளையும் பகுத்தறிந்து உப யோகப்படுத்தலும் வேண்டும்.

நம்நாட்டுக் கம்மியர் வார்ப்புவேலையை மிகவும் கீழ்த்தரமாகவே இன்னும் செய்துவருகின்றனர். இவ்வேலையில் நாம் மற்றெல்லா நாட் டாரிலும் மிகத்தாழ்ந்து நிற்கின்றோம். வார்ப்படக் கரு அல்லது மவுல்களை அப்போதைக்கப்போது மண்ணினால்செய்து வார்ப்பு முடிந்த உடன் உடைத்து அழித்து வருகின்றோம். இதனால் வார்ப் பிக்கப்படும் சாமான்கள் அநாவசியமாக மிகக் கனமாயிருப்பதோடும், உட்கூடுவைத்துச் செய்யவும் முடியாமல்போகிறது. சிற்சில வேலைகள் மெழுகுகட்டி மண்ணைக்கொண்டு செய்யும் கருக்களில் வார்ப்படம் செய்வதவசியமாயினும், கோயில்மணிகள், வெண்கலப்பானைகள்

போன்ற பெரிய வஸ்துக்களை கருக்கட்டி வார்ப்பதை மேற்றிசையார் இகழ்கின்றார்கள். ஒரு மணியைக் கருக்கட்டி வார்ப்பதற்கு சுமார் 2 அல்லது 3 மாதங்கள் பிடிக்கின்றன. அவ்வேலையை ஆரம்பிப்பதற்கும், கருக்களை நன்றாய் உலர வைப்பதற்கும் நம்நாட்டார் கோடை காலத்தை எதிர்பார்த்திருக்கின்றனர். சேர்மான மணல் கொண்டு வார்ப்பட வேலைசெய்யும் மேற்றிசை தொழிலாளர்களுக்கு வெயிற் காலம், மழைக்காலம், பனிக்காலம் என்ற வித்தியாசமேயில்லை. ஒரு நாள் ஒன்றிற்கு 40 மணிகளை பெட்டியிட்டு வார்க்கும் சக்தி அவர்களுக்குண்டு. இந்நாட்டு வார்ப்பட வேலைக்கு சேர்மான மண்ணை உபயோகித்தலும், எண்ணை மண்ணைக் கையாளுதலும், பெட்டியிட்டு வார்ப்பித்தலும் இத்தொழிலை வியாபார முறையில் பெருக்குவதற்கு தக்க சாதனங்களாக யிருக்கின்றன.

இரும்பு இனாமல் தட்டுகளும், அலுமினியத் தட்டுகளும், கலங்களும் இந்நாட்டில் மலியவே, உலோகக் கொட்டுவேலை தற்காலம் குன்றிவருகின்றதெனச் சொல்லலாம். இரண்டொரு ராத்தல் இடையில் செய்யக்கூடிய உண்கலம், வட்டில், தாலம் முதலியவைகளை அதிகக் கூலிக்காசைப்பட்டு பத்து முதல் இருபது ராத்தல் இடையிலும் கால் அங்குலம் முதல் காலே அரைக்கால் அங்குல கனத்தில் செய்யப்பட்டு வருவதை யார்தான் வாங்கி உபயோகிக்க முன்வருவர்? இதன் மர்மத்தை நன்குணர்ந்து பாலக்காட்டுக் கம்மியர் தங்கள் உண்கலங்களையும், மற்ற வார்ப்படச் சாமான்களையும் வெகு மெல்லியதாகச் செய்து விற்று இலாபம் பெருவதை நம் நாட்டு இதர கம்மியர்களும் பின்பற்றுவது அவசியமாகும்.

விளையாட்டு வார்ப்படச் சாமான்களாகிய யானை, குதிரை, மாடு, ஆடு, கோழி, பாம்பு, பல்லி, ஓணன் முதலியவைகள் நம் நாட்டில் தத்ரூபமாகச் செய்யப்படுவதில்லை. நம்மனோர் குதிரையை நினைந்து ஒரு பிரதிமை செய்ய ஆரம்பித்தால், அது வார்த்து முடிவடையும் போது உலகில் இல்லாத ஓர் நாற்கால் பிராணியின் ரூபத்தை அடைந்துவிடுகிறது. ஏனெனில், நம்மனோர்க்கு சித்திரம் எழுதும் பழக்கம் இல்லாமையே இவ்வித ஆபாசங்களுக்குக்காரணமாகின்றது. இந்த நிலையில் நம்நாட்டு வார்ப்பட வேலைக்காரர்களுக்கு 'ஸ்டாச்சூஸ்' என்னும் உருவச்சிலை வார்க்கும் சக்தி எங்ஙனம் ஏற்படும்? உருவச் சிலைகள் ஒருவரின் ஞாபகார்த்தமாக நாட்டப்படுவனவைகளாதலால், அவைகள் சுயரூபம் பெற்றிருப்பதும், விலை சரசமாகத்தீர இடை குறைந்திருப்பதும் மிக அத்தியாவஸ்யமாகும். நம் நாட்டுக் கம்மி

யருக்கு இவ்விரண்டு சக்திகளுமில்லை. தென்னிந்தியாவில் ஆங்காங்கு சிற்சில உருவச்சிலைகள் பூர்வத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றுள் கும்பகோணம் சக்கரபாணி சுவாமி சந்நிதானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் தஞ்சாவூர் சிவாஜி மகாராஜாவின் உருவச்சிலையே இங்கு குறிப்பிடத் தகுந்தது. இச்சிலை பித்தளையில் வார்க்கப்பட்டு, மேலே கீறல் அல்லது போகரை வேலையும் செய்யப்பட்டிருக்கிறது. இதின் உயரம் சுமார் 6½ அடியும், இரண்டே முக்கால் அல்லது மூன்றடி [illegible]ள்ளதாகவும் இருக்கிறது. சென்னை முதலிய ராஜதானி நகரங்களில் நாட்டப்பட்டிருக்கும் விக்டோரியா மகாராணியார், எட்வர்டு, ஜார்ஜ் சக்ரவர்த்தியார், மன்றோ, நீல், வெல்லிங்டன் முதலிய உருவச்சிலைகளின் அருமைப்பாடுகளைக் கண்டு ஆனந்தித்த கண்களுக்கு சிவாஜி மகாராஜாவின் சிலை மிக்க அருவெறுப்பையும், உள்நகைப்பையும் உண்டுசெய்யுமென்பதற்கையமேயில்லை.

உலோகத் தொழிலை பிரபலமாகச் செய்வதற்கு இயந்திரங்களினுதவி மிகுதியாகப் பெறல் வேண்டும். இவ்வேலைகளுக்குரிய இயந்திரங்களை ஒருவர் ஏகதேசத்தில் வாங்குவதியலாது. ஆகையின், கூட்டுச் சேர்ந்து பெருத்த மூலதனத்தை ஒவ்வொரு வர்த்தக ஸ்தலங்களிலும் சேகரித்து அங்கு செய்யப்படுகிற சரக்குகளை வியாபார முறையில் ஏராளமாகச்செய்து விற்பனை யாக்குவது நன்றாகும். ஜெர்மனி, ஜப்பான், ஆஸ்திரியா முதலிய தேசங்களிலிருந்து இங்கு ஏராளமாக இறக்குமதியாகும் பித்தளை டம்ளர்கள், டபராக் கிண்ணங்கள், தட்டுகள், தாம்பாளங்கள் செய்யும் இயந்திரங்களையுடைய தொழிற்சாலைகளை ஸ்தாபிப்பதற்கு ஆரம்பத்தில் சுமார் ரூபாய் மூவாயிரம் போதியதாகும். மின்சாரசக்தி எங்கும் இப்பொழுது சுலபத்தில் கிடைப்பதால் அதிக விலைகொண்ட ஆயில் இஞ்சின்கள் இச்சாலைகளுக்கு வேண்டியதில்லை. பெங்களூரில் இவ்வித தொழிற்சாலையும், [illegible] ஒரு தொழிற்சாலையுமிருந்து வந்தாலும், அவைகள், [illegible] நிலையாக, வேறு பொது ஜனங்களின் தேவைக்கும், உபயோகத்திற்குமான, பாத்திரங்களை உற்பத்திசெய்யவில்லை. ஆயினும், அந்த டிப்பன் அடுக்குத் தூக்குகள் அச்சுமான பித்தளை தகட்டில் செய்யப்பட்டு வெகு அழகாகவும், மனதிற்கு இன்பந்தரும் வகையில் செய்யப்பட்டிருக்கின்றன. அவை போன்றவும், அதற்குமேலான சாமான்களைச் செய்யக்கூடிய சாமர்த்தியம் தென்னாட்டுக் கம்மியருக்கும் உண்டு. அவ்வித பாத்திரங்களை இங்கு

உற்பத்திசெய்து வெளிப்புறத்தில் நிக்கல் பூச்சும், உட்புறத்தில் வெள்ளியப்பூச்சும் பூசிவிற்றால் அவற்றை வாங்காதார் யாரே! குண்டுசித்தொழிலும் 'சேப்டிபின்' எனப்படும் குத்தூசி செய்யும் தொழிலும் குறைவற்ற செல்வத்தைக் கொடுக்காதா? இத்தொழில்களுக்கு வேண்டும் மூலதனம் ஓர் ஆயிரம் ரூபாய் ஆகும். இன்னுமிவைபோன்ற நம்நாட்டார் கவனத்திற்குரிய சிறிய, இலாபந்தரக்கூடிய தொழில்கள் பல விருக்கின்றன. வெளி நாடுகளுக்கு அனுப்பப்படும் வார்ப்பட விளையாட்டுச் சாமான்களின் வேலைப்பாடுகளையும், மெருகையும் நம்நாட்டுக் கம்மியர் விருத்திசெய்ய வேண்டும். அதற்காகவேண்டிய தனித்த பித்தளை வார்ப்பட தொழிற்சாலைகளும் மண்மூசைகளுக்குப்பதிலாக அதிக சரக்கை உருக்கக்கூடிய, இரும்பு தகட்டாலாகிய சூளைகளும், பெட்டியிட்டு வார்க்கும் பழக்கத்தையும் பெற வேண்டும். ஈயம், துத்தநாகம் முதலியவைகளால் செய்யப்படும் விளையாட்டு வார்ப்படச் சாமான்களை விளக்கெண்ணை கலந்த மண்ணில் வார்ப்படம் செய்தால் வேலை வெகு சுத்தமாக இருப்பதோடும், வியாபார முறையில் ஏராளமாக உற்பத்தி செய்வதற்கும் அநுகூலமாகும். தென்னாட்டில் ஓர் விஸ்வகர்மர் கருக்கட்டி வார்க்கப்பட்டு வந்த பித்தளைக் குத்துவிளக்குகளை பெட்டியிட்டு வார்த்து வேலையை வெகு விரிவாகவும், துரிதமாகவும் செய்து வருகின்றனர். இதைப் போலவே தொழில் வல்லோர்கள் தங்கள் மூளையினுதவிகொண்டு வேலைகளை பாகுபாடுபடுத்திக்கொண்டு ஒரே ஒரு வேலையை வியாபார முறைக்குக் கொண்டுவருவார்களாயின் நமது வீட்டில் செய்யப்படும் உலோகக் குடிசைத் தொழில்கள் மிகப் பிரக்கியாதி யடைவதோடும், விசேஷ இலாபமுந் தருவனவாகும்.

விளையாட்டுச் சாமான்கள் செய்முறையில் சில பலநூதன வழிவகைகள் கையாளப்பட வேண்டும். வெறும் வார்ப்படமும், உருக்களும் மட்டுமே அந்நிய நாட்டார் கவனத்தை கிரகிக்கமாட்டாது. வேலைப்பாட்டில் சில விசித்திரங்களும், வர்ணப் பூச்சுகளும் அதியவசியமாக நுழைக்கப்படுவதால் அவைகளின் தேவையை அதிகப்படுத்தலாம். உதாரணமாக ஜெய்ப்பூர் முதலிய வடநாடுகளிலிருந்து இங்கு அனுப்பப்படும் பித்தளை விளையாட்டுச் சாமான்களையும், தட்டு, கூஜா, ஹுக்காசொம்புகள் முதலியவைகளில் பலவித நிறங்கொண்ட 'இனமல்' என்னும் அழியா வர்ணப் பூச்சுகள் பூசியிருப்பதைப் பார்க்கலாம். இவ்விதப் பூச்சுகளிடும் தொழில் மர்மத்தையும், பழக்கத்தையும் நம் தென்னட்டுக் கம்மியர்கள் தெரிந்தவர்களல்ல.

இத்தொழில் மிக இலேசானது. அதிக கடினமானதுமன்று. எனவே இதன் பழக்கத்தை வடநாடுகளுக்குச் சென்றேனும் இரண்டொருவர் அடைந்து வருவார்களாயின் இத்தொழில் இங்கு மிகப்பிரபல்லியமடைவதற்கு ஹேதுவாகும். இன்னும் மற்றொரு குறைவையும் தென்னாட்டுக் கம்மியர் போக்கிக்கொள்ள வேண்டும். தீர்ந்த உலோகப் பாத்திரங்கள்மீதும், விளையாட்டுச் சாமான்கள்மீதும் வெட்டுப் போகரைகொண்டு கீற்றுச் சித்திரவேலை செய்வதை இனி நிறுத்தி, 'எங்கிரேவிங்' என்னும் பிடிப்போகரைக் கொண்டு செய்தலவசியமாகும். உலோகக் கடைச்சல் வேலையைச் செய்வதற்கு மெற்றிசை 'லேத்' என்னும் முள் கடைச்சல் பட்டரைகளினுதவி அவசியமேயில்லை. நமது நாட்டு கடைச்சல் பட்டரைகளும், மரக்கடைச்சல் பட்டரைகளும், கைச்சக்கரங்களைக் கொண்டும், மின்சார சக்தியைக் கொண்டும் சுழற்றப்பட்டால் அவைகளே நமது நாட்டின்தேவைகளுக்கும் உற்பத்திச் சரக்குகளுக்கும் போதுமானவைகளாகும். இன்னும் உலோகத்தொழிலைக் கண்ணியமாகவும், இலாபகரமாகவும் நடத்தும் எண்ணிறந்த வழிகள் இருக்கின்றன. இத்தொழிலை வழியறிந்து சில முக்கிய ஸ்தலங்களில் நமது நாட்டுக் கம்மியர்களும், அரசாங்கத்தாரும் ஆரம்பிப்பார்களாயின், அது காரணமாக உலோகத்தொழிலில் ஒரு பெரும்புரட்சி உண்டாகுமென்றும், தொழிலாளர்களின் வறுமை நீங்குமென்றும், நாட்டின் பொதுமக்கள் நாகரீக வாழ்க்கையை தொடர்ந்து நடத்தக்கூடுமென்றும் உறுதிகூறுவோம்.

ஒன்பதாவது அத்தியாயம்.

சிற்பத் தொழில்.

உலகில் அற்புத வித்தைகளில் தலைசிறந்து கொண்டாடப்படும் இத்தொழில் விஸ்வகர்ம சந்ததியாரின் பாரம்பரிய உரிமையாகவும் அவ்வகுப்பினருள் ஒரு பகுதியாரின் தனித்த தொழிலாக இருந்து வராவிடினும் இத்தொழிலைப்பற்றி இங்கு பிரஸ்தாபிப்பதற்கு இடமிருந்திராது. எனவே நம்நாட்டு சிற்பத்தொழிலின் அற்புதங்களையும் இங்கு சற்று ஆராய்வோம். நம் பாரதநாட்டு பழம்புகழனைத்தும் நம்நாட்டு சிற்பிகளின் சிற்ப நூல் வன்மையாலும், அக்காலத்திய

அரசர்களின் அபிமானத்தாலும், பக்திமேலீட்டாலும் நிலைநாட்டப் பெற்றவையாகும். அவைகளின் வழியே நம்நாட்டின் சீரும், சிறப்பும் பூர்வ நாகரீக நிலையையும், சரித்திர வரன்முறைகளும் அந்நிய நாட்டார் பலராலும் அறிந்துகொண்டாடப்படுகின்றன. சிற்ப சாஸ்திரங்களாலும், இந்நாட்டுச் சிற்பிகளின் கையற்புதத்தாலும் இங்கு நிருமிக்கப்பட்டுள்ள ஆலயங்களும், மணிமண்டபங்களும், கூடகோபுரங்களும், நீராழிமண்டபங்களும், கோட்டை, கொத்தளங்களும், பிரதிமை நிர்மாணங்களும் இந்நாட்டில் நிலைபெறுதிருப்பின் இந்தியரை பண்டைய நாகரீகம் கொண்டவர்களென ஒப்புக்கொள்வது மிக கடின காரியமாகும். நமது பண்டைய ஆலயப்பணிகளின் இணக்கமும், கைவேலைகளின் திறனும், விளக்கமும் மிகுந்த சாசுவதத்தன்மையை அடைந்து நிற்றலால், நம்நாட்டின் பெருமையும் நம்நாட்டின் சிற்பிகளின் கீர்த்தியும் பலகாலும் நீடித்திருக்கத் தடையில்லை. என்றாலும், நாட்டுச் சிற்பத்தாலாகிய நிர்மாணங்களும், அக்கைங்கர்யங்களை நிர்வகிக்கும் கர்த்தாக்களின் தொகையும், தம்மூதாதையர்கள் செய்துவந்ததுபோல் மகத்தான சிற்ப சாஸ்திர ஆராய்ச்சியும், உண்மையான சிற்பத்தை பகுத்தறியும் சக்தியும், அவைகளின் தாரதம்மியங்களை சீர்தூக்கும் உணர்ச்சியும் பெற்றுள்ள பொதுஜனங்களின் தொகையும் நம்நாட்டில் நாளுக்குநாள் குறைந்துவந்து நம் நாட்டுச் சிற்ப வேலைகளும் வெகுவாகக் கெட்டுவிட்டன.

இவ்வித சீர்கேடு மகம்மதியர் தென்னிந்தியாவை படையெடுத்த காலத்தே தோன்றியதெனினும், அவுரங்கசீப் காலத்தும், திப்புசுல்தான் காலத்திற்குப்பின்னும் நூதன ஆலயப் பிரதிஷ்டைகளும், விக்ரஹ நிர்மாணங்களும், நமது நாட்டில் அற்றே போயிற்றெனலாம். ஆலய, அரண் முதலிய நிர்மாணங்கள் அற்றுப்போகவே அரசர்களால் அபிமானிக்கப்பட்டு, பிரக்யாதியுடன் வாழ்ந்திருந்த பரம்பரை சிற்பவம்சங்கள் நசித்துவிட்டன. சிற்பத்தொழிலால் பயன் பெறாத அவர்களின் சந்ததியார் ஜீவனத்தைக்கருதி விஸ்வகர்ம வம்சத்தினர்க்குரிய மற்றய நான்கு தொழில்களிலும், முக்கியமாய் பொன் வேலையில் பிரவேசிக்கலாயினர். அதனோடும் புறமதங்களும், அவைகளின் கொள்கையைப் பரப்பும் மதபோதகர்களும், நவீனநாகரீகமெனப்படும் அலைத்திரள்களும் கணக்கின்றி நம்நாட்டில் பரவவே, இந்து மதத்தின் உயர்வும், ஆலயங்களின் அவசியமும், தேவாலயங்களின் உரிமையும் பொதுமக்கள் கவனத்தினின்றும் மெல்ல நழுவலாயின. தாழ்ந்த வருணத்தாரின் ஆலயப்பிரவேசம் அரசாங்க

ஆதரவையும், பொதுமக்களின் பிரீதியையும் பெற்றுவரும் இந்நாளில் பண்டைய சிற்பத்தொழில் நம்நாட்டில் இனி முன்போல் பரிமளிக்கு மென எண்ணுவது வீணாகும்.

சிற்ப சாஸ்திரங்களுக்கு உரிமையாளரான விஸ்வகர்மர்கள் சிற்ப சாஸ்திரங்கள் எழுதப்பட்டிருக்கும் சமஸ்கிருத பாஷையையும், வைதிகப் பழக்கத்தையும் துறந்து, சிற்பநூல்களின் நாமதேயங்களைக் கூட மறந்திருக்கின்றனரென ஆசியர் ராமராஜு என்பவர் சென்ற 80-வருடங்களிற்கு முன் இயற்றியுள்ள "இந்திய சிற்பம்" என்னும் நூலில் இயம்பியிருக்கின்றனர். சமஸ்கிருத பாஷா ஞானம் சிதையவே, அத்துடன் சிற்பசாஸ்திர ஞானமும், மற்றய சமய நூற்களின் தேர்ச்சியும், வைதிகவொழுக்கமும், வேத மந்திர பாராயணமும், பிரம்ம தேஜஸும், செல்வமும் நாளுக்கு நாள் குறைந்து ஒழிந்து விட்டன.

இவ்வித பரிதாபகரமான நிலைமையிலும், இந்நாட்டில் சிற்சிலர் தங்களைச் சிற்பிகளென்றும், சிற்பசாஸ்திரங்களை அறிந்த ஸ்தபதிகளென்றும் சொல்லிக்கொள்கின்றனர். இவர்களில் இரண்டொருவரை ஆங்காங்கு ஒப்புக்கொள்ள வேண்டுமாயினும், பெரும்பாலோர் அவ்வித பெயருக்கு பொருத்த மற்றவர்களாகவிருந்து வருகின்றனர். நம்நாட்டு சிற்ப சாஸ்திரங்களோ கேவலம் கட்டுந்தொழில்களைப் பற்றி மட்டும் கூறுவதன்று. உளிகொண்டு கல்லையும், மரத்தையும் வெட்டி அடிப்பதென அறைவதுமன்று. சிற்பசாஸ்திரங்கள் இந்திரியரின் மேலான மனோதர்மத்தையும், பூதபௌதிகங்களைத் தழுவிய வர்த்தமானங்களையும், இன்னும் பல்வேறுபட்ட அரிய விஷயங்களையும் அறிவுறுத்துவனவாகும். சிற்பத்தாலமையும் கட்டிடங்கள் சிலபல விதிவாய்ப்பாட்டிற்கிணங்கி, முக்கியமாய் அழகு, பரிமாணம், உன்னதம், அலங்காரம், விசித்திரம், வேலைப்பாடு, அடுக்குமுறை முதலிய வனப்புகளை உள்ளடக்கி வேலைநியமங்களை அநுசரித்தவைகளாயிருத்தல்வேண்டும். அன்றியும், அவைகள் மோட்சசாதனத்தை அறிவுறுத்துவனவாய் தத்வார்த்தங்களை தெற்றென விளக்குவனவாயிருத்தலும் வேண்டும். உள்மனை சதுரித்தல், ஒதுக்குமுறை உணர்தல், அடுக்கு நிலையறிதலாகிய வன்மைகளும் சிற்பத்திலடங்கும். பூமிசோதனை, நீரோட்டமாய்தல், சாதனப்பரீட்சை, சல்லிய மெடுத்தலாகிய சார்புத்தொழில்களும் சிற்பத்தில் சேர்க்கப்படும். சிற்பத்தொழிலைக்கையாளக் கூடியவர்களின் இலட்சணங்களையும், குணாதிசயங்களையும் அவர்கள் உபயோகிக்கும் ஆயுத, இயந்திர சாதனங்களை

இயற்றும் வகைகளையும், வேலைகளை ஆரம்பிக்கும் நற்காலங்களையும் சிற்ப நூல்கள் குறிப்பிடும். கட்டிடங்களில் உபயோகிக்கும் தளவாடங்களின் சக்தி, சாதன முதலியவைகளை முன்னுணர்ந்து குற்றமுள்ளவைகளை நீக்கி, குணமுள்ளவற்றை இடமறிந்து உபயோகிக்கும் வழி வகைகளையும், அந்நூற்கள் உணர்த்தும். இவைகளனைத்தையும் ஐயந்திரிபறக்கற்று அவைகளை உதாரண பூர்வமாக செய்து காட்டக் கூடிய சிற்பிகள் இந்நாட்டில் மிகக் குறைந்து விட்டனரென்பதில் சந்தேகமில்லை. சிற்பத்திற்குரியரல்லாத அந்நிய சாதியரும் தங்களை சிற்பிகளென்றும், ஸ்தபதிகளென்றும் முழக்கோல்களைக் கொண்டும், சில சுலோகங்களை செவிவழியே தெரிந்து, வாய்வழியே அபசுரமாகப் பிதற்றித் திரிகின்றனர். இத்தகையோரால், இவ்விதப் போலிச் சிற்பிகளால் நம்நாட்டுச் சிற்பத்திற்கு வசைமொழியும், தொழில் முறைக்கு நிந்தனையுமே சித்தித்து வருகின்றது.

நம்நாட்டு சிற்பிகளுக்கு சிற்பசாஸ்திரங்களின் தேர்ச்சியும், சமஸ்கிருத பாஷா ஞானமும் இவ்வாறிருக்க, சிற்பத்தொழில் ஞானமும், கட்டுமுறைகளின் தேர்ச்சியும், கைப்பழக்கமும் அவர்களுக்கிருக்கின்றனவா வென்பதையும் சற்று கவனிப்போம். சாஸ்திரோக்தமாக செய்யவேண்டிய தொழிலை சமஸ்கிருத கல்வியின்றியும் சாஸ்திரஞானமின்றியும், வெறும்கைப்பழக்கத்தால் செய்துமுடித்தல் சாத்தியமாகுமா? அன்றியும், சிற்பசாஸ்திரங்களைப் போதிக்கும் கலாசாலைகள் இந்நாட்டில் நிலைநாட்டப்படாமையால் நவீன சிற்ப முறைகளும், கட்டப்படும் கட்டிடங்களும் சிற்பவிதிவாய்ப்பாட்டிற்குப் பொருத்தமற்றவைகளாகவே காணப்படுகின்றன. சென்னை சர்வகலாசாலையில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இந்திய சிற்ப சாஸ்திரங்களில் ஒன்ருன 'மானசாரம்' பாடமாக வைத்திருப்பினும், தொழிற் பழக்கம் போதிக்கப்படாமையால் மாணவர்கள் வெறும் வாசாஞானமுடையவர்களாகவே வெளி வருகின்றனர். இவர்களால் இந்திய சிற்பத்திற்கு யாதொரு ஏற்றமும் இதுகாறும் ஏற்படவில்லையென்பது முற்றிலும் உண்மையாகும்.

நம் நாட்டு ஆலய ஜீர்ணோத்தாரணப் பணிகளில் தற்காலம் ஆங்காங்கு ஈடுபட்டுவரும், நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களால் எத்தனையோ புராதன ஆலயங்கள் புதுப்பிக்கப்பட்டும், நூதன ஆலயங்கள் சிருஷ்டிக்கப்பட்டும் வருகின்றமையால், இந்நாட்டுச் சிற்பிகளுக்கு சிறிது வேலையும், வருவாயுமிருந்து வருகின்றது. எனினும், உண்மையான சிற்பிகள் அதிகங்கிடைக்காமையால் அந்நிய சாதியர் அதிகமாக

இத்தொழிலில் பிரவேசிப்பதற்கும் இடங்கொடுத்து வருகின்றனர். சிற்பத்திற்குரியரல்லாத சாதியர்களால் செய்யப்படும் பணிகளுக்கும், அதன் கர்த்தாக்களுக்கும் பலவித தோஷங்கள் சிற்பசாஸ்திரத்தில் கற்பிக்கப்பட்டிருந்தும் அவற்றில் கவனம் செலுத்தினரில்லை. இவ்வித பாரம்பரியப் பழக்கமற்ற அந்நியர்களைக்கொண்டு செய்யப்படும் ஆலயப் பணிகளெல்லாம் பழிப்புக்கிடமான கீழ்த்தரவேலைகளாக யிருக்கின்றனவேயன்றி, புராதன வேலைகளின் அழகும், நயமும், ஒடிமான விசேஷங்களும், முக்கியமாக மூர்த்திகரமும் அமையப் பெற்றவைகளாயில்லை. புராதன வேலைகளின் உன்னதத்தையும், நவீன வேலைகளின் நாணயக் குறைவையும், புராதன ஆலயவேலைப் பாடுகளை கண்ணுறுவதற்கென்றே தேசாந்திரிகளாய் இங்கு வரும் ஐரோப்பிய சிற்பிகளும், சிற்பசாஸ்திர நிபுணர்களும், தேசச் சரித்திர ஆராய்ச்சி வல்லோரும், பழஞ்சரிதை வாணர்களும் முன்னதைப் புகழ்ந்தும், பின்னதை இகழ்ந்தும் எழுதியும், பேசியும்வருகின்றனர். எனவே, மதுரை, திருவானைக்காவல், சிதம்பரம் முதலிய க்ஷேத்திரங்களைக்கண்ணுற்ற அவர்கள் ஆங்கு தற்காலம் செய்யப்பட்டுள்ள நவீன சிற்ப வேலைகளைப் பெரிதும் குறைகூறுகின்றனர். இந்தியாவின் அரசாட்சி ஸ்தானமாயிருந்த கல்கத்தா நகரை மாற்றி டில்லிப் பட்டணத்திற்கு கொண்டுபோகப் பட்டபோது, ஆங்கு கட்டப்படும் கட்டிடங்களும், ராஜப்பிரதிநிதியின் மாளிகைகளும், சட்டநிர்மாண சபை மண்டபங்களும், இந்திய சிற்பரீதியை அநுசரித்தே கட்டப் படுவது முறையென்றும், இந்திய சிற்பமுறையில் பல அமைதியும், சௌகர்யங்களும், தேசசரித்திர இணக்கமும் அமையுமென்றும், அக் கட்டிட முறைகளைத் தெரிந்த சிற்பிகள் இந்தியாவில் கிடைப்பது அருமையல்லவென்றும், சிற்ப நிபுணர்களும், இந்திய சிற்பஅபிமானிகளான, ஹாவல், கிங், சிஸாலம் முதலியோர் இங்கிலாந்தில் பெருத்த கூக்குரலிட்டனர். பார்லிமெண்டு சபையிலும் இது விஷயமாய் பல பிரச்னைகளும், பெருத்த தீர்மானங்களும் கொண்டுவந்தபோது, மெம்பர்களின் கருத்துக்கிணங்க இந்திய சிற்பிகளைத் தேடிப்பிடித்து இந்திய சிற்ப முறைகளால் புதிய டில்லிநகர் கட்டிடங்கள் அமைக்கப் படுமென்று உறுதிகூறப்பட்டது. இந்திய மந்திரி இதுவிஷயத்தில் அளித்த வாக்கு பயனற்றதாகவே முடிந்தது. ஏனெனில், இக் கட்டிடங்களனைத்தும் ஐரோப்பிய மாதிரிகளைப் பின்பற்றியும், ஐரோப்பிய சிற்பிகளைக்கொண்டும் நிறைவேற்றப்பட்டன. நமது நாட்டுச்சிற்பிகளும் ஓர் மகத்தான சமயத்தையும், பெருத்த இலாபத்

தையும் இழந்துவிட்டனர்! தென்னாட்டில் தற்காலம் சிற்பிகளுக்கு ஓர் அரியசமயம் ஏற்பட்டிருக்கின்றது. புதிய அரசியல் திருத்தம் அமுலுக்கு வந்தபின் மாகாணசபைகளிரண்டுக்கும் ஏற்ற கட்டிடங்களைக் கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டு அதற்காக ஒருஐரோப்பிய சிற்பியையும் நியமித்திருக்கின்றனர். இக் கட்டிடங்களைக்கட்டி முடிப்பதற்கு சுமார் 20-லட்சம் ரூபாய் பிடிக்கலாம். தற்காலத்திய காங்கிரஸ் ஆட்சியில் இவ்வித பெருந்தொகையும், அந்நிய நாட்டுச் சிற்பியின் உதவியும் இக்கட்டிடங்களில் உபயோகிக்கப்படுமோவென சந்தேகிக்க வேண்டிவருகின்றது. தேச சரித்திர விமரிசைக்காக சாஸ்வதமான கட்டிடங்கள் நிறுவப்பட வேண்டியதவசியமாயினும், அதற்காக வேண்டிய பணச்செலவு செய்வது முக்கியமாயினும், ஐரோப்பிய சிற்பிகளைக்கொண்டு அவைகளை முடிக்கவேண்டுமென்னும் நிர்ப்பந்தமில்லை. ஏனெனின், இந்நாட்டில் ஐரோப்பியமாதிரிகளையும், அவைகளை நாட்டுக்குரிய இந்திய மாதிரிகளுடன் கலந்தும் செய்யக்கூடிய இந்திய சிற்பிகள் சென்னையில் இருக்கின்றார்கள். எனவே, காங்கிரஸ் ஆட்சிக்காரர் யாதொரு ஐரோப்பிய சிற்பியை நியமிக்காமுன்னரே, பத்திரிகைகளில் விளம்பரம்செய்தும், தக்க போட்டிப் பரிசுகளை ஏற்படுத்தியும் இந்திய சிற்பிகளை பிளான்கள் தயாரிக்கச்செய்து அவைகளில் சிறந்த ஒன்றை தேர்ந்தெடுத்து அதன் ஆசிரியரைக்கொண்டு இக்கட்டிடங்களை கட்டிமுடிப்பதே காங்கிரஸ் ஆட்சி சுயராஜ்யத்தின் முதற்படியை அணுகியதாக பிறநாட்டாராலும் கருதப்படும். இன்றேல், இவர்களின் வீரமுழக்கமும், தேசாபிமானமும் வெறும் பேச்சளவாகவே முடியும்.

அரசாங்கத்தார் நோக்கத்திற்கேற்ற சிற்பிகள் டில்லிநகர் நிர்மாண சம்பந்தமாக கிடைக்கவில்லை யென்பதை ஒப்புக்கொண்டாலும், நாட்டுக்கோட்டை செட்டிமார்களின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றக்கூடிய சிற்பிகளைத் தேடிப்பிடித்து அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் கைங்கர்யங்களை இனிது நிறைவேற்றுகிறதாகவும் தெரியவில்லை. கல்லை உளிகொண்டு கொத்தவும், மூலைமட்டத்திற்கு இணக்கமாக அடிக்கவும் தெரிந்தவர்களையெல்லாம் உண்மையான சிற்பிகளாகவும், ஸ்தபதிகளாகவும் கொண்டுள்ளனர். வேலைக்காரர்களின் தொகையைப் பெருக்கவும், வேலைகளைத் தீவிரமாக நடத்தவும் சிற்பவேலைக்குரியரல்லாத மற்றைய சாதியர்களையும் சேர்த்துக் கொள்கின்றனர். எனினும், பண்டைய சிற்பங்களை நன்குணர்ந்து ஆலய ஜீர்ணோத்தாரணம் செய்யப் புகுந்திருக்

கும் நாட்டுக்கோட்டை செட்டிமார்களில் சில சாரார் வாஸ்து சாஸ்திரத்திற்கு அதிகாரிகளல்லாதவர்களைக்கொண்டு நிர்மாணித்தால், அந்த கர்த்தாக்களின் குலத்திற்குக்ஷேமம் ஏற்படாதென்னும் மகரிஷிகளின் வாக்கியத்தின் உண்மையை உணர்ந்தவர்களாய், நமது சிற்பிகளின் பெருமையை உள்ளவாறு ஒப்புக்கொண்டு அவர்களை திரவிய லோபமின்றி தேடிப்பிடிக்கத் தலைப்பட்டிருக்கின்றனர். ஆகையால் இவ்வித அரிய சந்தர்ப்பங்களையும் நம்நாட்டுச் சிற்பிகள் இழந்துவிடுவது அழகன்று. நம்நாட்டு முறையில் சிற்பப் பயிற்சிக்கான கலாசாலைகள் இத்தென்னாட்டில் ஏற்படுத்துவதற்கு இதுவே தக்க சமயமாகும். அதற்காதரவாக சமஸ்கிருதப் படிப்பையும், வைதிக ஆசரணைகளையும் உரிமையாக அடைவதற்கும் இதுவே தருணமாகும். எனவே, இத்தொழிலுக்குரிய விஸ்வகர்மர்கள் பிறர் உதவியையும், அரசாங்க ஆதரவையும் எதிர்பார்த்து காலங்கடத்துவார்களாயின் இத்தொழிலுக்கும், சாதியினுயர்வுக்கும் மீளாப்பங்கம் உண்டாகுமென்பது நிச்சயம். இது விஷயத்தில், இனி அக்கரைகொண்டும், தன்கையே தனக்குதவி யென்பதை ஞாபகத்திருத்தியும், சிற்ப உரிமையும், பண்டையப்பெருமையும் காட்டும் இவ்வகுப்பார் சிற்பப்பாடசாலைகளை ஆங்காங்கு ஏற்படுத்துவது மிக்க அத்தியாவஸ்யமாகும்.

இவ்வித பாடசாலைகள் தென்பிராந்தியத்தில் ஒன்றும், சென்னையிலொன்றும் ஸ்தாபிக்கப்பட்டால் மிக்க நன்மை பயக்கும். மதுரையிலாவது, சிதம்பரத்திலாவது ஒன்று ஏற்படுத்தப்படுவது நன்று. சிற்ப கலைக்கு ஏற்ற சாதனங்களும், தளவாடங்களும் புதரான மாதிரிகளும், மதுரையில் அதிகமுண்டு. இப்பாடசலைகளில் கரசாதனங்களை யொட்டிய வேலைகளும், சாஸ்திர போதனையும், ஆச்சார கட்டுப்பாடும் இருந்து வருதல் அவசியமாகும். சிற்ப சாஸ்திரங்கள் 32 எனவும், உபசிற்பங்களுடன் 64 என்றும் சொல்லிக்கொள்ளப்படுவதால் அவைகளனைத்தையும் அப்பாடசாலையில் போதிக்க முயலுதல் முடியாத காரியமாகும். எனவே, மானசாரம், காசிபம், விஸ்வகர்மியம், மயமதம் போன்ற எளிதில் அகப்படும் முக்கிய சிற்ப நூற்களைமட்டும் போதிப்பதால், வேலையில் அதிக வித்தியாசம் ஏற்படாது. இப்பாடசாலைகளில் வைதிகங்களையும், கும்பாபிஷேகக்கிரியைகளையும், அத்தியயன பழக்கத்தையும் போதித்தலும் அவசியமாகும். சென்னை நகரில் ஸ்தாபிக்கும் பாடசாலையில் மேற்குறித்தவைகள் போதிக்கப்படுவதோடும், தத்சொரூபம் வாய்ந்த பிரதிமை நிர்மாணமும், (' இஞ்சினீ

ரிங்') யாந்திரீகக்கல்வியும் போதித்தல்வேண்டும். சலவைக்கற்களிலும் போரிபந்தர் கல்லிலும், சலாசத்திலும், தடாக்கல்லிலும் வேலை செய்யும் பழக்கத்தை மாணவர்கள் பெறும் வசதிகள் இருத்தல்வேண்டும். சலாசத்து பொம்மைகளை மாணவர்களைக் கொண்டு உற்பத்தி செய்து வர்ணந்தீட்டி விற்பனையாக்கும் வழிவகைகளையும் இங்கு போதிக்கப்பட்டால், இக்குடிசைத்தொழில் ஆங்காங்கு பிரபல்யமாகச் செய்யப்படுவதற்கு ஹேதுவாகும். 'டேபிள் வெயிட்' எனப்படும் காகிதங்கள் பறக்காமல் வைக்கும் மேஜைக் கற்கள் சலவைக்கல்லிலும், கடப்பை கல்லிலும் பலவிதமாகச் செய்யப்படலாம். இக்கற்களின் மீது, முத்துச் சிப்பிகளை கொடிக்கருக்குகளாகப் பதித்து வேலை செய்தால் அவைகள் சிறந்த வியாபாரப்பொருளாக மாறும். இன்னும் மாரளவு கொண்ட உருவச்சிலைகளை 3 அங்குலம் முதல் 12 அங்குலம் வரையில் செய்தலும் சிற்பத்தொழிலால் தற்காலம் வேலையற்றிருப்பவர்களுக்கு தக்க ஊதியம் உண்டாக்கலாம். மகாத்மா காந்தியடிகளின் சிறிய உருவச்சிலைகள் எத்தனை லட்சம் நமது நாட்டில் செலவழியும்? இன்னும் இந்திய தேசாபிமானிகள் எத்தனையோ பேர் இருக்கின்றனர். தோட்டங்களில் வைக்கக்கூடிய நீர் ஊற்றுகளுக்கு உபயோகப்படக்கூடிய பதுமைகள் பலவும் செய்யப்படலாம். நம்நாட்டு பூர்வ மன்னர்கள், வீரர்களின் உருவங்களைச் செய்து விற்பனையாக்கலாம். இப்பொழுது தாராளமாக இந்நாட்டில் கையாளப்பட்டுவரும் 'ரிஇன்போர்ஸ்டு கான்கிரீட்' என்னும் சிமெண்டு வேலையால் எத்தனையோ சித்திரங்களையும், தூண்களையும், போதியக் கட்டைகளையும் கைப்பிடிச்சுவர்களில் வைக்கும் கொடி அல்லது சாரளங்களையும் கட்டிடவேலை சம்பந்தத்தில் செய்து இலாபமடையலாம். எனவே வேலையற்று உறங்கிக்கிடக்கும் நம் நாட்டுச் சிற்பிகள் அம்மியும் இயந்திரமும் அடிப்பதே சுவர்க்கம் சேர்க்கும் தொழிலென எண்ணி காலங்கழிக்காமல், மேற்கூறிய நூதன வழிகளில் முயன்று தங்களுக்கும் தங்கள் சந்ததியாருக்கும், நாட்டின் அபிவிருத்திக்கும் சிற்பத்தொழிலின் உன்னதத்திற்கும் வழிதேடுவது மிக்க வேண்டற்பாலதாகும்.

பத்தாவது அத்தியாயம்.

பொன் வேலை.

பொன், தங்கம் முதலிய முக்கிய சாதனங்களைக்கொண்டு செய்யப்படுகிற தொழில்கள் பொன் வேலை யெனப்படும். அந்த வேலையானது உலோகத் தொழில்களில் ஒன்றாகக் கருதப்பட்டபோதிலும் அது பூர்வத்திலேயே இந்நாட்டு விஸ்வகர்ம வகுப்பில் ஓர் பகுதியாரின் தனித்தொழிலாக ஏற்பட்டிருக்கின்றது. எனவே, அவ்வேலையை கையாளுபவர்களின் நிலைமையைப்பற்றியும் அத்தொழிலின் பல பிரிவினைகளைப்பற்றியும் சிறிது ஆராய்வோம். 1927-ம் வருடம் ஜனக்கணிதையின்படி இம்மாகாணத்தில் பொன் வேலை செய்வோர்களின் தொகை 1911-ம் வருடத்தைவிட நூற்றுக்குப் பதினாறு மடங்கு விருத்தியாகி யிருக்கிறதென்றும், 1931-ம்வருடத்திய ஜனக்கணிதையின்படி 1921-ம்வருடத்தைவிட பொன் வேலை செய்வோரின்தொகை நூற்றுக்குப் பன்னிரண்டு விழுக்காடு குறைந்திருக்கிறதென்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இப்பணியில் ஈடுபட்டிருந்த பொன் தொழிலாளர்களின் தொகை 6886-லிருந்து நூற்றுக்குப் பதினைந்து விழுக்காடு அதாவது, சுமார் 1035-பேர்கள் குறைந்துவிட்டார்களெனவும் பெறப்படுகின்றது. பொன் வேலை நமது நாட்டில் இவ்வாறு குறைந்ததற்குப் பல காரணங்களில், பிரிட்டனுக்கும் மற்ற இடங்களுக்கும் இந்தியாவிலிருந்து தங்கம் அபரிமிதமாக ஏற்றுமதியாவதே முக்கியமாகும். மற்றய வர்த்தகப் பொருள்களின் ஏற்றுமதியைப்போல தங்க ஏற்றுமதியை அளவுகடந்து செய்துவருவதால் இந்தியரின் சுபிட்ச நிலைமைக்கே மோசம் வந்திருக்கின்றது. இவ்வருடம் ஆகஸ்டு மாதத்தில் ஒரே வாரத்தில் பம்பாயிலிருந்து வெளி நாடுகளுக்கு ரூ. 29,32,765 பொறுமானமுள்ள தங்கப் பாளங்களும், கட்டிகளும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. கிரேட் பிரிட்டன் தங்க மதிப்பை தளர்த்தியபின் இதுவரையில் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் தங்கத்தின் பொறுமானம் ரூ. 3,01,90,66,888 என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணம் தவறுதலான பரிவர்த்தனை விகிதமேயாகும். எட்டு அல்லது பத்து வருடங்களுக்குமுன் ரூபாய்—பவுன் பரிவர்த்தனை விகிதத்தை 1 ஷில்லிங் 6 பென்ஸாக சட்டபூர்வமாய் நிர்ணயித்து விட்டதால், நம் நாட்டிலுள்ள விவசாயிகளுக்கும்,

தொழிலாளர்களுக்கும் கஷ்டம் ஏற்பட்டது. 1927-ம் வருடத்திற்குமுன்பு 1 ஷில்லிங் 4 பென்ஸ் விகிதாசாரம் இருந்தபொழுது 1 சவரன் மதிப்புள்ள ஏற்றுமதிக்கு இந்திய விவசாயிக்கு ரூபாய் 15 கிடைத்துவந்தது. 1 ஷில்லிங் 6 பென்ஸ் விகிதாசாரத்தின் கீழ் 1 சவரனின் விலை ரூ. 13-5-6 ஆக குறைந்துவிட்டது. பிறகு யுத்த காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் ஜெர்மனியைப் போலவே, பிரிட்டனும் தலை தூக்கமுடியாமல் கவிழ்ந்துவிட வேண்டிய நிலைமைக்குவந்தது. அப்போது தங்கத்திட்டத்திலிருந்து விலகிய பவுனுடன்கூட இந்தியா மந்திரியார் ரூபாயை பிணைத்துவிட்டார். பவுனுக்கு வெளிநாடுகளில் மதிப்பு குறைந்துவிட்ட சமயத்தில், அதனுடன் ரூபாயை பிணைத்த மிகத்தவறுதலான, நாசகரமான செய்கைதான் நமது நாட்டின் பல சீர்கேடுகளையும், தங்கத்தட்டையும் உண்டுசெய்து விட்டது. இதுமட்டுமல்ல. பிரிட்டன் ஒவ்வொரு சவரன் அல்லது பவுனுக்கும் 29, அல்லது30 ஷில்லிங்வரை இந்தியாவிற்கு கொடுக்குமென்று அக்காலத்து இந்திய மந்திரியாயிருந்த சர். சாமுவேல் ஹோர் ஆசை காட்டினர். ஏழைகளாகவும், கடனில் மூழ்கிக்கிடந்த விவசாயிகளும் பொதுமக்களும், லாபத்தையடையும் நோக்கமாய் வாங்கவந்த முதலாளிகளுக்கும், சவுக்கார்களுக்கும் தங்களிடமிருந்த தங்க நகைகளை யெல்லாம் விற்றுவிட்டார்கள். 1931ம்-வருடத்தில் இங்கிலாந்துக்குஇந்தியாவிலிருந்து முதற்படியாக 5-கோடி பவுன் பொறுமானமுள்ள தங்கம் போய்ச்சேர்ந்திராவிடில், பிரிட்டன் பொருளாதார நிலைமை வெகுகவலைக்கிடமானதாயிருக்கும். இந்தியாவிலிருந்து அந்த நாட்டுக்கு ஏற்றுமதியாகும் தங்கமெல்லாம் பிரிட்டனுக்கு எடுக்க எடுக்கக் குறையாத ஓர் தங்கச் சுரங்கம்போல் உதவுகின்றது. இதனுல் இந்தியாவின் பொருளாதார நிலைமையும், தங்கயிருப்பும்நாளுக்குநாள் மிகவரண்டுகொண்டேவருகின்றன. தேசநன்மையைக்கோரும் எந்த அரசாங்கத்தாரும் வெளிதேசங்களுக்கு தங்கள் தேசத்திய தங்க ஏற்றுமதியை எந்நாளும் அநுமதிக்க மாட்டார்கள்.

இதில் இன்னும் ஒரு மர்மமும் இருக்கின்றது. இது பொதுமக்கள் ஊன்றி உணரவேண்டிய முக்கிய விஷயமாகும். 'தங்கத்திட்டம் நிராகரிக்கப்படுவதற்குமுன்பு கரன்ஸி நோட்டுகளுக்குஈடாக அல்லது பரிவர்த்தனைக்காக தங்கம் வைக்கப்பட்டிருந்தது. ஆனுல் தங்கத்திட்டம் எடுபட்டதுமுதல் நோட்டுக்குப் பதிலாக சர்க்கார் பணத்தை கொடுக்கவேண்டுமென்கிற உத்திரவாதமில்லை. இந்த நிலைமையில்

இந்தியா, பிரிட்டனுகிய இருதேசங்களின் நாணயத்திற்குக் குறைவு உண்டாயிற்றெனலாம். உலக மார்க்கட்டில் பிரிட்டன் தனது நாணயம் கெடாதிருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்தியாவிலுள்ள தங்கத்தையெல்லாம் சேகரித்து வருகின்றது. பிரிட்டனிடமும், பிரிட்டிஷ் மக்களிடத்திலும் தங்கம் இருப்பு இல்லை. இருந்த தங்கத்தையெல்லாம் அமெரிக்காவிற்குக் கொடுக்கவேண்டிய கடன் பாக்கிக்காக கொடுத்துவிட்டது. இதனேடும், நம்நாட்டிலுள்ள சவுக்கார்கள் சவரனை இருப்புவைத்துக்கொண்டு அதனை பொதுமக்களுக்கு ரூ. 22-8-0 வரையில் விற்றுவருகிறுர்கள். கையிலுள்ள தங்கத்தை இழந்த பொதுமக்கள் உயர்ந்த விலைக்கு தங்கத்தைவாங்கி ஆபரணம் செய்துகொள்ள முடியாது தவிக்கின்றனர். நமது இந்திய அரசாங்கத்தார் இங்ஙனம் அதிக விலைக்கு சவரன்கள்விற்கப்படுவதை சுயநலத்தை முன்னிட்டு சட்டவாயிலாக தடுப்பதற்கும் கூடவில்லை. இவைகளேநமது நாட்டுத்தங்கத்தின் துர்ப்பாக்கிய நிலைமையாகும். எனவே, இந்த அளவுகடந்ததங்க ஏற்றுமதியை சட்டவாயிலாகத் தடுப்பதற்குவேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளாவிட்டாலும், கதர்உற்பத்தி யொன்றினுல்மட்டுமே தங்க ஏற்றுமதியை தடை செய்யலாமென எண்ணி மனப்பால் குடித்துக்கொண்டிருந்தாலும் நம் நாடுவறுமையிலாழ்ந்து, நம் பொதுமக்களின் வீடு இடுகாடாகமாறி, நம் நாட்டு பெண்மணிகள் அலங்கார ஆபரணங்களற்று, பிறந்தசொரூபங் கொண்டவர்களாய், அந்நிய நாட்டுத்துணிமணிக்கு ஆசைப்பட்டவர்களாய், உள்ள பொருளையும் இழக்கவும், நமது நாட்டு பூர்வீகப்பொன் வேலைக்காரர்கள் உறக்கங்கொள்ளவும்கூடும். ஒருகாலத்தில் அபூர்வ சிருஷ்டிகளை, உலகமே ஆவற்படும் ஆபரணங்களைச் செய்தவர்கள் ஒருவேளை உண்ண உணவற்றவர்களாய் காலக்கிரமத்தில் வந்துவிடுவதற்கு யாதொரு தடையுமிராது. எனவே, நமது மாகாண கவர்ன்மெண்டாருக்கு தங்க ஏற்றுமதியை தடைசெய்யும் உரிமையில்லாவிட்டாலும், இந்தியா கவர்ன்மெண்டுடன் கலந்து சட்டபூர்வமாக இவ்வித அபரிமித தங்கயேற்றுமதியை முற்றிலும் தடைசெய்யக் கூடாவிட்டாலும், ஓர்வித விகிதாச்சாரத்தில் ஏற்றுமதி செய்விக்க சட்டவாயிலாக முயற்சித்தல் காங்கிரஸ் ஆட்சியின் பொறுப்பான வேலையாகவேண்டும். இல்லையேல் நாட்டின் பணபலம் குன்றி நாளடைவில் நம்நாட்டு ஆபரணத்தொழில்கள் சிதைந்து, பூர்வீகக் கைத்தொழில் நிபுணர்களும் கவலைக்கிடமான நிலைக்கு வந்துவிடுவார்களென்பதில் ஓர் ஐயப்பாடுமில்லை.

நம் நாட்டின் ஆபாணத்தொழில் நமது பண்டைய நாகரீக முதிர்ச்சியை விளக்குவதுமட்டுமன்றி, நமது நாட்டாரின் வீடுகளை ஒரு சிறிய பொக்கிஷமாகவும், 'பாங்க்' ஆகவும் பூர்வத்தில் விளங்கச் செய்திருந்தது. இந்தியர் இல்லங்களிலிருந்த ஒவ்வோர் அணிகலனும், ஆபரணமும் சுலபத்தில் மாற்றக்கூடிய செலவாணி நாணயங்களைப் போலிருந்துவந்தன. முன்னே கூறிய தங்க ஏற்றுமதிக்குப்பின் இவ்வித பொக்கிஷம் நிறைந்த குடும்பங்கள் இங்குமங்கும் ஏகதேசத்தில் சிலகாணப்படுகின்றன. மற்றவர் வீடுகளில் தங்கத்தால் செய்யப்பட்ட நகைகளுக்குப் பதிலாக கில்ட் நகைகளும், கவரிங் தங்க நகைகளும் காணப்படுகின்றன. இன்னும் ஜெர்மனி, பிரிட்டன், ஆஸ்திரியா, ஜப்பான் நாடுகளிலிருந்துவரும் ரோல்டுகோல்டு சங்கிலிகளையும், ஆபரணங்களையும் நம்நாட்டார் கையாண்டு வருகின்றனர். இன்னும் கிராமாந்திரங்களில் ஓர் குண்டுமணி இடைப்பொன்னை நமது ஸ்திரீவர்க்கங்களிடையே காண்பது மிக அருமையாகும். இந்நிலையில் நூதன பொன் நகைகளை இந்நாட்டார் சிருஷ்டித்து உபயோகப்படுத்திக் கொள்ளுதலும், நம்நாட்டுப் பொன்வேலைக்காரர்கள் ஆபரணத் தொழிலை உறக்கங்கொள்ளாது செய்வதும் எத்துணை கடினசாத்தியமென்பது நன்குவிளங்கும்.

நிற்க, நம்நாட்டுப் பொன்வேலை, ஒன்பது பிரிவினைகளையுடையதாகும். அவைகளை 'மட்டசுத்த வேலை,' 'குந்தனவேலை,' 'கட்டிட வேலை,' 'நகாசுவேலை,' 'மின்னக்காச்சு வேலை,' 'பிடிப்போகரை வேலை,' 'கசைவேலை,' 'வர்ணத்தகட்டு வேலை,' 'முலாம்வேலை' என அவ் வேலையைப் பிரிக்கலாம். இவற்றுள் மட்டசுத்தவேலையென்பது பொன், தங்கம், வெள்ளி, தம்பாக்கு ஆகிய உலோகங்களை உருக்கி, கட்டிவிட்டப்பின் அடித்து கடகம், கங்கணம், காப்பு, கொலுசு, ஒட்டியாணம், தண்டை, சிலம்பு, சங்கிலி முதலிய ஆபரணங்களைச் செய்தலாகும். குந்தனவேலை, பொன், தங்கம் முதலியவற்றில் 'கூண்டுகள்' அல்லது 'ஓம்மிச்சுகள்' செய்து அவற்றுள் நானுவித இரத்தினங்களை சித்திராலங்காரமாய் அமைத்து இடையே வெகு மெல்லிய சுருள் தங்கத்தகடுகளைச் சலாகுகளினுதவியால் அழுத்தி அக்கற்களுக்கு பிடிப்பையும், உறுதியையும் உண்டு செய்வதாகும். கட்டிடவேலை, இரத்தினங்களால் அமைந்ததெனினும் அக்கற்கள் குந்தன வேலையிலுபயோகிக்கும் அச்சுத் தங்கத்தின் உதவியன்றியே கெட்டியான தங்கத்தை துளைத்து பதிக்கப்படுவதாகும். நகாசுத்தொழிலென்பது பொன், தங்கம், வெள்ளி முதலிய

தகடுகளின் வெளிப்புறத்தில் மேலெழும் சித்திரங்களை அமைத்து குண்டலம்,ஜடையலங்காரம், ஜடைபில்லை, நாகரம்போன்ற ஆபரணங்களைச் செய்யும் தொழிலாகும். மின்னக்காச்சிவேலை யாதெனின், குந்தனவேலைக்காகும் ஓம்மிச்சுகளில் வைத்திழைக்கப்படும் இரத்தினங்களுக்குப் பதிலாக கூட்டுச்சேர்மான வழியில் பலவித சன்ன இரத்தினப் பொடிகளையும், பலநிற பீங்கான்தூள்களையும் வைத்து நெருப்பில் ஊதி வெகு பக்குவமாக எடுத்துப்பின் செதுக்கும் தொழிலாகும். 'எங்கிரேவிங்' என்னும் பிடிப்போகரைவேலை நவீன தொழிலென அறியாமையால் சொல்லப்பட்டாலும் அது நமது நாட்டின் பூர்வத்தொழிலேயாகும். பழைய இரத்தினாபரணங்களாகிய மாதாணி பதக்கம், மகரி, முதலியவைகளுக்குப்பின் அந்தம் செய்துவந்த அத்தொழில்தான் பிடிப்போகரைவேலை யெனப்படும். ஆயுதங்களில் சிறிது பேதங்காணப்படினும், வேலைமானத்தில் யாதொரு பேதமுமில்லை. கசைவேலையெனப்படுவது தற்காலம் நம் கண்முன் நசித்துவரும் வேலைகளில் ஒன்றாகும். பொன், வெள்ளி முதலியன வற்றைக்கொண்டு மெல்லிய கம்பியிழுத்து, அவற்றை சிலந்திக்கூண்டின் நூற்களைப்போலாக்கி நெருங்கப்பிணைத்து ஜடைபில்லை, திருகுப்பூ, தாழம்பு முதலியவைகளைச்செய்வதேகசைவேலை யெனப்படும். குந்தன வேலையிலமைக்கப்படும் இரத்தினங்களின் வர்ணங்களை அதிகரிக்கச்செய்வதற்கு பூர்ப்பையும், ஜொலிப்பையும் உண்டு செய்வதற்கென மெல்லிய தகடுகளிலும் பற்பல வர்ணங்களைத் தோய்ப்பு முறையில் உண்டுசெய்வது வர்ணத்தகட்டு வேலை யெனப்படும். குந்தனவேலைக்கு இன்றியமையாத தங்கரேக்குத் தகடுகளை அடிக்கும் தொழிலும் மேற்குறித்த வேலையிலடங்கும். முலாம் வேலை யென்பது உலோகத்தை மேற்பூச்சுகளினால் மற்றொரு உலோகமாக பேதித்துக் காட்டுவது. எனவே, இத்தொழில் பொன்வேலையில் விசேஷமாகச் சம்பந்தப்பட்டிருக்கிறதென சொல்வதற்கிடமில்லை.

நம் நாட்டில் பல ஊர்களிலும் மேற்கூறிய தொழில்கள் சிற்சில நடைபெறுகின்றன. சில பிரதான நகரங்களில் இத்தொழில்கள் யாவும் ஒருங்கே செய்யப்பட்டு வருகின்றன. ஆகையின் யாதேனும் ஓர் வேலையின் பிரக்யாதியை ஓர் ஊராருக்கே உரிமைப்படுத்துவது பொருந்தாதெனினும், தொழில் சாமர்த்தியம் வாய்ந்துள்ள நம் ஆபரணத் தொழிலாளர் வசிக்குமிடங்களை இங்கு குறிப்பிடுதல் அவசியமாகிறது. பொன் வேலைக்கு மட்ட சுத்த வேலையே மூலாதாரத் தொழிலாயிருப்பதால் அத்தொழிலை எவ்வூர்க் கம்மியருமே

நன்குணர்ந்திருக்கின்றனர். குந்தன வேலையின் உன்னதத்திலும், தொழில் முறைகளிலும் திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டிணம் முதலிய ஊர்களிலுள்ள கம்மியர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பிரக்யாதி அடைந்திருக்கின்றனர். கட்டிட வேலையின் கவர்ச்சிக்கு தலைசிறந்த தாயகம் சென்னை நகரமேயாகும். இங்கிருந்து செட்டிநாடுகளுக்குச் சென்றிருக்கும் கம்மியரால் இவ்வேலை அங்கும் அதிகமாகச் செய்யப்படுகின்றது. நகாசுவேலை பற்பல ஊர்களிலும் செய்யப்பட்டு வந்தாலும், தஞ்சாவூர், காரைக்குடி முதலிய ஊர்களை முற்படக் கூறவேண்டும். மின்னக்காச்சுவேலை வட இந்தியாவிலிருந்து இந்நாட்டுக்கு சென்ற இருநூறுவருடங்களுக்குமுன் கொண்டுவரப்பட்ட போதிலும், அத்தொழிலை விஸ்வகர்மக் கம்மியரல்லாத பலரும் நடத்தி வந்திருக்கின்றனர். அத்தொழில் தற்காலம் வளையல் வேலைகளில் மட்டுமே உபயோகிக்கப்பட்டு வருகின்றது. 'எங்கிரேவிங்' என்னும் பிடிப்போகரை வேலைக்குச் சென்னையும், புதுச்சேரியும், திருச்சியும், மங்களூரும் குறிப்பிடற்பாலன. கசை வேலைக்கு உறையூர், திருச்சிராப்பள்ளி முதலிய ஊர்கள் திறமைபெற்றவைகளாகும். வர்ணத்தகடு, தங்கத்தகடு முதலியவைகளை உற்பத்தி செய்வதில் தஞ்சையும், சென்னையும், திருச்சியும் பிரபல ஸ்தலங்களாகும். இவ்வூர்களில் உற்பத்தியாகும் பொன், வெள்ளிச்சாமான்கள் அந்நிய நாட்டிற்கு அனுப்பப்படுவதால் அந்நாட்டார்களின் நன்மதிப்பையும் விசேஷமாக இந்நாட்டுக் கம்மியர் அடைந்திருக்கின்றனர். பிரபலமான தேவஸ்தானங்களின் பொக்கிஷத்தில் அடுக்கடுக்காய் வைக்கப்பட்டிருக்கும் பூர்வகாலத் திருவாபரணங்களைப் பார்வையிடும் ஐரோப்பிய தேசாந்திரிகள் அவைகளைக் கண்ணிமையாவண்ணம் கவனித்து, வேலைகளின் நுட்பத்தையும், கற்பனுசாமர்த்தியங்களையும் வியந்து பேசி வருவதோடும், புகைப்படம், சித்திரங்களினுதவியால் அவைகளை தங்கள் சுதேசப் பத்திரிகைகளில் வெளிப்படுத்தியும், புத்தகங்களெழுதியும், நம்மனோர்களின் சாமர்த்தியங்களை தம் நாட்டார் அறிந்துகொள்ளும்வண்ணம் பல வழியிலும் பிரசித்தப்படுத்தியும், படுத்திக்கொண்டும் வருகின்றனர். இதனோடும் லண்டன் நகரத்து சவுத் கென்சிங்டன் மியூசியம் என்று சொல்லப்படுகிற உலகப் பிரசித்திபெற்ற கண்காட்சி ஸ்தலத்தில் இந்தியர்களின் ஆபரணங்களைக் காட்டும் தனித்த காட்சி ஸ்தலமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவ்வாறே நாகரீகம் வாய்ந்த மற்ற ஐரோப்பிய கண்காட்சி ஸ்தலங்களிலும் நமது நாட்டு ஆப

ரணங்களை அணிவகுத்திருக்கும் இடங்கள் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாபரணங்களைக் கண்ணுறும் அந்நியர் நம் நாட்டுக் கம்மியர்களின் கடின உழைப்பையும், தொழிற் சம்பந்தத்தில் காட்டும் பொறுமையையும், கற்பனா சாமர்த்தியத்தையும், முக்கியமாய், ஆளி, கண்டபேரண்டம் முதலிய கற்பித மிருகங்களை இடமறிந்து வேலையில் உபயோகித்திருப்பதையும் பன்முறை வியந்து கொண்டாடுகின்றனர். வேறு சில மேற்றிசையார், பரீட்சார்த்தமாக நம் நாட்டுக் கம்மியர்களிடம் காட்டும் கடின வேலைப்பாடாலாகிய ஐரோப்பிய மாதிரி நகைகளை, ஐரோப்பியத் தொழிலாளிகளைக்காட்டிலும் சீக்கிரமாகவும், சுலபமாகவும், பெரிய ஆயுத, இயந்திரங்களின் உதவியின்றியும் செய்யக்கூடிய சக்திவாய்ந்திருப்பதை மெச்சி யோக்கியதா பத்திரமளித்தும், பகிரங்கப்படுத்தியும் இருக்கின்றனர். இவ்வித நன்மதிப்பு அனைத்தும் நமது பூர்வகால வேலைகளைக் கண்ணுற்றதாலும், கண்ணுறுவதாலும் வளர்கின்றனவேயன்றி, நவீன மாதிரிகளான அற்ப நகைகளைச் செய்யும் வேலைப்பாட்டிற்கும், தொழில் பிரபல்யத்திற்குமன்று. ஆயினும், மேலே குறிப்பிட்ட பூர்வகால ஆபரணவேலைகள் தற்காலம் நசித்துவிட்டனவென்றே சொல்லவேண்டும். கிரீடம், மேகலாபரணம், கடகம், கங்கணம், கேயூரம், புஜக்கிருதுகள், சிலம்புகள், சதங்கை, கிண்கிணி முதலிய பூர்வகால ஆபரணங்களையும், தேவஸ்தானங்களில் காணப்படும் மகிரி, பதக்கம், மாதாணி முதலிய ஆபரணங்களையும் செய்யக்கூடிய கம்மியர் தற்காலம் நூற்றுக்கொருவர் உண்டென்பது வெறும் உபசார வார்த்தையாக முடியும். மத்தியகால ஆபரணங்களாகிய நத்து, புலாக்கு, சந்திரமுறுகு, பஞ்சகலசவாளி, மாட்டல், கிள்ளட்டிகை, சிங்கமுகத்தோடா, கட்டாரிவளையல், கம்பிச்சுருள்கொலுசு, பாடகம் பொதுமக்களாலும் நம்மனோர் போதனையாலும் இகழப்பட்டமையால் அவ்வேலைகளையும் தற்காலம் நம்மனோர் அரைகுறையாகவே செய்யும் சக்திவாய்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். நவீன மாதிரிகளை அநுசரித்த நாகரபில்லை, கொள்ளுக்காய் அட்டிகை, சவரன்மாலைகள், அவல் வளையல்கள், அச்சுவளையல்கள், ஒட்டியாணம், சங்கிலி வேலைகளே இப்பொழுது மும்மரமாக நடந்து வருகின்றன. செப்புக்கம்பிகளில் பொன் கவரிங்செய்யப்பட்ட ஆபரணவேலைகளும் தற்காலம் பொதுமக்களின் மனதை மிகவும் கவர்ந்திருக்கின்றன. பழய மாதிரி நகைகளைச்செய்யும் வழிதெரியாது அவைகளைப் பழித்துப்பேசுவதும் கிராக்கிகளின் உத்சாகத்தை மழுப்பிவிடுவதும் நம்நாட்டுப் பொன்

வேலைக்காரர்கள் தற்காலம் கையாளும் தந்திரங்களில் ஒன்றாகும். பொன்னேற்றுமதி நீங்கலாக, பூர்வ ஆபரணத்தொழில் நசித்ததற்கு இன்னும் சில முக்கிய காரணங்களும் உண்டு. இந்திய நாகரீகத்துடன் ஐரோப்பிய நாகரீகம் வெகு வேகமாகத் தாக்கி வருவதும், இந்நாட்டில் தெய்வபக்தியும், ஈஸ்வர வழிபாடும் குன்றிவருவதும், பெண்கல்வியும் ஆச்சார சீர்திருத்தம் ஆங்காங்கு பரவிவருவதும் ஆபரணத்தொழில் நசித்துவருவதற்கு மற்றய முக்கிய காரணங்களாகும். மேற்கூறிய காரணங்களால் பொன்வேலைக்கு முழு அழிவு உண்டாகிவிடுமென நினைப்பதற்கில்லை. ஏனெனில், பொன் என்னும் உலோகம் உள்ள வரையில் உலகில் அக்கால நாகரீகத்திற்கேற்றவாறு ஆபரணங்கள் செய்யப்பட்டு அணியப்படுமென்பதற்கோர் ஐயப்பாடுமில்லை.

நிற்க, நம்நாட்டுக் கம்மியர் பொதுவாக பொற்பணியில் மிகத் தேர்ச்சி பெற்றவர்களாயினும், சில குறிப்பிட்ட வேலைகளில் நிபுணர்களாகவே இருக்கின்றனர். அந்நிய நாட்டுக் கம்மியருக்கு குந்தன வேலையென்பதேதெரியாது. அவ்வேலையில் தென்னாட்டு கம்மியருடன் எவராலும் போட்டியிட முடியாது. கட்டிடவேலையிலும் நம்மனோர் மிகக் கைதேர்ந்தவர்களாதலால், அவர்களைக்கொண்டு சென்னை, பெங்களூர் முதலிய இடங்களில் ஐரோப்பியர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஷாப்புகளில் அவ்வேலைகள் வெகு அருமையாகச் செய்யப்படுகின்றன. நகாசுத்தொழிலில் கொடிக்கருக்குகளைத் தீட்டுவதில் நம்மனோர் சாமார்த்தியம் காட்டிவந்தாலும், மேற்றிசையாரைப்போல் பல்வகைக் கட்டிடங்களையோ, ரூபங்களையோ 'பர்ஸ்பெக்டிவ்' அல்லது கண்ணுக்குத் தோன்றுகிறபடி தகடுகளில் நகாசு யிடுவதில் நம்மனோர் சக்தி குறைந்தவர்களாகவே யிருக்கிறார்கள். நகாசுத்தொழில் செய்வோர் இனி இச்சக்தியை சித்திரம் எழுதும் பழக்கத்தின் மிகுதியால் பெறுவது அத்தியாவசியமாகும். செங்கல்மா, குங்குலியம் முதலிய சேர்மானத்தாலாகும் அரக்குகளுக்குப்பதிலாக, மேற்றிசையாரைப் போன்று, ஆஸ்பால்டு, பிட்சு, முதலிய தார்க்கட்டிகளை அரக்கு பலகைகளாக செய்துகொள்வது உண்மையான சிக்கனமாகலாம். தேவாலயங்களுக்கு வேண்டிய ஆபரணங்களை மின்னக்காச்சு வேலையினுதவியால், இரத்தினங்களின்றியே செய்துவிடலாம். ஆயினும், போலி சிகப்புகளும், மற்ற நவரத்தினங்களும், போலி வைரங்களும் மலிந்து கிடக்கும் இக்காலத்து மின்னக்காச்சு வேலைக்கு அதிக இடமில்லை. பிடிப்போகரை வேலையை விருத்திக்குக் கொண்டுவருவது நம்மனோரின் கடமையாகும். இத்தொழிலுக்கு முக்கியமாய் வேண்டிய ஆயுதங்

களின் பேதாபேதங்களை நன்குணர்ந்து அவைகளை இடமறிந்து கையாளும் விதங்களைக் கற்றுணரவேண்டும். கசைவேலையாலாகிய ஆபரணங்கள் மனதிற்கு இன்பந்தருவதால் அவ்வேலையை நசிக்க விடாமற்செய்வதும் நம்மனோர்களின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த உறையூரில் இவ்வேலை வெகு மும்மரமாகச் செய்திருந்த காலத்தில், காலஞ்சென்ற ஏழாவது எட்வர்ட் சக்கரவர்த்தியார், இளவரசராக சுற்றுப்பிரயாணம் வந்தபோது 'ரத்தினச்சாரியர் அண்டு சன்ஸ்' என்னும் பிரபல்லிய தொழிற்சாலையை நேரில் பார்வையிட்டு பல கசைத்தொழிலாலான ஆபரணங்களையும், பண்டங்களையும் வாங்கிச் சென்றனர்.

இரத்தினங்கள் உள்ளவரையில் அவைகளின் ஜொலிப்பைப் பெருக்க வர்ணத்தகடுகளின் உபயோகம் குறையாதாகையால் இவைகளை சுலபவழியில் உற்பத்திசெய்யும் முறைகளைக் கற்றுத்தேறுவது நன்று. முலாம் வேலைகள் முற்காலத்தில் வெண்ணைப்பூச்சுகளால் செய்யப்பட்டு வந்தன. தற்காலத்தில் ரசாயன முறைகளாலும், மின்சார உதவியாலும் செய்யப்படுகின்றன. இவைகளன்றி பொடிவகைகளாலும் முலாம் பூசப்படுகின்றன. இவ்வழிகளை யெல்லாம் நம்நாட்டுக் கம்மியர் நன்குணரவேண்டும். தங்க, வெள்ளி சன்னங்களையும் 'ஆஸிட்' களினுதவியால் சேதமின்றி பிரித்தெடுக்கும் வழிகளையும் நம்மனோர் தெரிந்துகொள்வதவசியமாகும். பொடிகளின் கூட்டுமுறைகளையும், விளக்கில் ஊதிப் பற்றுவைக்கும் முறைகளையும் கற்கவேண்டும். தகட்டாலைகளின் உதவியையும், கம்பியிழுக்கும் வைரச்சட்ட ஆலைகளின் உதவியையும்வேலையிலுபயோகிக்கவேண்டும். சிறியலேத் என்னும் கடைச்சல் பட்டரைகளினுதவியால், 'சுற்று' 'மறுசுற்று' முதலியவைகளைச் செய்யும் மார்க்கத்தையும், கைக்கெடியாரங்களின் பின்புறங்களில் தாமரைப்பூப்போல் முல்லங்கிகீறல் பிடிக்கும் வேலையும் செய்து பழகவேண்டும். இன்னும் எத்தனையோ வழிகளில் நம்நாட்டு ஆபரணத்தொழில்கள் சீர்படலாம். பொன் வேலையையும், அதனைச் சார்ந்த கிளைத்தொழில்களையும் பிரபலமாகச் செய்யவேண்டின், சிறு இயந்திரங்களினுதவியும், பெருத்த மூலதனமும், நாணய வரிசையின் பெருக்கமும், பொதுமக்களின் நம்பிக்கையும்வேண்டும். ஆகையின் இப்பணியைக் கூட்டுச்சேர்ந்தாலன்றி, ஒருவரே ஏகதேசத்தில் செய்வதற்கியலாது, இவ்விதக் கூட்டுக் கம்பெனிகள்பல நம்நாட்டுத் தொழிலாளர்களால் ஸ்தாபிக்கும் காலமே ஆபரணத்தொழில் சீர்படுங்காலமெனச் செப்பலாம். எனவே, நம்

நாட்டுப் பொன்வேலைக்காரர்கள் மேற்றிசையாரை ஒத்து, தங்கள் தொழிற்பிரிவினைகள் ஒவ்வொன்றிற்கும் தொழிற் சங்கங்கள் அதாவது 'கில்டு' களை ஸ்தாபித்துக்கொண்டு, ஒரு மத்திய தொழிற் சங்கத்துடன் இணைத்துக்கொண்டு, ஐக்கிய தொழிற் நாணயச் சங்கங்களினுதவியால் வேண்டிய மூலதனம் பெற்று இந்நாட்டுப் பூர்வீக ஆபரணத்தொழிலை அபிவிருத்தியடையச் செய்யலாம். பொதுவாக ஆபரணத்தொழிலை நாணயவரிசையைப் பின்பற்றி நடத்த ஆரம்பித்துவிட்டால், பொதுமக்களின் ஆதரவு அபரிமிதமாகக்கிடைக்கும். அவ்வித வழிவகைகளை நம்மனோர் நன்குணர்ந்து, நாணயத்தைப் பின்பற்றி, நவீனமுறையில் தற்கால இயல்பிற்கும், நாகரீகத்திற்கும் ஏற்ற முறையில் தங்கள் பணிகளை திருத்தியமைத்துக் கொள்வார்களாயின், நம்நாட்டுப் பணிகள் சீர்படுவதோடும், நம்மனோர்க்கு செல்வம் மிகும். மற்றும் பொதுமக்களின் ஐசுவரியம் சிதறுண்டு போகாமல், அவர்கள் குடும்ப க்ஷேமத்திற்கும், பாதுகாப்பிற்கும் இன்றியமையாத செல்வத்தையும் அவர்கள் இல்லங்களில் நிலைநாட்டுமென்பது திண்ணம்.

பதினோறாவது அத்தியாயம்.

நமது நாட்டிற்கான கல்வியும், தொழிற் கல்வி முறைகளும்.

நம் நாட்டில் தற்போதுள்ள கல்விமுறை அடியோடு திருத்தியமைக்கப்பட்டாலன்றி நமது நாட்டுக் கைத்தொழிலபிவிருத்திக்கு அஃது பெரிதும் பயனளிக்க மாட்டாது. இன்றிருக்கும் முறை 100 வருடங்களுக்குமுன் கிழக்கு இந்தியா கம்பெனிக்கு வேண்டிய குமாஸ்தாக்களையும், துவிபாஷிகளையும், தரகிரிகளையும் உற்பத்தி செய்யும் நோக்கத்துடனேயே அமைக்கப்பட்டது. இதனால் நாட்டுப் பூர்வீகக் கல்விமுறையனைத்தும் புறக்கணிக்கப்பட்டு ஆங்கிலக் கல்வியில் பொதுமக்கள் மிக ஆவல்கொள்வாராயினர். ஆங்கிலக்கல்வி பரவவே, நாட்டில் பல கலாசாலைகளும், உயர்தரக் கல்லூரிகளும், பல சர்வகலாசங்கங்களும் ஏற்பட்டு, கல்வியறிவும் வெகுவாகப்பரவி அரசாங்கத்தாருக்கு வேண்டிய குமாஸ்தாக்களை அளவுக்குமிஞ்சி

தயாரித்திருப்பதுடன், பெரிய நீதிபதிகளையும், அரசியல் வாதிகளையும், பிரபல டாக்டர்களையும், வக்கீல்களையும், யாந்திரீகர்களையும் உண்டுசெய்திருக்கின்றன. இப்போது உயர்தரப் பாடசாலைகள் நம் நாட்டில் அதிகமாகிவிட்டதின் பயனாகக் கணக்கற்ற நடுத்தர வகுப்பினர்களும், கைத்தொழில் வகுப்பினர்களும், படித்து, பட்டதாரிகளாகி வேலையில்லாமல் அல்லல்படுகின்றனர். இவ்வித நிலைமைக்கு நம் நாட்டினர் அரசாங்க உத்தியோகம் ஒன்றையே எதிர்பார்த்துக் காத்திருப்பது முக்கிய காரணமாகும்.

இந்நாட்டில் கைத்தொழிலை ஜீவனாதாரமாகக்கொண்டு, இலாபகரமாகச்செய்யக்கூடிய வகுப்பினர் கேவலம் சேவகாவிருத்திக்கு ஆசைப்படுவதை மேற்றிசையார் மிக இகழ்ந்துரைக்கின்றனர். கைத்தொழில் மர்மங்களை உணரக்கூடியகல்வியைக்கசடறக்கற்றபின் கைத்தொழிலில் அம்மக்கள் பிரவேசித்து கண்ணியமாக நடத்தி வழிகாட்டவேண்டுமென்பதே அவர்கள் கருத்தாகும். கைத்தொழில் வகுப்பிலுதித்த சிறுவர்களில் சிலர் விசேஷித்த அறிவும், ஊக்கமும் காட்டுவார்களாயின் அவர்களின் கல்வியறிவை விருத்திசெய்துகொண்டு கைத்தொழிலல்லாத வேறு துறைகளிலும் பயன்படமுயல்வது முற்றிலும் முறையாகுமென்பதே மேல் நாட்டாரின் கொள்கை.

நமது நாட்டில் எத்தனையோ பாடசாலைகளும், பல சர்வகலாசங்கங்களிருந்தும், பொதுமக்களுக்கான கல்வித்திட்டம் இதுவரையில் சரியானபடி அமைக்கப்படவில்லை. இந்தியாவின் மொத்த ஜனத்தொகையாகிய 35,30,00,000 அதாவது 35 கோடியேமுப்பதுலட்சம் மக்களில் 2 கோடியே 47 லட்சம் மக்கள்தான் கற்றவர்களாகயிருக்கிறார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் 5 வயதுள்ளவும் அதற்கு மேற்பட்டிருக்கும் ஜனத்தொகையில் 100-க்கு பத்துபேர்கள்தான் படித்தவர்களாக யிருக்கிறார்கள். நாகரீகம் பொலிந்து விளங்கும்ஒவ்வொரு தேசத்திலும் இந்த விகிதாச்சாரம் குறைந்தது நூற்றுக்கு 90-ஆக இருத்தல் வேண்டும். நம் நாட்டில் 100-க்கு 5 சிறுவர்கள்தான் பாடசாலைகளில் பயில்கின்றனர். இந்த விகிதம் குறைந்து 20-க்கு உயரவேண்டும். அமெரிக்காவில் இந்த விகிதம் நூற்றுக்கு சுமார் 25 எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. பெண் கல்வியில் நம் நாடு மற்றெல்லா தேசங்களிலும் மிகத் தாழ்ந்திருக்கின்றது. நம் நாட்டில் படித்த பெண்களின் விகிதாச்சாரம் நூற்றுக்கு சுமார் 15 என கணக்கிடப்பட்டிருக்கிறது. நமது மாகாணத்தில் முக்கிய கைத்தொழில் பகுதியினரான கம்மியர்கள், கைக்கோளர்களில் தாய்மொழி

வாசனையுள்ள கம்மியர் நூற்றுக்கு 23-ம், கைக்கோளர்கள் நூற்றுக்கு 26 எனவும் பெறப்பட்டிருக்கின்றது. இவர்களுள் ஆங்கிலங் கற்றவர்கள் முறையே நூற்றுக்கு 0·07 யெனவும் 0·08 யெனவும் கணக்கிடப்பட்டிருக்கின்றது. நம் நாட்டில் தொழிலாளர்களும், வேலைக்காரர்களும், வயோதிகர்களும் கல்வி கற்கும் வசதிகளில்லை. தொழிலாளர்களின் சிறுவர்களை உடல்உறுதிப்படாத இளம்பிராயத்திலேயே பெற்றோர்களும், மற்றோர்களும் கடின உழைப்போடு கூடிய கைத்தொழிலைப் பழகக் கட்டாயப்படுத்தி தங்கள் வருமானத்தை விருத்தி செய்துகொள்ளப் பார்க்கின்றனர். இவ்வித கொடுமை, நாகரீகம் பொலிந்த வேறு எந்த நாட்டிலும் காண்பதருமை.

பொதுமக்களின் கல்வியறிவைப் பெருக்குவதற்கும், மற்ற நாகரீக நாடுகளுக்கு ஒப்பாகச் செய்வதற்கும் கட்டாய ஆரம்பக்கல்வியை அரசாங்கத்தாரும், ஸ்தல சுயஆட்சி ஸ்தாபனங்களும் மேற்கொள்ளுதல்வேண்டும். ஆங்காங்கு முக்கிய நகரங்களிலுள்ள சிறுவர்களின் கணிதை எடுக்கச்செய்து, பஞ்சாயத்தார்களை ஏற்படுத்தி சிறுவர்களை பெற்றோர்கள் ஒழுங்காகப் பாடசாலைகளுக்கு அனுப்பக் கட்டாயப்படுத்தவும், கீழ்ப்படியாதவர்களை சட்ட வாயிலாகக் கட்டுப்படுத்தவும், கண்டனை தெண்டனைக்குட்படுத்தவும் வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும், அல்லது சில கிராமங்கள் ஒன்றுசேர்ந்த வட்டங்களிலும் சிறுவர்களுக்குக் கட்டாய ஆரம்பக் கல்வியை 14 வயதளவின் வரையில் போதிக்கும் பொறுப்பை, அக்கிராமவாசிகளிடமே விட்டுவிட்டு அரசாங்கக் கண்காணிப்பும், நிர்ப்பந்தமான நிபந்தனைகளும் ஏற்படுத்தப்பட்டால் முற்போக்கு வெகு துரிதமாக ஏற்படும். இவ்வித பாடசாலைகளில், நாட்டிற்கேற்ற எண்சுவடி, கீழ்வாய் இலக்கம், வரைக்காப் பாடம் முதலிய கணக்கு முறைகளும், தேசசரித்திரமும், பத்திரிகை வாசிக்கும் பழக்கமும், சிறிது ஆங்கில கல்வியும், போதிப்பது வெகு அவசியமாகும். .ஆரம்பக்கல்வி ஒவ்வொரு சிறுவர்களின் 14 வயதுக்குள் முற்றுப்பெறவேண்டும். அதற்குமேல் அவர்களை மத்தியதரக் கல்வியிலும், உயர்தரக் கல்வியிலும், பிரவேசிக்கச் செய்தலும், போதனுமுறையும், பாட புத்தகங்களும் நாட்டு பாஷையிலேயே நடைபெறுதலும், எழுதப்படுதலும் வேண்டும். இப்பாடசாலைச் சிறுவர்களுக்கு கட்டாயமாக ஆங்கில பாஷையுடன் இரண்டு சுதேச பாஷைகளும் கற்பிக்கப்படுவதோடும், அவர்கள் தற்காலம் சுமக்க முடியாமல் தூக்கிச் செல்லும் புஸ்தகங்களையும், நோட்டுபுக்குகளையும் கூடியவரையில் குறைத்தலும் அவசியமாகும்.

14 வயது வரையில் ஆரம்பக் கட்டாயப் பொதுக்கல்வியைக் கற்றுத் தேர்ந்தபின் தொழிலாளர் வகுப்பைச்சார்ந்த சிறுவர்களைப் பிரித்துக் கட்டாயத் தொழிற்கல்விப் பாடசாலைகளில் பயிலச்செய்தல் வேண்டும். அவ்விதம் பாடசாலைகளில் பொதுக் கல்வியும் அந்தந்த கைத்தொழில் வகுப்புக்குரிமையான கைத்தொழில்களும் தற்கால தேவைக்கும், நாகரீகத்திற்கும் ஏற்ற வழியில் போதிக்கப் படவேண்டும். தொழில் முறையில் கணக்கு வைத்துக்கொள்ளவும், பத்திரிகை படிக்கும் ஞானமும், மற்ற நாடுகளில் நடைபெறும் தொழில் முயற்சிகளை போதிக்கவும் வேண்டும். இப்பாடசாலைச் சிறுவர்களையும் தங்கள் தங்கள் தொழில்களில் வேண்டிய அளவு கரசாதனப் பழக்கம் பெறச்செய்தலும், சிறிய இயந்திரங்களை கையாளும்பழக்கமும் உண்டுசெய்தல் வேண்டும். காலையில் ஒரு மணிநேரம் தேகாப்பியாசமும், பின் இரண்டுமணி நேரம் பொதுக்கல்வி போதனையும், குறைந்தது நான்குமணிநேரம் தொழிலப்பியாசமும் இப்பாடசாலைகளில் நடைபெறுதல் நன்று. இச்சிறுவர்களின் வயதினளவிற்கும், வகுப்புக்கேற்றவாறும் சிறிது உபகாரச் சம்பளம் கொடுபடுதலும் நன்று. இப்பாடசாலைகளில் உற்பத்தியாகும் தொழிற்சாமான்களை விற்பனையாக்குவதால் காலக்கிரமத்தில் இவ்வித விற்பனையால் அடையும் இலாபத்தைக்கொண்டே இப்பாடசாலைகளை நடைபெறச் செய்யலாம். இவ்வித போதனை சரியான முறையிலும், உபயோகமான விதத்திலும் செய்விப்பதற்கு, சுமார் 3 முதல் 5 வருடப் பயிற்சி அவசியமாகலாம். இவ்வித தொழிற் பாடசாலைகளை முனிசிபல் சங்கத்தாரும், டிஸ்ட்ரிக்ட் போர்டாரும் பொது நிதியினின்றும் ஸ்தாபிக்கலாமென அவ்விரு ஆக்டுகளும் விசேஷ உரிமையளிக்கின்றன. ஆனால் அவைகளை நடைமுதலுக்குக் கொண்டுவந்த ஸ்தல ஸ்தாபனங்கள் இல்லையென்றே சொல்லலாம்.

இராக்காலங்களில், இப்பாடசாலைகளில் கல்வியறிவில்லாத வயதுவந்த தொழிலாளர்களுக்கு எழுத்துவாசனை உண்டு செய்விக்கலாம். குடிப்பழக்கத்தை ஆங்காங்கு அரசாங்க சட்டவாயிலாக தடுக்கமுற்பட்டிருக்கும் இத்தருவாயில், வேலைநேரம் ஒழிந்தபின் மாலையில் இவர்கள் இராப்பாடசாலைகளுக்கு கட்டாயமாகச் செல்லும் பழக்கத்தை உண்டு செய்வித்தல் மிக்க நன்மை பயக்கும். இவ்வித இராப்பாடசாலைகள் ஜப்பானில் மிக அதிகமுண்டு. இராப் பாடசாலையில் கற்றுத்தேறும் கைதேர்ந்த வேலைக்காரர்கள், சில குறிப்பிட்ட பகல் நேரங்களில் கைத்தொழில் நுட்பங்களை

பாடசாலைச் சிறுவர்களுக்கு இலவசமாக போதிக்கும் வசதியும் உண்டாகும். இவ்வித பாடசாலைகள் தொழிலாளச் சிறுவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் தொழில் அந்யோந்யத்தை உண்டு செய்வித்து பின் தொழில்களை கண்ணிய முறையில் நடத்தும் வழிகளையும் கற்பிக்கும்.

இவ்வித பொறுப்பேறப்பெற்றக் கடமைகளை கிராம வாசிகளும், சிற்றூர் வாசிகளும் நிர்வகிக்கவேண்டுமானால், குடிசைத்தொழில்களையும், சிறிய கைத்தொழில்களையும் ஆங்காங்கு நிறுவி, வருமானத்தையும், பொருளாதார நிலைமையையும் பெருக்கிக்கொள்ளவேண்டும். இவ்வாறுதான் ஜெர்மனியும், ஜப்பானும் அபிவிருத்தியடைந்திருக்கின்றன. இவற்றனைத்திற்கும் சர்க்கார் சகாயமும், பாதுகாப்பும் கிடைத்தால், நமது நாட்டில் கைத்தொழிற் புரட்சி அதிவிரைவில் ஏற்பட்டு இத்தேசக் கைத்தொழில் மக்களும், கைத்தொழில்களும் சீர்படுவது திண்ணம்.

இம்மாகாணத்தில் அரசாங்கத்தார் உதவிபெற்ற கைத்தொழில் பாடசாலைகளின் எண்ணிக்கை 75 ஆகும். இதில் பெண்களுக்கான பாடசாலைகள் இருபத்து மூன்றாகும். இப்பாடசாலைகள் ஏற்பட்டு சுமார் 30 வருடங்களுக்கு மேலாகியும் இவைகள் இந்நாட்டுத் தொழிலபிவிருத்திப் பிரச்னையை திருப்திகரமாக தீர்த்தபாடில்லை. இதற்குக் காரணம் இரண்டாகும். ஒன்று கைத்தொழில் வகுப்பைச்சாராத பலருக்கும் கைத்தொழிலை போதிக்க முயன்று வருவது. இரண்டாவது, ஸ்தலத்திற்கேற்ற தொழிற்கல்வியை போதிக்காது எல்லாத் தொழில்களையும் போதிக்க முயன்று வருவதாகும். இப்பாடசாலைகளில் ஓர் பெரும் பகுதி கிருஸ்தவ மிஷன்களால், மத சம்மந்தமான நோக்கங்கொண்டு நடத்தப்பட்டுவருகின்றன. சென்னையில் நடைபெற்றுவரும் செங்கல்வராய நாய்க்கர் கைத்தொழில் பாடசாலையை ஒத்து ஆங்காங்கு ஸ்தல தொழில்களுக்கு ஏற்றவாறு பாடசாலைகள் ஏற்பட்டு, அத்தொழில்களுக்குரிய வகுப்பு மக்களுக்கு தொழிற்கல்வி போதிப்பதே நாட்டிற்குப் பயனளிக்கும் நல்ல முறையாகும். முப்பது வருடம் முயன்றுபார்த்தும் மேற்குறித்த 75 கைத்தொழில் பாடசாலைகள் நாட்டின் கைத்தொழில்களை விசேஷித்த வகையில் அபிவிருத்தி செய்யக்கூடவில்லையெனும் உண்மையை இனி உணர்ந்து, கைத்தொழிற்கல்வி போதனையின் வழி வகைகளை சீக்கிரமே மாற்றியமைத்தல் அரசாங்கத்தாரின் முக்கிய பொறுப்பாகவேண்டும்.

மத்தியதரக்கல்வியைப்பற்றியும், உயர்தரக்கல்வியைப்பற்றியும், உயர்தரக் கைத்தொழிற் சாஸ்திரீயக் கல்வியைப் பற்றியும் இங்கு சிறிது பிரஸ்தாபிப்போம். மத்தியதரக் கல்வியை இந்த நாட்டில் மாற்றியமைக்கும்போது பாடசாலை அதிகாரிகள் கொடுக்கும் யோக்கியதா பத்திரங்களே போதியனவாகயிருக்கவேண்டும். இப்போதிருக்கும் அரசாங்கப் பரீட்சைகள் அவசியமற்றவைகளாகும். அரசாங்கத்தாரின் அநாவசியமான செலவைக் குறைப்பதற்கு இது ஓர் தக்கவழியுமாகும். பல வருடங்களாக மாணவர்களுடன் பழகி உண்மை யோக்கியதையை உணர்ந்த பாடசாலைத்தலைவர்களைவிட இரண்டொரு மணிநேரங்களில் மட்டுமே இவர்களை பரீட்சித்தறியும் சர்வகலா சங்கங்களும், போர்டுகளும் மாணவர்களின் உண்மை யோக்கியதைகளை உணர்ந்து நற்சாட்சிப் பத்திரங்கள் அளிக்கின்றனவென்பது மிக்க நகையாடற்பாலது. உயர்தரக்கல்வி நம்நாட்டிற்கு மிக அவசியமேயாகும். ஆயினும், அவைகள் நாட்டின் அவசியத்திற்கேற்றவழியிலும் நாட்டுக்கேற்ற முறையிலும் திருத்தி யமைக்கப்படவேண்டும். ஜப்பானில் இவ்வுயர்தரப் பாடசாலைகளில் அந்த தேசப்பாஷையிலேயே மாணவர்கள் போதிக்கப்படுவது முற்றிலும் சாத்தியமானல் இந்நாட்டில் அவ்வித வழிவகைகளை கைக்கொள்ளத் தயங்குவதேன்? உயர்தரக் கைத்தொழிற் சாஸ்திரீயக் கல்வியைப் போதிக்கும் உண்மையான பாடசாலைகள் இம்மாகாணத்திலில்லை. சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சர்க்கார் டிரேட் ஸ்கூல் சாஸ்திரீயக் கல்வியைப் போதிக்கும் பாடசாலையெனப் பெயர் மாத்திரத்தில் விளங்கி வருகிறது. மின்சாரத் தொழிற் போதனை இங்கு சற்று விரிவாகப் போதிக்கப்படுகின்றதாயினும், வேறு உயர்தர சாஸ்திரீய கைத்தொழில் போதனையும், ஆராய்ச்சி வசதியும் இங்கில்லை. கிண்டியிலுள்ள இஞ்சினீயரிங் காலேஜிலும் எலக்டிரிக், மெக்கானிக்கல் இஞ்சினீரிங் போதனை எட்டளவாகவே போதிக்கப்பட்டு வருகின்றன. இப்பாடசாலையில் தேர்ந்து வெளிவந்தவர்களால் நாட்டின் கைத்தொழில்களுக்கு யாதொரு நன்மையும் பயக்கக்கூடவில்லையென்பது நிதர்சனம். பெங்களூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் 'இந்தியன் இன்ஸ்டிடூட் ஆப் சையன்ஸ்' என்னும் ரசாயன ஆராய்ச்சி முறை ஸ்தலத்தில் ஏராளமான பணச்செலவு செய்யப்பட்டாலும், இதுகாறும் சந்தணத்தைலம் உற்பத்திசெய்யும் ஓர் தொழிலைத் தவிர வேறு லாபகரமான தொழில் ஆராய்ச்சி செய்யப்படவுமில்லை. அதனுதவியால் வேறு தொழில்கள் இந்நாட்டில் வியாபார முறையில்

நடத்தப்படவும் இல்லை. ஆயினும், லட்சக்கணக்கான சர்க்கார் பணம் இவ்வித பாடசாலைகளில் பல நன்மைகளை எதிர்பார்த்து, தக்க ஆராய்ச்சியும், திட்டமுமின்றி கண்மூடி செலவழிக்கப்படுகின்றது.

சென்னை சர்வகலாசங்கம், அண்ணாமலை பல்கலை கழகம், உஸ்மானியா யூனிவர்சிட்டிகளில் டெக்னலஜி எனும் உயர்தர சாஸ்திரீய கைத்தொழில் போதனை ஏற்படவேண்டும். சென்னை சர்வகலாசாலை சம்பந்தத்தில் கெடிகாரத் தொழிலபிவிருத்தியும், எலக்டிரிக், ஸ்டீம் இஞ்சின், ஏரோப்பிளேன், ரேடியோ, மோட்டார்க்கார் செய்யும் தொழில்களின் நுட்பங்கள் ஆராயப்படலாம். ஏனெனில், இதற்கு தக்க வசதிகளும், பெரிய தொழிற்சாலைகளும் சென்னையிலிருக்கின்றன. அண்ணாமலை யூனிவர்சிட்டி மாணவர்கள் வதியும் கழகமாகயிருப்பதால், அங்கு மாணவர்களை ரசாயன ஆராய்ச்சியிலும், கரசாதனத்திலும் பழக்குவதற்கு தக்க வசதிகளிருக்கின்றன. மணிலாக் கொட்டை ஏராளமாக உற்பத்தியாகும் இந்த ஜில்லாவில் மெழுகுவர்த்தி, சோப்பு, எண்ணெயிறக்கல், வேர்க்கடலை தோலை விருதாவாக்காமல் தொழிலில் உபயோகப்படக்கூடிய அட்டைகள், காகிதங்கள் செய்தல் முதலியவைகளை ஆராய்ச்சி செய்யலாம். இனி ஏற்படவிருக்கும் திருவிதாங்கூர் யூனிவர்சிட்டி வெறும் படிப்பு சம்பந்தமான கழகமாகயிராமல் தொழில் சம்பந்தமும் அதிகமாயிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அந்நாட்டில் வேலையகப்படாமல் உலகில் எல்லாப் பாகங்களிலும் மலையாளத்தார் வெளியேறி வருவதை முதலாவதாகத் தடுப்பதற்குவேண்டிய அளவு கைத்தொழில் சகாயங்கள் இங்கு செய்யப்படுதல் அவசியமாகும் மரம், ரப்பர், தேங்காய்எண்ணை, தந்தம், கயிர் முதலியவைகளால் ஆகும் பல தொழில்களை விசேஷமுறையில் நடத்துவதற்கான ஆராய்ச்சி இங்கு செய்வது நன்மைபயக்கும். இன்னும், தீக்குச்சி செய்தல், மூன்றொட்டு, நாலொட்டுப் பலகைகள் செய்தல் போன்ற பல மரத்தொழிலையும் அபிவிருத்தி செய்விக்கலாம். சைனாவிலிருந்து தற்காலம் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவரும் அழகான மரப்பெட்டிகளைப்போல் பலவித மரங்களைக்கொண்டு சகாய உற்பத்தி செய்யலாம். இன்னும் 'சூட்கேஸ்', தூக்கிச்செல்லும் கைப்பெட்டிகளை ஆமை ஓடுகளைப்போல் சூட்டில் அழுத்திய அலங்காரத்துடன் விற்பனை செய்யலாம். இவ்வித சைனாப்பெட்டிகளை சென்னை, பிராட்வே, ஹோமர் அண்டு கம்பெனியில் பார்க்கலாம். இவ்வித

பல்கழகத்தாரின் ஆராய்ச்சி பொருள்களையும், கைத்தொழிற் சாமான்களையும் சென்னையில் தனித்த மத்திய பண்டகசாலைகளில் காட்சிப் பொருள்களாகவும், விற்பனைப் பொருள்களாகவும் வைப்பது நன்று.

எனவே, குடிசைத்தொழிலல்லாத ஏனைய பெரிய தொழிலபிவிருத்தியடைவதற்கும், குடிசைத்தொழிலாளரின் கைத்தொழில்களுக்கு வேண்டிய ரசாயன ஆராய்ச்சிப் பயன்களை உபயோகப்படுத்துவதற்கும் இவ்வித உயர்தர சாஸ்திரீய பாடசாலைகள் ஆங்காங்கு ஸ்தல தொழில் அவசியத்திற்கு ஏற்றவாறு ஸ்தாபிக்கப்படுதலும், இப்போதிருக்கும் பாடசாலைகளில் போதனுமுறைகளை திருத்தியமைத்தலும் இந்நாட்டில் இனியேற்படும் குடிசைத்தொழிலபிவிருத்திக்கு உண்மையான அடிகோலுவதாகும்.

பன்னிரண்டாவது அத்தியாயம்.

நம் நாட்டிற்கேற்ற குடிசைத் தொழில்களும் அவைகளின் அபிவிருத்திக்கான மார்க்கங்களும்.

நம் நாட்டின் தனித்தொழிலாகிய நெசவுத் தொழிலை விடுத்து, நாட்டின் தற்கால இயல்பிற்கேற்ப இதர குடிசைத் தொழில்களை இங்கு நாம் பொதுவாகப் பரிசீலனை செய்வது முற்றிலும் முறையாகும். நமது நாட்டுக்கான குடிசைத் தொழில்களை எட்டு பெரும்பிரிவினைக்குள்ளாக்கலாம். அவைகள் I இரும்பு வேலை, II மர வேலை, III பொன், வெள்ளி வேலை, IV உலோக வேலை, V ரப்பர், செலுலாய்டு, வல்கனைட் வேலை VI தந்தம், கொம்பு, எலும்பு, முத்துச்சிப்பி, சங்கு, ஆமையோடு, சந்தன மர வேலை, VII நானுவித சாமான்கள் VIII வாத்தியத் தொழில் எனப்படும்.

I இரும்பு வேலை:—ஆலையில் செய்யப்படவேண்டிய பெரிய தொழில்களை விடுத்து, கீழ்க்கண்டவைகள் நம் நாட்டுக் குடிசைத் தொழிற்கு உரியனவைகளாகும்.

(1) நானுவித தட்டுகள் (2) ஊசிகள் (3) க்ஷவரக் கத்திகள் (4) பேனுக்கத்திகள் (5) சேப்டி க்ஷவரக் கத்திகள் (6) கத்தரிக்கோல்கள் (7) பிளான் கம்பாஸ் சாமான்கள் (8) தகட்டினுல் செய்த அலமாரிகள் (9) நெசவுக் கருவிகள் (10) குடும்பத்திற்

கான சிறிய ஆலைகள் (11) பலவகை கைத்தொழில் இயந்திரங்கள் (12) காப்பி அரைக்கும் இயந்திரம் (13) காப்பிக்கொட்டை வறுக்கும் இயந்திரம் (14) கறிகொத்தும் மிஷின்கள் (15) காய், கறி திருத்தும் நூதன அறியாமணைகள் (16) சிறிய மாவரைக்கும் இயந்திரங்கள் (17) தண்ணீர்க் கவலைகள் (18) ஏற்றச் சால்கள் (19) பம்புகள் (20) தச்சு வேலை, கொல்லு வேலை, பித்தளை வேலை, பொன் வேலை முதலியவைகளுக்கான ஆயுதங்கள் (21) கீல்கள், தாழ்ப்பாள்கள், கதவு முளைகள், கைப்பிடிகள் (22) கம்பி ஆணிகள், பலரக டாக்ஸ் ஆணிகள் (23) பலரக ஸ்குரு ஆணிகள் (24) பலவகைப் பூட்டுகள் (25) இரும்புப் பெட்டிகள் (26) கைப்பெட்டிகள் (27) உமிப் போக்கும் ஜல்லடைகள் (28) வேலைப்பாடான ஊஞ்சல் சங்கிலிகள் (29) பலவகைப்பட்ட கரி, விறகு அடுப்புகள், (30) வண்டி வில்லுகள் (31) முள் தராசுகள் (32) பால், ரோலர், பேரிங்கள் (33) வண்டியிருசுகள் (34) ரணவைத்திய மேஜைகள், ஆயுதங்கள்.

II. மரவேலை:—(1) காபிநெட்கள் (2) பர்னிச்சர்கள் (3) குழந்தை தள்ளுவண்டிகள் (4) பிராம்புலேட்டர்கள் (5) மடக்கு வண்டிகள் (6) கதர் நூற்கும் நூதன ராட்டினங்கள் (7) படச் சட்டங்கள் (8) மரபொம்மைகள் (9) சிலைகள் (10) தட்டுகள் (11) கைத்தடிகள் (12) மரவிளையாட்டுச் சாமான்கள் (13) கட்டில்கள் (14) மடக்குக் கட்டில்கள் (15) சிறிய உல்லாசப் படகுகள் (16) மரப்பெட்டிகள் (17) பேழைகள் (18) கைத்தூக்குப் பெட்டிகள் (19) போட்டோ காமராக்கள் (20) கிண்டர் கார்டன் சாமான்கள் (21) நூதன கைத்தறிகள் (22) கைக்குத்து அரிசிக்கான நூதன மர உரல்களும், உலக்கைகளும் (23) நூதன அரிசிமா இயந்திரங்கள் (24) நூதன சுழல் துருத்திகள் (25) மரச்சிக்க நாற்காலிகள் (26) சிற்றுளி வேலை உட்பதிப்பு செய்த மேஜைகள், டீப்பாய்கள் (27) பீப்பாய்கள் (28) நூதன கோட், தலைப்பாகை முளைகள், (29) சதுரங்கக்காய்கள் (30) நூதன அஞ்சரைப் பெட்டிகள் (31) அரிசி, பருப்புவைக்கும் சுழல், காபிநெட்டுகள் (32) வண்டி, ரிக்ஷா, ஜட்கா வேலை.

III. பொன், வெள்ளி வேலை:-(1) தங்கம் வெள்ளியினாலாகிய ஆபரணங்கள் (2) கல்லிழைத்த ஆபரணங்கள் (3) ரோல்டுகோல்டு ஆபரணங்கள் (4) தங்கம் கவரிங் செய்த ஆபரணங்கள் (5) கிலீட், சேர்மான உலோக ஆபரணங்கள் (6) கைக் கெடியாரங்கள் (7) கெடியாரச் சங்கிலிகள், கொலுசுகள் (8) சிறிய பொம்மைகள், சிலைகள்

(9) கைத்தடிகளும், பிடிகளும் (10) பொத்தான்கள் (11) சீப்புகள் (12) பேனு நிப்புகள் (13) பௌண்டன் பேனுக்கள் (14) பொடி டப்பிகள் (15) சுவர்ண, ரஜித பாத்திரங்கள் (16) நகாசீத் தாம்பாளங்கள் (17) செப்புக்கட்டை, வளையல் கம்பிகள்.

IV. உலோக வேலை :—(1) சமையல் பாத்திரங்கள் (2) வெங்கல, முறிவார்ப்பட பாத்திரங்கள் (3) குடிஜல பாத்திரங்கள் (4) நூதன தூக்கு அடுக்குகள் (5) டிப்பன் தூக்குகள் (6) குத்து விளக்குகள் (7) தூங்கா விளக்குகள் (8) தூண்டுகோலில்லா மறை விளக்குகள் (9) கை விளக்குகள் (10) கிருசனுயில் பவர் விளக்குகள் (11) பெட்ரோல் விளக்குகள் (12) கிருசனுயில் காஸ் அடுப்புகள் (13) ஈயப் பாத்திரங்கள் (14) பாடசாலை மணிகள் (15) பூஜை மணிகள் (16) கோயில் மணிகள் (17) உலோக சித்திர விளையாட்டுச் சாமான்கள் (18) முள் தராசுகள் (19) பொன், வெள்ளி சாமான்களை இடையிட்டு தானே அச்சிடும் தராசுகள் (20) சிறிய உருவச்சிலைகள் (21) பொத்தான்கள் (22) குண்டூசிகள் (23) சேப்டி பின்கள் (24) தொப்பி ஊசிகள் (25) பேனு நிப்புகள் (26) பௌண்டன் பேனுக்கள் (27) தகர, பித்தளை தகட்டு விளையாட்டு சாமான்கள் (28) காலிங் பெல்கள் (29) எம்போசிங் டை அச்சுகள் (30) எலக்டிரிக் டேபிள் விசிறிகள் (31) தையல் ஊசி அங்குஸ்தான்கள் (32) கீல்கள், தாழ்ப்பாள்கள், கைப்பிடிகள் (33) லீவர் பூட்டுகள் (34) மாஸ்டர் கீ பூட்டுகள் (35) சிறிய கைப்பெட்டிகள் (36) குழந்தைகள் விளையாட்டு செப்புகள் (37) காண்டில் லாம்புகள், ஸ்டாண்டுகள் (38) சேப்டி ரேஸர் பிடிகள் (39) நூதன நீராவிக் குக்கர்கள் (40) நூதன வெந்நீர் பாய்லர்கள் (41) வேம்பாக்கள் (42) பீப்பாய்கள் (43) கடுதாசிகளைக் குத்தும் மடக்கு ஊசிகள்.

V. ரப்பர், சேலுலாய்ட், வல்கனைட் வேலைகள் :—(1) மோட்டார், சைக்கிள், குழந்தை வண்டிகளுக்கான டயர்கள், குழாய்கள் (2) மழை அங்கிகள், தொப்பிகள் (3) சிறிய சிலைகள் (4) குடைத் துணிகள் (5) பௌண்டன் பேனுக் கூடுகள் (6) பலூன், காற்றுடிகள் (7) பால் பெட்டி நிப்பிள்கள் (8) ரப்பர் குழாய்கள் (9) கால் பந்துகள், டெனிஸ் பந்துகள் (10) பொம்மைகள் (11) விளையாட்டுச் சாமான்கள் (12) பாடசாலை ரப்பர்கள் (13) வளையல்கள் (14) டிராயிங் சாமான்கள்.

VI. தந்தம், கொம்பு, எலும்பு, முத்துச்சிப்பி, சங்கு, ஆமையோடு, கோட்டாங்கச்சி, சந்தண மரவேலை :—(1) சிறிய பொம்

மைகள், சிலைகள் (2) படச் சட்டங்கள் (3) பெட்டிகள் (4) கைத்தடிகள் (5) பொத்தான்கள் (6) மூக்குக் கண்ணாடிச் சட்டங்கள் (7) சிறிய பொம்மைகள், உருவச்சிலைகள் (8) சீப்புகள் (9) பொடி டப்பிகள் (10) குழந்தைகள் விளையாட்டுச் சாமான்கள் (11) சதுரங்கக் காய்கள் (12) மேஜை, டீப்பாய் உட்பதிப்பு வேலைகள் (13) வளையல்கள்.

VII. நானாவித சாமான்கள் :—(1) வர்ணக் கூடை முடைதல் (2) புருஷ்கள் (3) பலவித பீங்கான் சாமான்கள் (4) மெருகிட்ட மண் பாத்திரங்கள் (5) கோரை தரைப் பாய்கள் (6) பலவித கண்ணாடிச் சாமான்கள், கட் கிளாஸ் சாமான்கள் (7) பலரகப்பட்ட காகிதங்கள் (8) மூக்குக்கண்ணாடி வில்லைகள் (9) லென்ஸ்கள் (10) டென்னிஸ் தட்டுகள் (11) ஹாக்கி தடிகள் (12) கிரிக்கட் சாமான்கள் (13) காரம் போர்டுகள் (14) பொம்மை சாமான்கள் (15) வர்ணங்கள் (16) சோப்புகள் (17) மெழுகுவர்த்திகள் (18) எலக்டிரிக் பாக்கெட் விளக்குகள் (19) முகம் பார்க்கும் கைக்கண்ணாடிகள் (20) குடைகள் (21) தர்மாஸ் பாட்டில்கள் (22) கொட்டையில் செய்யும் கோட் பொத்தான்கள் (23) முத்திரை அரக்குகள் (24) பலநிறங்கொண்ட சாக்குக்கட்டிகள் (25) கோழி, பட்சி மயிர்த் துடைப்பங்கள் (26) பென்சில் சீவும் திருகுகத்திகள் (27) எழுதும், அச்சு, ரப்பர் ஸ்டாம்பு இங்கிகள் (28) கடுதாசியில் துளையிடும் மெஷீன்கள் (29) கண்ணாடி வளையல்கள் (30) பென்சில்கள் (31) சிலேட் பலபங்கள் (32) பேப்பர் வெயிட்டுகள், (33) பேப்பர்கள்.

VIII. வாத்திய வேலை :—(1) வீணைகள் (2) தம்புராக்கள் (3) பிடில்கள் (4) சுரகெத்து (5) சாரந்தா (6) சித்தார் (7) மிருதங்கம் (8) தபேலா (9) ஹார்மோனியம் (10) கிராமபோன் (11) பியோனுக்கள் (12) நாதசுரம் (13) தவுல் (14) ஒத்து (15) ஜாலர்கள் (16) கஞ்சிரா (17) முக வீணை (18) மோர்சிங் (19) பான்ஜார் (20) புல்லாங்குழல் (21) அக்கார்டியன்கள்.

ஆலைத்தொழில்களை விடுத்து மற்றெல்லாக் குடிசைச் தொழில்களில் பெரும்பாலானவைகளை மேற்குறித்த எட்டுப் பிரிவினைகளுக்குள் அடக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. முதன் முதலாவதாக குடிசைத் தொழில்கள் அபிவிருத்தியடைய வேண்டுமானல் கீழ்த்தர தொழிலாளர்களுள் இருந்துவரும் குடிப்பழக்கம் அறவே ஒழிந்து,

நாணய வரிசை உண்டாகவேண்டும். பொன், வெள்ளி உலோகத் தொழில், ரப்பர் தொழில் முதலியவைகள் கூட்டு கம்பெனிகள் மூலமாகவும், ஐக்கிய சங்கங்கள் மூலமாகவும், கைத்தொழில் பாங்கிகள் மூலமாகவும், அரசாங்கத்தார் அவ்வித கூட்டுக் கம்பெனிகளில் பங்கெடுத்துக்கொண்டு மேற்பார்வையிடுவதாலும் வர்த்தக முறையில் அபிவிருத்தி செய்விக்கப்படலாம். பெங்களூரில் உற்பத்தியாகும் பிலேச்சர் சில்க், பட்டுத்தறி நெசவுக்கு அரசாங்கத்தார் காட்டியிருக்கும் உதவியைப்போன்று அன்றாடம் ஏழைகள் முதல் பிரபுக்கள் வரையில் உபயோகிக்கும் முக்கிய நாட்டுச் சாமான்களின் உற்பத்திக்குப் பண உதவி புரிதல் அவசியமன்றோ? மேற்குறித்த தொழிலாளர்களுக்கு தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்களையும், தளவாடங்களையும், ஆயுத இயந்திரங்களையும், கட்டுகவாவது, ரொக்கக் கடனுக்குப் பதிலாகவாவது அரசாங்கத்தாரும், தொழிற் சங்கத்தார்களும் கொடுத்துதவவேண்டும். மேற்றிசையாரை ஒத்து தொழிலாளிகளுக்கு ஐக்கிய சங்க இலாக்கா மூலமாகவாவது கைத்தொழில் இலாக்கா மூலமாகவாவது 'கில்டுகள்' தொழிலாளர் சங்கங்களை ஆங்காங்கு ஏற்படுத்திக்கொடுத்தல் அவசியமாகும். அல்லாமலும் ஒவ்வொரு தொழில்களிலும் இருந்துவரும் மத்திய தரகிரிகளை சட்டவாயிலாக நீக்குதல்வேண்டும். ஒவ்வொரு மாகாணத்தின் உற்பத்திச் சரக்குகளை விலை, விலாசம் உள்பட இந்தியா கவர்ன்மெண்டாருக்கும், இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா மந்திரியாருக்கும் மூன்று மாதத்திற்கொரு முறை அனுப்பி வெளிநாடுகளுக்கு விளம்பரம் செய்தல்வேண்டும். குடிசைத் தொழில்கள் காலூன்றும் வரையில் அல்லது ஓர் குறிப்பிட்ட காலம் வரையில், ரயில்வே குறைந்த கட்டணம் சாமான்களுக்கும், காட்சி பொருள்களுக்கும், தொழிலாளர்களுக்கும் விதித்தல் மிக்க நன்மைபயக்கும். பிரதி ஜில்லா அல்லது கைத்தொழில் வட்டங்கள்தோறும் அந்த ஜில்லாவில் உற்பத்தியாகும் குடிசைத் தொழில் பொருள்களை ஓர் காட்சி ஸ்தலத்தில் சேர்த்து வைத்து, வியாபாரம் செய்வித்தலும் மிக்க அத்தியாவஸ்யமாகும். ஒரு மாகாணத்தில் உற்பத்தியாகும் பொருள்களை வேறு மாகாணங்களுக்கு வருடம் ஒருமுறை அல்லது இருமுறை அந்தந்த காட்சி ஸ்தலங்களுக்கு மாதிரிப் பொருள்களாக அனுப்பிவரும் வசதிகளும் செய்யப்படல்வேண்டும். ஒரு தொழிலில் கற்றுத் தேர்ந்த வேலைக்காரர்களை அத்தொழிலை வேறு ஸ்தலங்களில் உள்ளவர்களுக்குப் போதிக்கும் நிமித்தமாய் அனுப்புவதும்சிறந்தமுறையாகும். எனவே,

இவ்வித அபிவிருத்திக்கான வசதிகள் உண்டு செய்விக்கப்பட்டு நம் நாட்டுக் குடிசைத்தொழில்கள் ஆரம்பிக்கப் பட்டால் இரண்டொரு வருடங்களிலேயே தக்க பலனைக்காணலாம். நம்நாட்டுக்கு ஏராளமாக அனுப்பப்படும் உரிமையற்ற அந்நிய நாட்டுச் சரக்குகளை சட்ட வாயிலாகத் தடைசெய்வதும், அதிக தீர்வை ஏற்படுத்துவதும் நம் நாட்டுக் குடிசைத் தொழிலபிவிருத்திக்கு அடிப்படையான அவசரக் காரியங்களாகும்.

இதனையொட்டி ஆலைத் தொழில்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்வது அவசியமாகிறது. குடிசைத் தொழிலோடு பெருவாரியாக உற்பத்தி செய்யும் ஆலைத்தொழிலுக்கும் நம்நாட்டில் வசதிகள் ஏற்படவேண்டும். இல்லையேல், வெளிநாட்டு மலிவான சாமான்கள் வந்து குவிந்துபோட்டியிடும். குடிசைத் தொழில்களுக்கு அவசியமான கருவிகளையும், இயந்திரங்களையும் செய்வதற்கு பெரிய கைத் தொழில்களும், ஆலைகளும் அவசியமானவை. தேசப் பொருளாதாரம் முன்னேற்றமடைந்து இதரர் சகாயமில்லாமல் இருக்கவேண்டுமாயின் பெரிய தொழில்களும், குடிசைத் தொழில்களும் ஒன்றுசேர்ந்து நடைபெறவேண்டும். தொழில் முன்னேற்றமடைந்த நாடுகளிலெல்லாம் இவ்வித நெருங்கிய சம்பந்தம் இவ்விரண்டுக்கும் எற்பட்டிருக்கின்றது. இவைகளைத் தனித் தனியாகப் பிரித்தால் பொருளாதாரத் துறையில் தேசத்திற்கு நஷ்டமே விளையும்.

நம்நாட்டிற்கு வேண்டிய பலவித இயந்திரங்கள், இஞ்சின்கள், மோட்டார் வண்டிகள், துவிச்சக்கர வண்டிகள், கப்பல்கள், ஆகாய விமானங்கள், விவசாயக் கருவிகள், நெசவுக் கருவிகள், ஆலைகள் முதலியவைகளை உற்பத்திசெய்வதையும் நம்நாட்டார், காலதாமதமின்றி கைக்கொள்ளவேண்டும். இங்கிலாந்தைவிட இருமடங்கு நீண்ட இருப்புப்பாதைகளையுடைய இந்தியாவிற்குவேண்டிய ரயில்வே இஞ்சின்களை இதர நாடுகளிலிருந்து எதிர்பார்க்கும் நிலைமையிலிருக்கின்றோம். இந்தியாவில் இவ்வித பெரிய தொழில்களை தற்போது ஆரம்பிப்பது அதிமுக்கியமாகும். இவ்விதத் தொழில்கள் இங்கு வேரூன்றிவிட்டால், நமக்கு திரவிய லாபமட்டுமல்லாமல், நம்நாட்டுத் தொழிலாளர்களின் திறமையும், சக்தியும் அபிவிருத்தியடைந்து பெரிய கைத்தொழில்களை முயன்று முடிக்கும் ஆற்றலுடையவர்களாவார்களென்பது திண்ணம்.

பதின்மூன்றாவது அத்தியாயம்.

குடிசைத் தொழிலபிவிருத்தி முறைகளும், அரசாங்கப் பொறுப்பும்.

இந்தியா தேசமானது, பூர்ண சுயேச்சையும், ஜனநாயக ஆட்சியும் பெற்றுள்ள கனடா போன்று எல்லா சுதந்திரங்களையும் அடைய வேண்டுமென்பதே நமது தேசிய வாதிகளின் முடிவான நோக்கமாகும். தற்காலம் நமக்குக் கிட்டியிருக்கும் காங்கிரஸ் ஆட்சியில் சிற்சில மாகாணங்களுக்கு முன்னிலும் அதிக அரசாங்க அதிகாரங்கள் கிடைத்திருக்கின்றன. சென்னை மாகாணத்தில் இவ்வாட்சியின் சுவற்பகாலத்திற்குள்ளேயே பல சமூக சீர்திருத்த முயற்சிகளும், கைத்தொழிலபிவிருத்திக்கான சில காரியங்களும், மிகசிரத்தையுடன் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த அரிய சந்தர்ப்பத்தை யொட்டி கைத்தொழிலபிவிருத்தியில் உடனே செய்யவேண்டியவை களையும், எதிர்காலத்தில் நிறைவேற்றிவைக்கவேண்டியவைகளடங்கிய தொழிற்திட்டங்களையும் ஒவ்வொரு மாகாணத்திலும் நிறுவவேண்டுவது மிக அவசியமாகும். இதில் காலதாமதம் ஏற்படுமாயின், தேசத்திற்கு இதுவரையில் ஏற்பட்டிருக்கும் நஷ்டத்திற்குமேல் பன்மடங்கு அதிக நஷ்டமும், பொதுமக்களின் கஷ்டமும், தொழில்மக்களின் வறுமையும் அதிகப்படும்.

கைத்தொழிலாளர் அபிவிருத்தியடைவதற்கு முதலாவதாக சுய உதவியும், சுய அபிவிருத்தியில் அக்கரையும்வேண்டும். இதற்குமேல் அரசாங்க உதவிகளை அடைந்தால், அதன்வழியே தீவிரமுன்னேற்றம் பெறுவது சுலபமாகும். மனோதிடமும், திறமையும், இதரர் உதவியை அதிகமாக எதிர்பாராமல் வாழ்நாள் கழித்துவரும் ஓர் தொழில் வகுப்பினர், அந்நியர் கையை எதிர்பாராமல் முதலில்தங்கள் குடும்ப சம்ரக்ஷணைக்கான தொழிற் முயற்சிகளைத் தேடிக்கொள்வது குற்றமாகமாட்டாது. அவ்வித முன்னேற்றம் பெறும் தொழிலாளர் குடும்பங்கள் மூலமாக கிராமவாழ்வும், தொழில்களும் சீர்படும். கிராமங்கள் மூலமாக தாலூக்காக்களும், தாலூக்கா மூலமாக ஜில்லாக்களும், ஜில்லாக்கள் மூலமாக மாகாணங்களும், இறுதியில் இந்தியா தேசம் முழுதும் சீர்படும். எனவே, முதலாவதாக சீர்படவேண்டியது கிராமக் கைத்தொழிலாளர் தொழில்களும், வாழ்க்கையுமெனப் பெறப்படுகின்றது.

சர் எம். விஸ்வேஸ்வரய்யாவின் அபிப்பிராயம்போல், இந்தியாவின் தேசக் கைத்தொழிலபிவிருத்தி நிர்மாண வேலைக்காக ஒரு காலவரையும், அதற்கேற்ற திட்டங்களையும் வரையறுத்துக்கொள்வது அவசியமாகிறது. தேச அபிவிருத்திக்கு ஒரு பத்து வருடதிட்டமும், ஒவ்வொரு மாகாணங்களுக்கும் ஓர் ஐந்து வருடதிட்டமும் தற்கால நிலைமையில் போதியனவாகும். பிரதி ஜில்லாக்களுக்கும் அவைகளைச் சார்ந்த தாலூக்கா, கிராமவட்டங்களுக்கும், ஒரு மூன்று வருடத்திட்டம் நன்மை பயக்கும். ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் பிரதி வருடந்தோறும் அவசியத்திற்கும், விகிதாசாரத்திற்கும் தக்கவாறு திட்டங்களை அமைத்துக்கொள்ளவும், மாற்றிக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் வேண்டும். இந்த ஐந்து வருடத் திட்டம் கட்டுத்திட்டங்களுடன் ஆரம்பிக்கப்பட்டால் கைத்தொழில் மக்கள் வீடுகளனைத்தும் சிறிய தொழிற்சாலைகளாக மாறிவிடும். இவைகளில் வெறுங் குடிசைத்தொழில்கள் மட்டுமேயன்றி, ஜில்லாக்களிலும் சில குறிப்பிட்ட முக்கிய தாலுக்காக்களிலும் ஏற்படும் பெரிய தொழிற்சாலைகளுக்கும், தொழில்களுக்கும் உபயோகமான வஸ்துக்களை உற்பத்தி செய்யவேண்டும். இவ்வித தொழில்களின் தற்காப்புக்காக அரசாங்க பாதுகாப்புச் சட்டங்களும், அந்நிய நாட்டு இறக்குமதிகளின்மீது சுங்கத் தீர்வை யென்னும் பெரிய மதிற் சுவரையும் எழுப்புதல் வேண்டும். இவைகளை மத்திய கவர்ன்மெண்டாருடன் மாகாண கவர்ன்மெண்டார் ஒத்துழைத்து, வற்புறுத்தி முடித்தல் வேண்டும்.

ஜப்பானில் கைக்கொண்டிருப்பது போலவே, கிராமங்களின் வசதிகளை முதலில் ஆராய்வதுடன், ஜனத்தொகை, வருமானம், கூலிநிலைமை முதலியவைகளை பரிசீலனை செய்யவேண்டும். 500 ஆண்மக்களுக்குக் குறைந்த ஜனத்தொகையுள்ள கிராமங்களை மூன்று நான்கு சேர்த்து ஒரு கிராமத் தொகுதியாகச் செய்ய வேண்டும். இதில் பூர்வக் கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவாயிருந்தால், 500 கைத்தொழிலாளர்க்குக் குறையாத வட்டங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அந்தந்த வட்டங்களுக்கு மூன்று தொழிலாளர்களும், இரண்டு இதர வகுப்புப் பிரமுகர்களும் கொண்ட அபிவிருத்தி பஞ்சாயத்தாரை நியமித்து, கிராமக் காரியங்களைக் கண்காணிக்கச் செய்தால் உண்மையான சுய ஆட்சி முறை கைவந்ததாகும். இஃது கிராமவாசிகளின் சுய முயற்சியையும், ஊக்கத்தையும், பொறுப்பையும் விருத்தி செய்யும். ஆனால் ஆரம்பத்தில்,

முதலிருவருடங்களில் அரசாங்க உத்தியோகஸ்தர்களாலும், மற்றய சிப்பந்திகளாலும், தாலூக்கா, ஜில்லா அபிவிருத்தி கமிட்டி அல்லது சபைகளாலும், கிராம பஞ்சாயத்தார்களாலும் வழி காட்டப்பட வேண்டுவது அவசியமாகும். தாலூக்கா, ஜில்லா அபிவிருத்தி சபைகளுக்கு, தொழிற்பிரிவினைக்கேற்றபடி, கிளை நிர்வாகச் சங்கங்கள் ஏற்படவேண்டும். இவ்வித பல சங்கங்களுக்கு தலைச்சங்கம் ஒன்று நிறுவுதல் வேண்டும். இந்த சங்கம் அதன் கீழுள்ள பல வட்டங்களின் விவசாயம், கைத்தொழில், சுகாதாரம், கல்வி முதலிய அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டு வரவேண்டும். இவைகளுக்காக செய்யப்படும் செலவு அவ்வருடத்திய பட்ஜெட் அதாவது ஒதுக்கி வைத்திருக்கும் தொகைக்கு மேற்படக்கூடாது. என்றாலும், முதல் கிடைக்கவில்லை யென்னும் காரணத்தால் அவ்விடத்திய தொழிலாளர்கள் சுவற்ப மூலதனம், அதிக வட்டியிலும், நிர்ப்பந்தமான ஒப்பந்தங்கள்மீதும் கொடுக்க முன்வரும், முதலாளிகளுக்கு அடிமைப்பட விடக்கூடாது. இதுவிஷயத்தில் கூடியவரையில் நாம் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களில் கையாளப்படும் வழிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். ஆனால், மேல்நாட்டுக் கைத்தொழிலபிவிருத்தி முறையில் நம் நாட்டார் பின்பற்றி நடக்கவேண்டிய உத்தம வழிகள் பலவிருக்க வேலை நிறுத்தம், கூலித்தகராறு கொடிபிடித்துத் திரிதல் முதலிய தீய வழக்கங்களைமட்டுமே நம்நாட்டார் இப்பொழுது பின்பற்றி வருகின்றனர். இத்துர்ப்பழக்கம் ஏழைகளான நம்நாட்டுக் கைத்தொழிலாளர்களை பரம ஏழைகளாகச் செய்து வருவதுடன் நாணய வரிசையையும், நம்பிக்கையையும், நன்மதிப்பையும் குலைத்து விடுகின்றது.

நமது நாட்டின் பொருளாதார நிலைமை விவசாயத்தையே முற்றிலும் பொருத்திருப்பதால், இதுவரையில் அதில் யாதொரு விதமான மாறுதலும் ஏற்படவில்லை. மேட்டூர் அணைக்கட்டுப் பாசனத்தால் மட்டுமே மாகாண விவசாயம் அனைத்தும் லாபகரமாக செய்துவிட முடியாது. ஆகையால் இதுவரையில் பொதுமக்களைப் பீடித்திருக்கும் வறுமை மற்ற நாடுகளையொத்து, நீங்கினபாடில்லை. பலவித தொழில் முறைகளை நிறுவி இயன்றவரை பொதுமக்களின் வாழ்க்கை, வருமானம் முதலியவைகளை உயர்த்த வேண்டும். தொழிலாளர் குடும்ப வாழ்க்கை சிக்கனமாக நடத்தப்படுவதற்கும், கல்யாணம் முதலிய சுபாசுப காரியங்களில் கடன்பட்டு விரையம் செய்யப்படாதிருப்பதற்குமான திட்டங்கள் அந்தந்த வகுப்

பாருக்குள் ஏற்படும் ஸ்தாபனங்களால் கட்டு திட்டங்களுக்குட்படுத்த வேண்டும். இதில் சர்க்கார் நேராகத் தலையிடக் கூடாவிட்டாலும், ஐக்கிய நாணயச்சங்கம், தொழிற் சங்கம், டிரேட் யூனியன் ஆக்ட், கம்பெனீஸ் ஆக்ட் முதலியவைகளில் சில பல நிர்ப்பந்தங்களைப் புகுத்திவிடலாம். அதாவது, பொதுவாக தொழிலாளர் ஜீவனம், இதர செலவுகள் குடும்பநிலைமைக்கும், வரும்படிக்கும் ஏற்றவாறு செலவிடச்செய்ய வேண்டுமென்பதே நோக்கமாகக்கொள்ளவேண்டும். முதலாவதாக இப்போதிருக்கும் டிரேட் யூனியன் ஆக்டை சீர்திருத்தம் செய்யவேண்டும், இவ்வித திருத்தங்களை மாகாண ரெகுலேஷன்களில் இந்திய கவர்ன்மெண்டாரின் அநுமதியின்றியே மாற்றிவிடலாம். தற்போது கிராமாந்திரங்களில் 4 பேர் கொண்ட ஓர் ஏழை தச்சுவேலைக்காரர் அல்லது நெசவாளியின் மாதவருமானம் 9 ரூபாய்க்கு மேலில்லை. இந்த வருமானம் பட்டிணங்களில் மண்வெட்டி தூக்கிச் சுமக்கும் கூலிகளின் வருமானத்தில் சரிபாதியாகயிருக்கிறது. இந்த சுவற்ப வருமானத்தைக்கொண்டு தங்கள் குடும்பத்தையும், குடும்பச் செலவுகளான கர்ணபூஷணம், உபநயனம், கல்யாணம் முதலியவைகளைச் செய்து முடித்தல் எங்ஙனம் சாத்தியமாகும்? இத்துடன் குடும்பரக்ஷகரின் ஆயுள் கடவுள் கையிலிருக்கிறது. திடீரென இவருக்கு ஓர் ஆபத்து உண்டாகிவிடுமாயின் அக்குடும்பத்தின் கதி அதோகதியே யாகும்.

எனவே, இவ்வித ஆபத்தான நிலைமைக்கு ஏழைக்கைத்தொழில் குடும்பங்கள் வந்துவிடாமலிருப்பதற்கும், அது காரணமாக அவர்கள் தொழில் நசித்துவிடாதிருக்கும் வசதிகளையும், பாதுகாப்பையும் அரசாங்கத்தார் சட்டவழியாக மெல்ல நுழைத்தலவசியமாகும். இப்பொழுது திருத்தியமைக்கப்பட்டிருக்கும் இன்ஷியூரன்ஸ்ஆக்டின் கீழ் ஏழைமக்கள் தங்கள் ஆயுளை ரூ. 500-க்கு குறைந்த தொகைகளுக்கு இன்ஷியூர் செய்ய முடியாதிருக்கிறது. இதனை தொழில் மக்களின் நன்மையையும், வருமானத்தையும் கருதி ரூ. 300-க்கு குறைத்து விடுவது அரசாங்கத்தாரின் கடமையாகவேண்டும். கைத்தொழிலபிவிருத்தியினூடே, இன்ஷியூரன்ஸ்அபிவிருத்தியும்தொழில் மக்களிடம் பரவச்செய்யவேண்டும். இதனை அரசாங்கத்தார் நேரில் வற்புறுத்தக் கூடாதவிடத்து, தொழிற்சங்கம், அதாவது அந்தந்த தொழிற் 'கில்டுகள்' மூலமாக நிர்ப்பந்திக்கப்பட்டு, கட்டணத் தொகைகளும் ஒழுங்காக வசூலிக்கப்படும் வசதிகளை அமைத்துக் கொடுப்பது அதிகக் கடினமான காரியங்களல்ல.

இந்தியாவில் எல்லா மாகாணங்களும் காங்கிரஸ் மந்திரிகளின் ஆட்சியின்கீழ் இன்னும் வரவில்லை. இதுவரையில் வந்திருப்பவைகள் 6 ஆகும். அவைகளுள் சென்னை மாகாணம் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருந்தாலும், அஃது ஒன்றுமட்டுமே தேசம் முழுதும் ஒப்பி நடக்கும் ஓர் தொழிலபிவிருத்தி திட்டத்தை நிறுவி அமுலுக்குக்கொண்டுவர முடியாது. எல்லா மாகாணத்தாரும் ஏகோபித்துச் செய்யும் தொழிற் திட்டங்களே நடை முதலுக்கு சாத்தியமானவைகளாகும். எனவே, இவ்வித திட்டங்களே, தொழில் வகுப்புபேதங்களை இப்பொழுது நிராகரித்து வருவதுபோல இனி நிராகரிக்காமல் ஒப்புக்கொண்டு, பொதுமக்கள், தொழில்மக்கள் ஆகிய இருவர்களின் ஒத்துழைப்பின் பிருதியால் தயாரித்தல்வேண்டும். இன்னும் ஒரு முக்கிய விஷயத்தையும் நமது அரசியல் வாதிகள் கவனத்தில் வைக்கவேண்டும். தொழில்மக்களுக்கு, இப்பொழுது யாதொரு வாக்கு சுதந்திரம் கொடாமல், அரசாங்கப் பொறுப்பில் திணையளவு சுதந்திரமும் இல்லாமல் வாய்களை அடைத்துவெறும் ஊமைகளாகச் செய்திருக்கும் முதற் குற்றத்தைக் களைதல்வேண்டும். இரண்டாவதாக நாட்டுக் கைத்தொழிலபிவிருத்தி மட்டிலுமாவது கட்சிபேதங்காட்டாது, எல்லா இராஜீயக் கட்சிகளுடனும், ஸ்தாபனங்களுடனும் ஒத்துழைத்தல் மிக மிக அவசியமாகும். இது முடியாத ஓர் கடின காரியமல்ல. விட்டுக்கொடுக்கும் சுபாவமும், மன்னிக்கும் குணமும், மனிதவர்க்கத்திற்கு இயற்கையில் அமைந்திருக்கின்றன வென்றால், இதனை இன்று உன்னத அரசாங்கப்பதவி வகித்துவரும், ஓர் கட்சிக்காரர் தாராளமாக உபயோகிக்கச் சங்கை கொள்வதேன் ?

இன்னும் மிகப் பெரிய ஓர் விஷயத்தைப்பற்றி இங்கு பிரஸ்தாபிக்காமல் விடுத்தால் அஃது தேசத்துரோகமாகமுடியும். அதாவது அரசாங்கத்தாரால் இம்மாகாணத்தில் ஏற்படுத்தப்பட்ட, 30 வருடங்களுக்குமேல் முயன்றுவரும் அரசாங்க கைத்தொழில் இலாக்காவை உடனே திருத்தி யமைக்கவேண்டு மென்பதே. ஆரம்பத்திலிருந்து வந்த இந்த இலாக்கா தலைவர்களால் இம்மாகாணத்தில் உண்மையான நூதன தொழிற்புரட்சி உண்டாக்கப்பட்டதெனினும் பிந்திய தலைவர்கள், ஆபீஸ் குமாஸ்தாக்கள் போன்று, ராயச வேலைக்காரர்களாயிருந்து வந்திருக்கின்றனர். விவசாய இலாக்காவுடன் சேர்க்கப்படவேண்டிய கிணறுதோண்டும் தொழிலுக்கும், கைத்தொழில் இலாக்காவிற்கும் யாது சம்பந்தம் இருக்கிறதென்பது புலப்படவில்லை. இந்த இலாக்காவின் தலைவர் உண்மையான ஓர் ரசாயன சாஸ்திரி

யாகவாவது கைத்தொழில் நிபுணராகவாவது இருத்தல் அத்தியாவஸ்யமாகும். இந்தியக் கைத்தொழில் கமிஷன் விசாரணையில் இதனவசியத்தை நாம் ஊன்றிச் சொல்லியிருக்கின்றோம். இவ்விலாக்கா நூதன தொழில் முறைகளை ஆராய்ச்சி செய்வதற்கு அநுகுணமான ரசாயன ஆராய்ச்சி ஸ்தலம் (ரீசர்ச் இன்ஸ்டிட்யூட்) ஒன்றை அதி விரைவில் நிர்மாணித்தலும், அரசாங்கக் கைத்தொழில் ஆலோசனை சங்கத்தை, தொழில் பிரதிநிதிகளை அதிகப்படுத்தி திருத்தியமைத்தலும் வேண்டும். நாட்டுக் கைத்தொழில்களுக்குப் புத்துயிர்அளிக்க வேண்டுமானால், அவைகளால் நம்நாடு சீர்பட வேண்டுமானால், அரசாங்கத்தார் செய்யும் பணச்செலவின் முழுப்பலனையடைய வேண்டுமானால் இந்த இலாக்காவை நாளையே சீர்படுத்தி, களைகளைப் பிடுங்கி எறிந்து, வேறு புதிய நாற்றுகளை நடுதல் வேண்டும்.

நம் மாகாண அரசாங்கத்தாருக்கு மற்றொரு முக்கிய கடமையுமிருக்கிறது. லார்டு பெண்ட்லாண்டு கவர்னராயிருந்தபோது சென்னை நகரில் இரண்டு பெரிய கைத்தொழிற் காட்சியை ஏற்படுத்தி, ஓர் பெரும் ஊக்கத்தை உண்டு செய்தார். இதற்கு பொருளுதவி செய்ய பல சுதேச மன்னர்களும், ஜமீன்தாரர்களும், மிராசுதார்களும் முன் வந்தனர். அவ்வழியைப் பின்பற்றி, அரசாங்க ஆதரவில் வருடமொருமுறை விவசாயம், கைத்தொழில் பொருட்காட்சிகள் தலை நகரிலும், ஜில்லாக்கள்தோறும் நடைபெறச் செய்தல் அவசியமாகும். இவ்வித எண்ணிக்கையற்ற பொருட்காட்சி ஸ்தாபனங்களால் மேற்றிசையாரும், முக்கியமாக ஜப்பான் தேசமும் அபரிமிதமான கைத்தொழிலுச்சம் பெற்றிருக்கின்றனவென்னும் உண்மையை உணர்ந்து நமது மாகாண அரசாங்கத்தார் இவ்வழியே வேண்டுவன புரிவார்களென மிக எதிர்பார்க்கப் படுகின்றது.

இம் மாகாணத்தில் சென்ற 1936-37 வருடத்தில் ஏற்றுமதி, இறக்குமதிப்புள்ளிகள் அநுபந்தம் A-ல் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் காங்கிரஸ்ஆட்சி ஏற்படுவதற்குமுன் நிகழ்ந்தவைகளாகும். 1937-38 வருடத்தில் காங்கிரஸ் ஆட்சியின்கீழ் 'இறக்குமதி அதிகம்' யென்னும் தலைப்பில் மிக வெளிப்படையான மாறுதல்கள் ஏற்படாவிடில் நாட்டுக் கைத்தொழில் புனருத்தாரணம் மிக விரைவில் உண்டாக மாட்டாதென்பது நிச்சயம்.

பதினைன்காவது அத்தியாயம்.

நம் நாட்டுக் கைத்தொழிலபிவிருத்தி திட்டங்கள்.

நமது நாட்டுக் கைத்தொழிலபிவிருத்திக்காக, இந்தியாவிற்கு ஓர் பத்து வருடத் திட்டமும், மாகாணங்களுக்கு ஓர் ஐந்து வருடத் திட்டமும், ஜில்லா, தாலூக்கா, கிராமங்களுக்கு ஓர் மூன்று வருடத் திட்டமும் அவசியமென முன் அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. முதலாவதாக கிராம திட்டத்தை எடுத்துக்கொள்வோம். ஓர் தாலூக்காவின் கீழ்ப்பட்ட கிராமங்களை பல கிராமங்கள் கொண்ட தொகுதியாகப் பிரிக்கவேண்டும். அந்தந்த தாலூக்காவின் சர்வே படங்களைக்கொண்டு இப்பிரிவினைகளை ஐந்து நிமிடத்தில் செய்துவிடலாம். இத்தகைய வட்டங்களுக்கு ஓர் பெரிய ரஸ்தாவையும், ஆறு, நதிகளையும் எல்லையாக வைத்துக்கொள்ள வேண்டும். ஓர் ரஸ்தாவிற்கு இரு பாரிசத்திலுமுள்ள கிராமங்களை ஒன்றுசேர்த்து வட்டங்களாகப் பிரிப்பது சரியென்றாலும், நதிகளுக்கு அக்கரையிலும், இக்கரையிலுமுள்ள கிராமங்களையும், தாலூக்காக்களையும் ஒன்றுசேர்த்த வட்டங்களாகச் செய்தால், ரஸ்தா வசதிகளையும், பாலம் முதலிய வசதிகளையும் சுலபமாக ஏற்படுத்த முடியாது. கிராம வட்டங்களின் தலைமைத்தொழில் ஸ்தானம் இயன்றவரையில் ரயில்வே வசதியுள்ளதாக யிருக்க வேண்டும். முதலாறு மாதங்களில் கிராமங்களையும், தாலூக்காக்களையும் தொழில் வட்டங்களாகப் பிரிப்பதும், ஜனக்கணிதை யெடுப்பதும், பஞ்சாயத்தார்களையும், வேறு ஸ்தல ஸ்தாபனங்களையும் ஏற்படுத்துவதும் கூடும். மறு ஆறுமாதத்திற்குள் கிராம ரஸ்தாக்களும், கிணறு முதலிய குடிஜல வசதிகளும், கிராமப் பொதுவில் ஆரம்பப் பாடசாலைகளும், கைத்தொழிற்சாலைகளுக்கான கொட்டகைச்சாலைகளும், அவைகளுக்கருகாமையில் கிராமத்தொழிலாளர்க்கான குடிசைகளைக் கட்டுதலையும் மேற்கொள்ளுதல் வேண்டும். பிந்திய வருடங்களில் ஸ்தலத்திற்கேற்ற கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுதல் வேண்டும். தொழிலாளர்களுக்குள்ளே, ஐக்கிய சங்கமூலமாகவாவது, கூட்டுக் கம்பெனி மூலமாகவாவது பிரத்தியேகமான தொழிற்சாலைகளை உற்சாகப்படுத்தி ஏற்படுத்தச் செய்வதும், பஞ்சாயத்தாரின், அல்லது ஸ்தல கைத்தொழிலபிவிருத்தி சங்கத்தாரின் முக்கிய கடமையாக யிருத்தல் வேண்டும்.

கிராமத் தொழிற்சாலைகளால் வரும் லாபத்தின் ஓர் குறிப்பிட்ட பாகத்தை மூலப்பொருள்களை வாங்கி சேகரித்து வைப்பதில் செல விடவேண்டும். ரஸ்தா போடுதல், குடிஜலவசதியமைத்தல் முதலிய பிரதம நிர்மாண வேலைகள் தாலூக்கா, ஜில்லா தலைமை நகர்களுக்கு அவசியமல்லவாதலால், முதல் வருடத்திலேயே அங்கு வேலைத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவந்துவிடலாம். மாகாண, ஜில்லா திட்டங்களை கீழ்க்கண்டவிதமாகச் செய்துகொள்ளலாம்.

முதல் வருட வேலைகள் :—

(1) அந்தந்த தொழில்களுக்கேற்ற வட்டங்களைப் பிரித்துக் கொள்ளுதல்.

(2) தொழிலாளர்களின் கணிதை யெடுத்தல்.

(3) தொழிலாளர்களில் பதினுன்கு வயதுக்குட்பட்ட சிறுவர் களின் கணிதை யெடுத்தல்.

(4) பொதுப் பாடசாலைகளில் பொதுக்கல்வி, தொழிற் கல்வி கற்று வரும் தொழில் வகுப்புச் சிறுவர்களின் கணிதை எடுத்தல்.

(5) அந்தந்த தொழில்களால் குடிசைத் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் சராசரி மாதவருமானத்தை புள்ளி விவரத்தால் அறிந்து கொள்ளல்.

(6) ஸ்தலங்களில் கிடைக்கும் விபரங்களைக்கொண்டு தொழிற் தேவைகளையும், கைத்தொழிற் பொருள்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடுமா என்பதையும், பரீட்சித்தறிந்து புள்ளி விபரங்களைச் சேகரித்தல் முதலியவைகளனைத்தும் முதல் வருட வேலைத் திட்டங் களாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இப்போதிருக்கும் அரசாங்க ஸ்தல உத்தியோகஸ்தர்களைக் கொண்டும், கைத்தொழில் இலாக்கா சிப்பந்திகளைக் கொண்டும் தனித்த பணச்செலவில்லாமலே ஆறுமாத காலத்திற்குள் செய்விக்கப்படலாம். இவைகளுக்கு கௌரவ உத்தி யோகஸ்தர்களையும் தொழிலாளர் வகுப்பினின்றும் நியமித்தல் நன்றாகும்.

இரண்டாம் வருட வேலைகள் :—

(1) அந்தந்த தொழிலாளர் ஜனக்கணிதையின்படிக்கும், மூலப் பொருள்களின் வசதிகளைப் பொருத்தும் இரண்டுக்குக் குறை யாத, நான்குக்கு மேற்படாத மாதிரி தொழிற்சாலைகளை ஸ்தா பித்தல்.

(2) மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருதலும், ஓர் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேற்பட்ட காப்பி ஹோட்டல்களை தடை செய்தல், சினிமா கொட்டகைகளைக் குறைத்தல்.

(3) கட்டாய ஆரம்பக் கல்வியை 14 வயது வரையில் எல்லாச் சிறுவர்களுக்கும் நாட்டு முறையில் போதிக்கச் செய்தல்.

(4) 14 வயதுக்கு மேல், உயர் படிப்பில் ஆவலும், திறமையுமற்ற தொழிலாளச் சிறுவர்களுக்கு ஸ்தலத்தின் அவசியத்திற்கேற்ற கட்டாயத் தொழிற் கல்வி போதித்தல்.

(5) ஆங்காங்கு தொழிலாளர் சிகிச்சைக்கான நாட்டு வைத்திய வசதிகளை தொழிற்சாலைகள், தொழிற் பாடசாலைகளையொட்டி ஏற்படுத்துதல்.

(6) ஐக்கிய நாணய சங்கங்களையும், தொழிற் சங்கங்களை (கில்டுகளை)யும் உற்பத்தி செய்தல்.

(7) கைத்தொழிற் பிரசங்கங்கள், பிரசாரங்கள், படக்காட்சிகள், ஊர் ஊராகச் சுற்றித் திரியும் புத்தக, பட, விளம்பர வண்டிகள் மூலமாக தொழிலாளர்களின் தொழில் ஞானத்தை விருத்தி செய்தல் முதலிய ஆக்க வேலைகள் இரண்டாம் வருடத்தில் மேற்கொள்ளப்படலாம்.

மூன்றும் வருட வேலைகள் :—

(1) அந்தந்த தொழிற்சாலைகளின் உற்பத்திக்கும், லாபத்திற்கும் ஏற்றவாறு அந்தந்த தொழிற்சாலைகளை அதிகப்படுத்துதல்.

(2) தொழிலாளச் சிறுவர்கள் பழகுவதற்கான ரசாயன ஆராய்ச்சிச் சாலைகளை, மாகாண தொழில் ரசாயன ஆராய்ச்சிச் சாலைகளுடன் பிணைத்து உற்பத்திசெய்தலும், ஊக்கமும், பரபரப்பும் காட்டும் சிறுவர்களை மாகாணத் தொழிற்சாலைகளுக்கும், ஆராய்ச்சிச் சாலைகளுக்கும் அனுப்புவிக்கும் வசதிகளைச் செய்தல்.

(3) தொழில்வியாபார பண்டகசாலைகளையும், எல்லாத்தொழில்களுக்கும் ஒன்றுசேர்ந்ததாக ஜில்லா, தாலூக்கா தலைநகர்களில் ஏற்படுத்தி அவைகளை அரசாங்க மேற்பார்வையிலும், நேரான ஆட்சியிலும் அமைத்தல்.

(4) கிராம, தாலூக்கா, ஜில்லா தொழில்களையும் விலை விபரங்கண்ட ஜாபிதாக்களையும் விளம்பரப்படுத்தும் நோக்கமாய் மாகாண கைத்தொழில் இலக்காவிற்கும், கவர்ன்மெண்டாருக்கும் மூன்று மாதத்திற்கொருமுறை அனுப்பி வருதல்.

(5) ஐக்கிய நாணயசங்கங்களை அதிகப்படுத்துதலும், தனித்த தொழிற் பாங்கிகளை ஜில்லாக்கள்தோறும், கிளை பாங்கிகளை தாலூக்கா தோறும் உண்டு செய்தல் முதலியவைகள் மூன்றாவது வருட வேலை களாகக் குறிப்பிட்டிருந்தாலும், ஒரு சமயம் சில ஜில்லாக்களில் அவைகள் நான்கு வருடங்களிலேயும் செய்யமுடியாமற் போகலாம்.

நான்காம் வருட வேலைகள் :—

(1) கிராம, தாலூக்கா, ஜில்லா மாகாணத் தொழிற்சாலை அதி காரிகளையும், தொழில் நிபுணர்களையும் கொண்ட தொழில் மகாநாடு களை வருட மிருமுறை அவசியமான இடங்களில் கட்டாயமாகக் கூட்டுதல்.

(2) வருட மொருமுறை, விவசாய சம்பந்தமானவும், இதர ஆலைத்தொழில்கள், குடிசைத் தொழில்கள் சம்பந்தமான மாகாணப் பொருட் காட்சிகளை நிறுவி, உயர்தரக் காட்சிப்பொருள்களுக்கு தக்க பரிசும், கைத்தொழில் நிபுணர்களுக்கு படித்தரமான பட்டப்பெயர் களும் வழங்குதல்.

(3) குடிசைத் தொழிற்களில் நூதன இயந்திரங்களையும், தொழில் முறைகளையும் உபயோகிக்கச் செய்தலும், அதனாலுண்டா கும் தொழிற் பயன்களையும், லாபங்களையும் புள்ளி விபரங்களைக் கொண்டு வெளிப்படுத்தி அபிவிருத்தி செய்தல்.

(4) நாட்டுக்குடிசைத் தொழில்களான பொன், வெள்ளி உற்பத்திச் சாமான்களுக்கு, மேற்றிசையாரை யொத்து, 'ஹால் மார்க்' என்னும் பரிசுத்த அடையாளத்தையிடும் சட்டத்தைக் கொண்டு மோசடியான வியாபாரங்களை தடைசெய்தல்.

இவைகளனைத்தும் மேற்குறித்த நான்கு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கிக் காட்டி யிருந்தாலும் அவைகள் தனித்தனியே மிக விரி வுடையவைகளாகும். இவைகளை திருப்திகரமாக தொடர்ந்து செய்து முடிக்க சாதாரணமாக நான்கு வருடங்களின் கடின உழைப்பு இன்றி யமையாததாகும்.

ஐந்தாவது வருட வேலைகள் :—

(1) நம் நாட்டுக் குடிசைத் தொழில்களின் உற்பத்தி, தேவை, தொழில் நாணயம் முதலியவைகளை அந்நிய நாட்டுச் சரக்குகளுடன் ஒத்திட்டுப் பார்த்தபின் அந்நிய நாட்டுச் சரக்குகளை பகிஷ்கரித்தல்

அவைகளுக்கு அதிக தீர்வை ஏற்படுத்துதல் முதலிய அரசாங்க பாதுகாப்புகளைச் செய்து தரல்.

(2) ஒவ்வொரு தொழில் வட்டத்திலுள்ள, தொழில் நிபுணரல்லாத, தொழிலாளர்கள் அரசாங்கத்தாராலும், தொழிற் கில்டுகளாலும் பஞ்சாயத்தார்களாலும் அநுமதிக்கப்பட்டாலல்லது, வேறு தொழில் வட்டங்களுக்கு குடிப்புகாதிருக்கும் சட்டங்களை நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டுவருதல்.

(3) ஒவ்வொரு அரசாங்க உதவி பெற்ற தொழிற்சாலைகளிலும், கில்டுகளிலுமுள்ள தொழிலாளர்களை ரூ. 300 குறையாமல் மரண பண்டு, கல்யாண பண்டு, சிறுவர்களின் கல்வி பண்டுகளுக்கு கட்டாயமாக 'இன்ஷியூர்' செய்து, கூலிப்பிடித்தம் கொண்டு கட்டணம்சட்டவாயிலாகக் கட்டிவரச் செய்தல்.

(4) ஸ்தல பிரபலம்பெற்ற தொழில்களை பெரிய ஆலைகள், வேலைச்சாலைகள் மூலமாக வியாபார நோக்கங் கொண்டு குடிசைத் தொழில்களை நசுக்கிவிடாத வகையில் பரீட்சார்த்தமாக பல இடங்களில் கவர்ன்மெண்டார் கண்காணிப்பின்கீழ் ஏற்படுத்துதல்.

(5) இவ்வித தொழிற்சாலைகள் ஒழுங்கான முறையிலும், லாபகரமாகவும் செய்யப்பட்டால், கவர்ன்மெண்டார் இவைகளைக் கூட்டு வியாபாரக் கம்பெனிகளாகச் செய்து பாதிக்குக் குறையாத பங்கெடுத்துக்கொண்டு மற்ற பாதியைத் தொழிலாளர்களைக் கொண்டும், வர்த்தக சம்பந்தப்பட்டவர்களைக்கொண்டும் பங்கெடுக்கச்செய்து இவைகளை ஆங்காங்கு அபிவிருத்தி செய்தல் முதலியவைகளும் மேற்குறித்த ஐந்து வருடத் திட்டங்களுள் அடங்கும். இவ்வித வேலைகளனைத்தும் இம்முறையில் செய்யப்பட்டால் தேசத் திட்டமாகிய பத்து வருட காலத்திற்குள் பல பெரிய ஆலைகளும், தொழிற்சாலைகளும் இந்நாட்டில் நிலை நாட்டப்பெற்று; ஊசி முதல் பெரிய இயந்திரங்களையும், விளையாட்டு தகர பொம்மை சாமான்கள் முதல் பெரிய உருவச்சிலைகளையும் உண்டுசெய்யும் சக்தியை நம்நாட்டார் பெறுவார்களென்பது நிச்சயம். நம் நாடும் அந்நியர் கையை எதிர்பாராமல் நம் நாட்டிற்கு வேண்டுவனவற்றை நம்நாட்டிலேயே உற்பத்தி செய்துகொள்ளும் சுயபலத்தை அடைவதோடும், அந்நிய நாட்டிற்கு அபரிமிதமாக வாரிச்செல்லும் பொன்னையும், பொருளையும் தடைசெய்து இந்நாட்டிலேயே தங்கச்செய்யுமென்பதில் ஐயமில்லை.

பதினைந்தாவது அத்தியாயம்.

நூதன குடிசைத் தொழில்களும், அவைகளுக்கேற்ற இடங்களும்.

நூதன குடிசைத் தொழிலபிவிருத்தி செய்வதற்கு சில குறிப்பிட்ட முக்கியத் தொழில்களையும், இலாபகரமான தொழில்களை மட்டுமே முதலில் நாம் கவனித்தல் அவசியமாகும். பன்னிரண்டாவது அத்தியாயத்தில் பலவகை நூதன தொழில்கள் எட்டுப் பிரிவினைக்குள் அடக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. அவைகளுள் முதலாவதான இரும்புவேலைப் பகுதியில் சில முக்கியமான வேலைகளையும், அதற்குகந்த ஸ்தலங்களைப் பற்றியும் இங்கு பிரஸ்தாபிப்போம். இவ்வித வேலைகளை அந்தந்த இடங்களில் பரீட்சார்த்தமாக ஆரம்பித்து அரசாங்கத்தாரும், பொதுமக்களும் நடத்திப்பார்த்தால் ஒரு வருடத்திலேயே தக்க பலனைக் காணலாம். ஊசிகள், க்ஷவரக் கத்திகள், பேனாக்கத்திகள், சேப்டி க்ஷவரக்கத்திகள், கத்தரிக்கோல்கள் முதலிய தொழில்களை, சென்னை, சேலம்; மலையாளம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் ஸ்தாபித்தால், ஆங்கு பலவித வசதிகளுண்டு. குடும்பத்திற்கான இயந்திரங்களை செய்வதற்கு சென்னை, திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், அரக்கோணம் முதலியஇடங்கள் மிக சௌகர்யமுள்ளவைகளாகும். பலதரப்பட்ட ஆணிகள், ஸ்குரூ ஆணிகள், கீல், தாழ்ப்பாள், முளைகள், சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி முதலிய ஊர்களில் செய்யப்படலாம். பலவகைப்பட்ட இரும்புப் பெட்டிகள், பூட்டுகள், தகட்டினால் செய்யப்பட்ட அலமாரி, கைப்பெட்டிகள், சென்னை, நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் முதலிய முக்கிய இடங்களில் செய்விக்கப்படலாம். தொழிலாயுதங்களுக்கு சென்னை, திண்டுக்கல், தஞ்சாவூர், பெங்களூர் முதலிய இடங்களைக் குறிப்பிடலாம். இரும்புச் சங்கிலி, பித்தளைச் சங்கிலி வேலைத் தொழிற்சாலைகளை சென்னையிலும், திண்டிவனத்தைச் சார்ந்த ஓலக்கூரிலும் விருத்திசெய்வது நன்று. பாக்கு வெட்டிகள், அறியாமணைகள், திருகுகள் ஆலங்குடி வேலைக்காரர்களையும், மலையாளக்கம்மியர்களையும் கொண்டு தஞ்சை, மதுரை, திருநெல்வேலி முதலிய மத்திய ஸ்தலங்களில் உற்பத்தி செய்விப்பது நன்று. தோரணம் எனப்படும் பெரிய முள் தராசுகள் சென்னை, கும்பகோணம்,

திருச்சிராப்பள்ளி, வேலூர் முதலிய ஊர்களில் செய்விக்கப் படலாம்.

மரவேலை சம்பந்தத்தில், பர்னிச்சர்கள், காபிரெட்டுகள், குழந்தை வண்டிகள், ரிக்ஷா வண்டிகள், சென்னையிலும், மலபாரிலும், மேட்டுப்பாளையத்திலும், வேலூரிலும், திருச்சிராப்பள்ளியிலும் தனித்த தொழிற்சாலைகள் மூலம் செய்விக்கப்பட்டால் மிக்க லாபங்கொடுக்கும். பலவகைப்பட்ட கைப்பிரம்புகளையும், தடிகளையும், குன்னூரிலும், மலையாளத்தையொட்டிய பிராந்தியத்திலும் செய்விக்கப்படலாம். மரப்பேழைகளை, சீனப்பெட்டிகளையொத்து, சென்னையிலும், திருச்சிராப்பள்ளியிலும், நாகப்பட்டினத்திலும், அரக்கோணத்திலும், மதுரையிலும் செய்விக்கப்படலாம். மேட்டுப்பாளையத்திலும், திருவாங்கூர் எல்லைப்புறத்திலுமுள்ள மூன்று முக்கிய இடங்களில், 'பிளைவுட்' எனப்படும் மூன்றொட்டு, நாலொட்டு, ஐந்தொட்டுப் பலகைகளை வியாபார முறையில் செய்விக்கப் பலவித வசதிகளிருக்கின்றன. இவ்வித பலகைகள் இம்மாகாணத்தில் ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டு பலவித வேலைகளுக்கு உபயோகப்படுத்தப் பட்டு வருகின்றபடியால், இத்தொழிலை பரிசிலனை செய்வது மிக அவசியமாகும். மரப்பொம்மைகள், மரத்தட்டு, மரவைகள், சொப்புகள், அடுக்கு டப்பிகள், தாம்பாளங்கள் முதலியவைகளை ரங்கூன் சாமான்களைப்போல் அரக்கு வர்ணப் பூச்சுடன் விரிவான வியாபார முறையில் நடத்துவதற்கு திருப்பதி, திருச்சானூர், காளஹஸ்தி, திருவாங்கூர் எல்லைக்கு அருகாமையிலுள்ள இரண்டொரு ஸ்தலங்களையும் தேர்ந்தெடுக்கலாம். கள்ளையில் வெள்ளை மரத்திலும், நூக்கமரத்திலும் செய்யப்படும் மடக்கு நாற்காலி, கட்டில், மேஜை முதலியவைகளை குன்னூர், கோயமுத்தூர், மேட்டுப்பாளையம், சேலம், போன்ற இடங்களில் ஆரம்பித்துச் செய்வது நன்றாகும். திருச்சிராப்பள்ளியிலும், தாராபுரத்திலும் வண்டி, ரிக்ஷாவேலைகளைச் செய்வது நன்றாகும்.

பொன், வெள்ளி வேலைகளை கவர்ன்மெண்டாரின் நேரான கண்காணிப்பில் வைத்து நடத்துவது கூடாத காரியமாகும். என்றாலும், தொழில் ஐக்கிய நாணயசங்கங்கள் மூலமாகவும், கைத்தொழில் கூட்டுக்கம்பெனிகள் மூலமாகவும் சில குறிப்பிட்ட தொழில்களை மட்டும் செய்வதாலும், 'ஹால் மார்க்' என்னும் பரிசுத்த அடையாளமிட்டு விற்பனை செய்வதாலும் அபரிமித லாபத்தை அடையலாம். பொது ஜனங்களும் ஏமாற்றப்படாமல் தாங்கள் கொடுக்கும் பணத்திற்கு

யாதொரு நஷ்டமில்லாமல், சரியான பண்டங்களை வாங்குவதற்கும் கூடும். அச்சில் அழுத்தி எடுக்கும் வெள்ளிப் பாத்திரங்களை சென்னை, கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, காரைக்குடி, திருநெல்வேலி முதலிய முக்கிய இடங்களில் செய்விக்கலாம். இவ்விடங்களில் மின்சார சக்தி கிடைப்பதால் இவ்வேலைகளை சிக்கன முறையில் நடத்தக்கூடும். ரோல்டு கோல்டு பொத்தான்களையும், ஆபரணங்களையும் சென்னையிலும், குடந்தையிலும், மதுரையிலும் செய்விப்பது நன்றாகும்.

பொன், கவரிங் ஆபரணங்கள் சென்னையில் செய்யப்பட்டு வருவதுபோல் தஞ்சையிலும், திருச்சிராப்பள்ளி, மதுரை, வேலூர் முதலிய இடங்களிலும் செய்வித்தால் அத்தொழிலை விவசாயிகள் நிறைந்த அந்த ஜில்லாக்களில் இலாபகரமாக நடத்தலாம். இதே இடங்களில் பலவித கழுத்திலணியும் சங்கிலிகளையும், மோதிரங்களையும், வளையல்களையும் வியாபார முறையில் விரிவாகச்செய்யலாம்.

இனி உலோக வேலையை எடுத்துக்கொள்வோம். பித்தளை கெங்காளம், அண்டா, கொப்பரை, அடுக்குகள், குடம், தவலை முதலிய பெரிய பாத்திரங்களை இயந்திரங்களினுதவிகொண்ட தொழிற்சாலைகளில் நடத்துவது நன்று. இவ்வித தொழிற்சாலைகளில் கவர்ன்மெண்டார் பங்கெடுத்துக்கொள்வதும் ஐக்கிய தொழில் சங்கங்கள் மூலமாகச் செய்வதும் நல்ல பலனளிக்கும். இவ்வேலைகள் கும்பகோணம், காஞ்சீபுரம், அநுப்பர்பாளையம், நிலக்கோட்டை, திருக்கழுக்குன்றம், சங்கரநயினார்கோயில், வேலப்பாடி, முத்துநாய்க்கன்பட்டி முதலிய ஊர்களில் முதலாவதாகச் செய்யப்படலாம். டிப்பன் தூக்குகளையும், காப்பி வடிக்கும் பில்டர்களையும் அங்கு விரிவான வியாபார முறையில் செய்யலாம். டையில் அடிக்கும் ஜல பாத்திரங்களை கும்பகோணத்திலும், அநுப்பர்பாளையத்திலும், சென்னையிலும் செய்வது நன்மை பயக்கும். கிரோசின் பவர் விளக்குகளையும், காஸ் அடுப்பு (ஸ்டவ்)களையும் சென்னையில் மட்டும் ஆரம்பித்தல் நன்று. நிக்கல் பூசிய 'ஆக்ஸடைஸ்டு' செய்யப்பட்ட கதவு கீல்கள், தாழ்ப்பாள்கள், கைப்பிடிகள், சப்ஸ்போன்ற பூட்டுகள் திண்டுக்கல்லிலும், சென்னையிலும் செய்யப்படலாம். வெங்கலரயில் கூஜாக்கள், டம்ளர்கள், தட்டுகள் முதலியன கும்பகோணம், திண்டுக்கல், காளஹஸ்தி, சத்திரவாடி, மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், திருப்பதி முதலிய கைதேர்ந்த ஊர்களில் செய்விப்பது முறையாகும். நாச்சியார் கோயில் தொன்றுதொட்டு வெங்கலப்பானைகள்

செய்வதில் பேர்போனதாயிருப்பதால் அந்தத் தொழிலையும், மணிகள் வார்க்கும் தொழிலையும் ஐக்கிய சங்கமூலமாக அங்கு விருத்தி செய்வது நன்றாகும். வார்ப்பட விளையாட்டுச் சாமான்களை மதுரையிலும், சென்னையிலும் பிரபலமாகச் செய்விக்கலாம். 'இன்லெயிட்' என்னும் உலோகப் பதிப்புச் சொம்புகள், தட்டுகள், தாம்பாளங்கள், கிண்ணங்கள், குடங்கள், பூந்தொட்டிகள் முதலியவைகளை வியாபார முறையில் லாபகரமாகச் செய்வதற்கு தஞ்சாவூர் ஒன்றே ஏற்ற ஸ்தலமாகும். இவ்வித சாமான்கள் மேல்நாடுகளுக்கு உபயோகமானவைகளா யிருப்பதாலும், ஏற்றுமதி ஒருகாலத்தில் ஏராளமாகச் செய்யப்பட்டு வந்தமையாலும், இவ்வித தொழிற்சாலை யொன்றை அந்நகரில் அரசாங்கத்தாரின் நேரிய பொறுப்பில் ஸ்தாபித்தல் அவசியமாகும். நூதன வெங்கீர் பாய்லர்களையும், வேம்பாக்களையும் சென்னையிலும், கும்பகோணத்திலும் தனித்த தொழிற்சாலையாக வைத்து நடத்தலாம். ரயில் வண்டி, மோட்டார், டிராம் முதலிய பித்தளை தகட்டு விளையாட்டுச் சாமான்களை சென்னையைத் தவிர வேறு ஊர்களில் செய்விப்பது நல்ல பலனைக் கொடுக்காது. பலவித பேனு 'நிப்புகளும்' அப்படியே. தரா, நாகம் முதலியவைகளில் நம் நாட்டின் பெரியார்களின் உருவச்சிலையை சிறிய அளவில் 'பேப்பர் வெயிட்' கடுதாசி பறக்காமல் மேஜைமீது வைப்பதற்கு அநுகுணமாக வியாபாரமுறையில்செய்யும்தொழிற்சாலைகளை சென்னையிலும், மதுரையிலுய், தஞ்சாவூரில் ஏற்படுத்துவது அவசியமாகும். இவைகளுக்கு லட்சக் கணக்கான தேவை இந்நாட்டிலும், அயல் நாட்டிலும் உண்டு.

ரப்பர் உற்பத்தியாகும் இடங்களிலும் அவைகளுக்கு சமீபமான பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட இடங்களிலும் ரப்பர், செலுலாய்ட், வல்கனைட் முதலியவைகளாலாகும் பணிகளைச்செய்யும் தொழிற்சாலைகளை ஸ்தாபிப்பது மிக அவஸ்யமாகும். இஃது ஊதியம் கொடுக்கும் ஓர் பெரிய ஆலைத் தொழில். அந்நிய நாட்டார் இத்தொழில்களாலாகும் சாமான்கள் மூலமாக அளவற்ற திரவியத்தை அடைந்துவருகிறார்கள். செலுலாய்டு உற்பத்தி பொம்மைகளால் ஜப்பான் சென்ற ஒருவருடத்தில் சுமார் 7½ லட்சம் ரூபா வருமானத்தை யடைந்திருக்கின்றது. இத்தொழிலை இலாபகரமாகவும், பிரபல்லியமாகவும் நடத்த வேண்டுமானல், முதன்முதலாவதாக சேர்வராயமலை, நீலகிரி முதலிய காடுகளில் ரப்பர் தோட்டம் உண்டாக்கவேண்டும். இதற்கான வசதியுண்டாக்க விவசாய இலாக்கா நிபுணர்களைத் தூண்டுதல் வேண்டும்.

நீர்த்தாழ்ந்த திட்டைபோன்ற தென் பிராந்தியங்களில் இரண்டொரு ரப்பர் மரங்கள் உற்பத்தியாகின்றனவென்றால், இப் பிராந்தியம் ரப்பர் உற்பத்திக்கேற்றதென்றே கொள்ளவேண்டும். நெல் உற்பத்தியிலும், கரும்பு உற்பத்தியிலும் வீண்காலம் போக்கிவரும் இந்த இலாக்காவை நூதன வழிவகைகளைப் பின்பற்றக் கட்டாயப் படுத்துதல் வேண்டும். நமது நாட்டிலேயே போதுமான ரப்பர் உற்பத்திக்குக் காத்திராமல் வெளிகளினின்றும் ரப்பர் மூலப் பொருள்களைக் கொண்டு 12-வது அத்தியாயத்தில் ஐந்தாவது பகுதியில் சொல்லப்பட்டிருக்கும் எல்லா இலாபகரமான தொழில்களையும் செய்விப்பது காலங்கருதி மிக அத்தியாவஸ்யமாகும். இதற்கான தொழிற்சாலைகளை திருநெல்வேலி ஜில்லாவிலும், சென்னையிலும் ஏற்படுத்தலாம்.

தந்தம், கொம்பு, எலும்பு, முத்துச்சிப்பி, சங்கு, ஆமையோடு, கொட்டாங்கச்சி, சந்தனமரம் முதலியவைகளாலாகும் 12-வது அத்தியாயத்தில் ஆறுவது பகுதியில் கண்ட எல்லா முக்கிய பொருள்களையும், பிரிட்டிஷ்கொச்சின், தூத்துக்குடி, இராமநாதபுரம், பெங்களூர், தஞ்சாவூர் முதலிய இடங்களில் ஸ்தாபிப்பது நன்று. ஆமையோட்டு மூக்குக்கண்ணாடிச் சட்டங்களும், முத்துச் சிப்பியினாலான பலவகை பொத்தான்களும் எவ்வளவு கிராக்கியாக நமது கடைகளில் விற்கப் பட்டுவருகின்றன வென்பதையும், பொதுமக்கள் எவ்வளவு ஆவலுடன் அவைகளை வாங்கி உபயோகித்து வருகின்றனரென்பதை அறிந்தும் இவைகளில் நம் நாட்டார் இன்னும் கவனம்செலுத்தாதிருப்பது முற்றிலும் குற்றமேயாம்.

இனி நானாவித சாமான்களின்உற்பத்தியைஎடுத்துக்கொள்வோம். ஓலையால் முடையும் பலவகை வர்ணக் கூடைகளை திருநெல்வேலி, செட்டிநாடு, மேட்டுப்பாளையம், காஞ்சீபுரம், மதுராந்தகம், கிருஷ்ணகிரி, பொள்ளாச்சி முதலிய ஊர்களில் வியாபார அளவிற் செய்வதற்கு ஏற்றவசதிகளுண்டு. சென்னையிலும், வெளியூர்களிலுமுள்ள பிரஷ் தொழிற்சாலைகளுக்கு பண உதவி புரிவதால் அவைகளை பெரிய தொழிற்சாலைகளாக்கி உற்பத்தியை வியாபார வழியில் அதிகப் படுத்தலாம். பீங்கான் செய்யும் தொழிலை வெள்ளைக் களிமண் ஏராளமாக அகப்படும் இரண்டொரு ஊர்களில் ஏற்படுத்தலாம். இதற்கு வேலைக்காரர்களை வெளியூரினின்றும் வரவழைத்தல் அவசியமாகலாம். சென்ற 10 வருடங்களுக்குமுன் இத்தொழில் கவர்ன்மெண்டு கைத்தொழில் இலாக்காவின் கீழ் சென்னையில் பரீட்சை

செய்யப்பட்டது: பின் யாதொரு காரணம் காட்டாமல் அத்தொழிற் சாலை மூடிவிடப்பட்டது. ஆகையின் இதைப்பற்றிய அந்த இலாக்காவின் பரிசீலனையை தெரிந்துகொண்டு முதல் முதலாவதாக சென்னையல்லாத ஓர் இடத்தில் கைத்தொழில் இலாக்காவால் இஃது ஆழ்ந்து பரிசீலனை செய்யக் கட்டாயப்படுத்தப்படுவது அவசியமாகும். ராணிப்பேட்டையில் செய்யப்படும் மெருகுமண் ஜாடிகளைப்போல் பரமக்குடி, கள்ளிக்கோட்டை, தஞ்சாவூர் முதலிய இடங்களில் செய்விக்கப்படலாம்.

கண்ணாடி செய்யும் தொழில் சென்ற 30 வருடங்களுக்கு முன்பே சென்னையில் செய்து பார்க்கப்பட்டது. அதற்காக தருவித்திருந்த ஒரு ஜெர்மன் நிபுணர் அயல்நாட்டுக் கண்ணாடிச் சாமான் உற்பத்தியில் அக்கரைகொண்ட ஐரோப்பிய வியாபாரிகளால் திடீரென ஒரே ராத்திரியில் அப்புறப்படுத்தப்பட்டு, அத்தொழிற் சாலையும் நாசப்படுத்தப்பட்டது. இப்பொழுது ஒரு தொழிற்சாலை ஓர் மகம்மதியரால் சென்னையில் நடத்தப்பெற்று வருகின்றது. இதனை அரசாங்கத்தார் ஆதரித்தலும், அல்லது வியாபார முறையில் நிரந்தரமாக நடத்தச் செய்வித்தலும் வேண்டும். இத்தொழிலுக்கு மூலப்பொருள் சுத்தமான மெல்லிய மணலாகும். இவ்வித மணல் சென்னையிலும், நாகப்பட்டிணம், வேதாரண்யம் முதலிய இடங்களில் மட்டுமே அகப்படுகின்றமையால் அவ்விடங்களிலும் கண்ணாடித் தொழிற்சாலைகளை ஸ்தாபித்தல் நன்மை பயக்கும். இங்கு பலவித தர்மாஸ் பாட்டில்களும், எலக்டிரிக் டார்ச்சுகளையும் இதையொட்டிச் செய்விக்கலாம்.

மூக்குக்கண்ணாடி வில்லைகளையும், போட்டோ பூதக்கண்ணாடி லென்ஸ் எனப்படும் பெரிய வில்லைகளையும், செய்யும் ஓர் பெரிய தொழிற்சாலையை தஞ்சாவூரில் ஸ்தாபித்தல் மிக அவஸ்யமாகும். இதற்கு வேண்டிய கூழாங்கற்கள் வல்லத்திலும், பொன்னுகுளத்திலும், மஞ்சபேட்டையிலும், வளம்பக்குடியிலும், கீழப்பாலூரிலும் ஏராளமாக அகப்படுகின்றன. இக்கூழாங்கற்கள் பலவித நிறங்களிலும் கிடைக்கின்றன. நீலம், மேகவர்ணம், கருப்பு, சிறு கருப்பு, துல்லியமான வெள்ளை வர்ணங்களிலும் அகப்படுகின்றன. மழை பேய்ந்து ஓய்ந்தபின் பூமியின் மேற்புறத்திலேயே ஒரு நொடியில் ஆயிரக் கணக்கான கற்களை பொறுக்கி யெடுக்கலாம். சிறிய ஸ்படிகக் கற்களைக் கொண்டு ஸ்படிகமாலைகள், பொம்மைகள் செய்யலாம். இவ்விரு தொழில்களையும் அரசாங்கத்தாரின் நேரான பார்வையில்

இரண்டொரு வருடங்கள் நடத்தியபின் வியாபாரக்கூட்டுக் கம்பெனிகளிடம் ஒப்புவிப்பது நன்று. மேற்றிசையாரின் மூக்குக்கண்ணாடி வில்லைகளனைத்தும், உயர்வாகச் சொல்லிக் கொள்ளப்படுகிற அமெரிக்கன் குருக்ஸ் கண்ணாடி வில்லைகளும், வல்லம் ஸ்படிகவில்லைகளுக்கு ஒரு சிறிதும் இணையாக மாட்டாதென்பது தொழில் நிபுணர்களின் அபிப்பிராயம்.

காகிதத் தொழிலை, காடுகள் அடர்ந்த நம் நாட்டார் செய்யமுற்படாதிருப்பது நாட்டின் பெரும்பாவமென்றே சொல்லவேண்டும். இத்தொழிற்சாலை யொன்றை முதலில் மேட்டுப்பாளையத்தில் பரீட்சார்த்தமாக ஸ்தாபித்து நடத்துதல் நலமாகும்.

தகரம், உலோகம், மரம் முதலியவைகளல்லாத குழந்தைகள் விளையாட்டு பொம்மைச் சாமான்களைச் செய்வதற்கு தஞ்சாவூர், பண்ருட்டி, சென்னை, ஸ்ரீரங்கம், காளஹஸ்தி, கோயில் திருமங்கலம், ஐராவதநல்லூர் முதலிய ஊர்களில், தொழிலாளர்களுக்கு முன் பணம் உதவி செய்து தொழிலுற்பத்திச் சாமான்களை மத்திய பண்டக சாலைகளில் வியாபாரத்திற்காகக் கொண்டுவைக்கச் செய்வது நன்று. இவ்வித சாமான்களுக்கு உள்நாட்டிலும், அயல்நாட்டிலுங் அதிக தேவையிருக்கின்றது.

இந் நாட்டுக்கும், அந்நிய நாட்டுத் தேவைகளுக்கும் இன்றியமையாத தொழில் கோரைப்பாய் முடைதலாகும். இத்தொழில் இதுவரையில் உள்நாட்டுத் தேவைகளுக்கு மட்டுமே செய்யப்பட்டு வருகின்றன. இதில் தொழில் உன்னதமும், நாணயமும் அதிகம் இல்லை. விலைவாசியும் உயர்வாக யிருக்கின்றது. இப்பொழுது அழகிய மெல்லிய, சித்திரம் தீர்ந்த கோரைப்பாய்கள் 3 அடி முதல் 30 அடி வரையில் ஜப்பானிலிருந்து ஏராளமாக இறக்குமதி செய்விக்கப்படுகின்றன. விலையும் மிகச் சகாயமென்றே சொல்லவேண்டும். கொள்ளிடக் கரைகளிலும், காவேரி, தாம்பிரபரணிக் கரைகளிலும் ஏராளமான கோரைப்புற்கள் உற்பத்தியாகின்றன. இவைகளை ஜப்பான் பாய்களையொத்து வியாபாரச்சாமான்களாகச் செய்விப்பதில் நம் நாட்டார் இனி ஒரு சிறிதும் காலந்தாழ்க்கலாகாது. இன்னும் லாபந் தரக்கூடிய எத்தனையோ சில்லரைச் சாமான்களிருப்பினும், வியாபார முறைக்கேற்ற முக்கிய சாமான்கள் மட்டுமே இங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

நம் நாட்டு வாத்தியத் தொழில்களை அபிவிருத்தி செய்வது மிக அவஸ்யமாகும். இவ்வாத்தியங்களைச் செய்வதற்கு பலாமரம் இன்றி

யமையாதது. இஃது தஞ்சையில் ஏராளமாக அகப்படுவதாலும், இத்தொழில் பல நூற்றாண்டுகளாக அங்கு செய்யப்பட்டுவருவதாலும், பன்னிரண்டாவது அத்தியாயத்தில் எட்டாவது பிரிவினையில் கண்ட எல்லா வாத்தியங்களையும் இங்கு ஒரே தொழிற்சாலை மூலமாக அரசாங்க ஆதரவில் செய்வித்தால் மிக்கலாபங்கொடுக்கும். பியோனு, ஹார்மோனியம், கிராமபோன் முதலியவைகளை மட்டும் சென்னையிலும், திருச்சிராப்பள்ளியிலும் செய்விக்கலாம்.

நம் நாட்டுத்தொழில்களில் இலாபகரமானவைகளும், அவைகளை செய்வதற்கு ஏற்ற இடங்களும் கூடியவரையில் விளக்கமாக மேலே காட்டப்பட்டிருக்கின்றன. முக்கியமாக அந்த தொழிற்சாலைகளை அந்த ஊரிலேயே ஸ்தாபிக்கவேண்டுமென்பது கட்டாயமல்ல. ரயில் வசதியும், குடியிருப்பு வசதியுமுள்ள சமீப கிராமங்களிலும் அவ்வித தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாம். முதலாவதாக தொழிலாளர்களின் எண்ணிக்கையையும், விகிதாச்சாரத்தையும் பெருக்கவேண்டுவதே நம் நோக்கமாகவேண்டும். எல்லா வளம்பொருந்திய தஞ்சை ஜில்லாவில் தொழிலாளரின் விகிதாச்சாரம் நூற்றுக்கு பதினொன்றரை யென சமீபத்தில் கணக்கிடப் பட்டிருக்கிறது. இந்த விகிதாச்சாரம் ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 40-ஆக உயரவேண்டும். ஜப்பானிலும், அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் முறையே 78, 72, 67 விகிதாச்சாரத்தில் தொழிலாளர் இருந்து வருகிறார்கள். இதைப் போலவே மற்ற ஜில்லாக்களிலும் தொழிலாளர்களின் எண்ணிக்கை உயர்ந்தாலல்லது உண்மையான கிராமக் கைத்தொழில் புனருத்தாரணம் சித்திக்கமாட்டாது.

பதினாறாவது அத்தியாயம்

தொழிலாளர்களின் முயற்சியும், பொதுமக்களின் கடமையும்.

இந்நாட்டில் தொழிலாளர்கள் வீணே தம் வினையை நொந்து கொண்டு யாதொரு சுயமுயற்சியும் செய்து பாராமல் வாளாயிருந்து வறுமைக்குட்பட்டு வருந்தி வருகின்றனர். எவனொருவன் சுதந்திரமும், செல்வமுமடைய விரும்புகிறானோ அவனே அதற்கான வழிகளைத் தேடி அடி கோலவேண்டும். அதற்கு 'தன் கையே தனக்குதவி'

யென்னும் ஓர் காலங்கண்ட பழமொழியைக் கடைப்பிடித்தொழுகல் வேண்டும். அவர்கள் 'தங்களால் இயன்றவரையில் மாறுபட்டிருக்கும் தற்கால தேச நிலைமைக்கும், தேவைக்கும் தக்கவாறு நடந்துகொள்ள வேண்டும். தொழிலாளர்கள் இன்றிருப்பதுபோல் வாய்செத்த கால் நடைகளாக இருந்து வராமலும், இனி நடந்துக் கொள்ளாமலும், அந்நியரால் மேய்க்கப்படுவதற்கு இடங்கொடாமலும் உயிர்வாழ வேண்டும். தங்களாலியன்ற முழுதியாகத்தையும், தங்கள் திடம் பெற்ற கைகளைக்கொண்டும், உறம்பெற்ற மன உறுதிகொண்டும் செய்யவேண்டும். மானுஷீக முயற்சிகளெல்லாம் ஜெயம் பெறுவ தில்லை யென்பது உண்மையே ஆகும். ஆனால், 'முயற்சி திருவினை யாக்கும்' என்பதுபோல் நமது குறைகள் தெய்வத்தினருளால் நிவர்த்திக்கப்பட வேண்டியவைகளெனினும் நமது விடாமுயற்சி களின் மூலமாகவே அவைகள் முடிவடைகின்றன வென்பதை மறக்கலாகாது.

நமது நாட்டில் புராதன நிலைமையினின்றும் மாறாத பூர்வ குடிகளும், நவநாகரீக முதிர்ச்சி யடைந்தவர்களும் ஒருமித்து வாழ்ந்து வருகின்றனர். நாகரீக முதிர்ச்சி யடைந்தவர்களின் நிலைமையை அடைவதற்கு தொழிலாளர்கள் முற்படவேண்டும். இவ்வகை முன்னேற்றம் ஒரேநாளில் அடைய முடியாவிட்டாலும், காலக்கிரமத்தில் கல்வியறிவைப் பெருக்கிக் கொள்வதாலும், சிக்கன முறையில் வாழ்க்கையை நடத்துவதாலும், சோம்பியிராமல் தத்தம் தொழில் களை காலத்திலும், நேரத்திலும் துவக்கி நடத்திவருவதாலும், முக்கிய மாய் அந்நிய சமூகத்தாருடன் நாணயமாகவும், அந்யோந்ய வாஞ்சை யுடன் பழகி வருவதாலும் பெறுவது சுலபமாகும். முதல் முதலா வதாக நம் நாட்டுத் தொழிலாளர்கள் தொழில் மூலமாக ஸ்திரமான வருமானத்தை அடைய முயலவேண்டும். வேலைக்குத்தக்க கூலியை ஆசித்தால், ஒரு சமயம் அதிக வருமானம் கிடைத்தாலும் பலகாலம் தொழிலின்றி காலங்கழிக்க நேரிடும். ஸ்திரமான வருமானமிருந்தால் குடும்பச் செலவுகளை ஒழுங்குப்படுத்திக் கொள்ளக்கூடும். தம்மிடம் பிறர் தொழிலுக்காகக் கொடுத்த பொருளை கெடுத்துவிடாமலும், நஷ்டப்படாமலும், மதிப்புக் குறையாமலும் திருப்திகரமாக அவர் களுக்கு திருப்பிக் கொடுத்து அதற்கான நிவேதனத்தை நியாயமாகப் பெறவேண்டு மென்பதே தொழிலாளர்களின் விரதமாகவேண்டும். இம்முறையில் மேற்றிசைத் தொழிலாளர்களின் நாணயவரிசை உலகமே மெச்சக்கூடியதாக விருக்கின்றது. அவர்கள் நியாயமற்ற

வரும்படிக்கு ஆசைப்பட்டு தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட பண்டங்களின் உயர்வை ஒருநாளும் கெடுத்துவிட மாட்டார்கள். ஊரை விட்டு ஓடிவிடவு மாட்டார்கள். பொய்மையை இகழ்ந்து, வாய்மையை நிலைநாட்டின அரிச்சந்திரன், நளன் முதலிய சக்கிரவர்த்திகளின் பிறப்பிடமாகிய இந்நாட்டில் தொழில் விஷயத்தில் வாய்மையையும், மனத்தூய்மையையும் தொழிலாளர் கடைப்பிடிக்காவிடில் நாட்டிற்கே பெருத்த அபவாத முண்டாகுமென்பதை நன்குணர்ந்து நடந்து கொள்ளவேண்டும். ஒரு வேலையை பிறர் கையினின்றும் பிடுங்கிக் கொள்ளும் நோக்கமாய் வேலையின் கூலிகளைத் தாறுமாறாகக் குறைப்பதும், மற்ற வேலைக்காரர்களின் திறமையைக் குறைத்தும், நாணய வரிசையை இகழ்ந்து பேசுவதும் முக்கியமாக நம்நாட்டின்கண் எல்லா தொழிலாளர்களிடையேயுள்ள ஓர் பெருத்த துர்க்குணமாகும். இவ்விழிகுணத்தால் தாமும், பிறரும் முன்னுக்கு வருவதற்கு இயலாமற் போகின்றது. தொழில் மர்மங்களையும் அந்நியர் அறிந்துகொள்வதற்கும் காரணமாகின்றது. நிறுத்துபாராமல், கேட்ட கூலியைக் கொடுத்து, பயபக்தியுடன் ஆசிபெற்று வாங்கிச்செல்லும் திருமாங்கல்யங்களை விஸ்வகர்ம பொன்வேலைக்காரர்கள் இப்பொழுது பலதரப்பட்ட ஆணிகளைப்போல் செய்து செட்டிமார் கடைகளில் பரப்பி வருவதால் தங்கள் தொழில்கவுரவமும் இழந்து, அதனைத் தரித்துக் கொள்ளும் ஏதுமறியாப் பொதுமக்களின் வாழ்க்கைக்கும் இன்னல் புரிந்து வருகின்றார்கள். சுபவேளையில் சாஸ்திரோக்தமாய் பொன்னுருக்கி நல்ல ஓரையில் ஒருவேளை உணவுகொண்டு, மந்திர பூர்வகமாய்ச் செய்யவேண்டிய இவ்விவாக சின்னத்தொழிலை சின்னபின்னப் படுத்திய பாவத்தின் பலனை நம்நாட்டுக் கம்மியர் இன்றுமிக அநுபவித்துவருகின்றார்களென்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. இது விஷயத்தில் முதலாளிகளால், தொழிலாளிகள் தூண்டப்படுகின்றார்களென வைத்துக் கொண்டாலும், தொழிலாளர்கள் இவ்வித பாபத் தொழிலுக்கு உடன் படோமென்றால் அவர்கள் இவர்களை ஒருநாளும் கட்டாயப்படுத்தவே மாட்டார்கள். உலோகத் தொழிலை நடத்தும் பெரும்பாலருள் குடிப்பழக்கம் அதிகமிருந்து வருவதாகவும் சுமார் 100-க்கு 75 பேர்கள் அதன் அடிமைகளாகயிருந்து வருவதாகவும் கவர்ன்மெண்டாரின் கணிதையால் பெறப்படுகின்றது. குடிப்பிறப்பின் உயர்வையும், தொழிற்பெருமையும், முன்னோர் சிறப்பையும் கொண்டாடும் இப்பகுதியினர், இக்கொடிய பழக்கத்தை அறவே ஒழிக்கவேண்டும். இருபிறப்பிற்கும் தீயதாகிய கொடிய இப்பூதத்

திற்கிரையாகாமல் இந்நாட்டுத் தொழிலாளர் அனைவரும் தங்களையும், தங்கள் குடும்பங்களையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்.

எல்லாத் தொழிலாளர்களும் தங்கள் குடும்பக் காரியங்களில், சிக்கனமான வாழ்க்கையைப் பின்பற்றல்வேண்டும். வரும்படிக்கு தக்கவாறு தங்கள் குடும்பச் செலவுகளை ஒழுங்குப்படுத்திக்கொள்ள வேண்டும். குடும்ப காரியங்களுக்காக தங்களால் திருப்பிக் கொடுக்க முடியாத கடன் சுமையை தங்கள் தலைமீது சுமத்திக்கொள்ளலாகாது. கடன் கொடுக்க முற்படுபவர்கள் தொழிலாளர்களின் கூற்றுவரெனக் கொண்டு அவர்களை விட்டகலவேண்டும். முதலாளிகளுக்கு கடன் பட்ட தொழிலாளர் குடும்பங்கள் புத்திர, பௌத்திரர்கள் வரையில் அவர்களின் அடிமைகளாக இருந்து வருவதை இந்நாட்டில் எங்கும் காணலாம். இதற்கு வேறு சில காரணங்களும் உண்டு. தொழிலாளர்கள் தங்கள் மனைவி, மக்களை சிக்கனமான பழக்கத்தின்கீழ் கொண்டு வராதிருத்தலும், அவர்களை நம்பாமல் அடிமைகளைப்போல் நடத்தி வருவதுமாகும். இதற்கு உண்மையான ஓர் உதாரணம் இங்கு எடுத்துக்காட்டுவோம். சென்னையில் பெரம்பூர் ரயில்வே தொழிற்சாலையில் வேலைசெய்துவந்த நமது நண்பர் ஒருவர் சிறிது ரகசியக் குடிப்பழக்கமுள்ளவரா யிருந்தபோதிலும், மிகுதியான பணத்தை சிக்கனவாழ்வைக் கொண்ட தமது மனைவியிடம் கொடுத்துவந்தனர். குடும்பமும், மற்ற குடும்பக் காரியங்களும் இவ்வம்மையாரால் ஒழுங்காகவே நடைபெற்று வந்தன. இவர் திடீரென காலகதியாகவே இவரது உத்திரகிரியைக்குச் சென்றிருந்தபோது எமது முன்னிலையிலும், மற்றோர் முன்னிலையிலும், ஓர் அடுக்குப்பானை கொண்டு வந்து வைக்கப்பட்டது. அதில் ஐந்து ரூபாய், பத்து ரூபாய் நோட்டுகளும், முழுரூபாய்களும் நிறைந்திருந்தன. அவ்வம்மையார் இவைகளை எண்ணி கணக்கிட்டு, தமது இரு புத்திரர்களுக்கும், தமக்கும் ஒழுங்காகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டிக்கொண்டனர். எண்ணிப் பார்த்ததில் சுமார் ஐயாயிரத்து எழுபத்தைந்து ரூபாய் ரொக்கமும், நகையீட்டில் சுமார் நானூறு ரூபாயும், பத்திரங்களில் சுமார் ஐந்நூறு ரூபாயும் இருந்தது. இவ்வம்மையார் கல்வி வாசனை அறியாதவரா யிருந்தும் இவ்வித சிக்கனத்தைப் பின்பற்றியதை யார்தான் போற்றாதிருக்கக்கூடும்! இவ்வுதாரணத்தால் நமது ஸ்திரீகள் நம்பப்பட்டு, சிக்கனமுறைகள் போதிக்கப்பட்டால் அவர்கள் ஓர் குடும்ப பாங்கிக்குச் சமானமாகவே யிருந்துவருவார்களென்பது நிச்சயம்.

நம் நாட்டுத் தொழிலாளர் கல்விவாசனை யற்றவர்களாயினும் தம் மக்களை கல்வியில் பயிலச்செய்தல் மிக அவசியமாகும். குடும்பக் காரணங்களால் அவர்கள் படிப்பை நிறுத்தி, தொழிலில் பிரவேசிக்கச் செய்தால் வேலை யொழிந்த இராக்காலங்களில் அவர்களைக் கற்கத் தூண்டவும், பத்திரிகைகளை வாசிக்கச்செய்து, தாங்களும் உலகப் போக்கை அறிந்துவரவும் வேண்டும். மேல் நாடுகளிலும், ஜப்பானி லும், வண்டியோட்டுபவர்களும், ரிக்ஷா இழுப்பவர்களும், தங்கள் ஓய்வு காலங்களில் வண்டிகளிலிருந்தபடியே பத்திரிகைகளை மிக ஆவலுடனும், கவலையுடனும் எழுத்தெண்ணி வாசித்து வருகிறார் களென்றால், இந்நாட்டு அற்புதத் தொழிலாளர்கள் உலக வியவகாரங் களை அறியாத கிணற்றுத் தவளைகளாக யிருப்பதை யார்தான் பரிக சிக்காமலிருக்கக்கூடும்? மேல் நாட்டு வண்டிக்காரர்களுக்கிருக்கும், உலக ஞானமும், அரசியல் தேர்ச்சியும் நம்நாட்டுத் தொழிலாளர்க் கில்லையென்றால் நாம் வெட்கித் தலைகுனிய வேண்டாமா? நமது நாட்டையே உதாரணமாக எடுத்துக்கொள்வோம். இப்போது திருத்தியமைக்கப்பட்ட அரசியலில் கூலிகளுக்கும், மில்வேலைக்காரர் களுக்கும், மூட்டை சுமக்கும் தொழிலாளர்க்கும் சட்டசபையில் 6 பிரதிநிதிஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தும், நாட்டு உண்மை கைத்தொழிலாளர்க்கு ஒரு ஸ்தானமும் கொடுக்கப்பட வில்லையன்றோ? இதற்கு தொழிலாளர்களுக்குள் பொது ஸ்தாபனங் கள் இல்லாததும், தலைவர்களுக்குக் கட்டுப்பட்டு அவர்கள் காட்டும் வழிகளைப் பின்பற்றாது அசட்டைசெய்து வருவதும் முக்கிய காரணங்களாகும். எனவே, பண்டையக் காலத்து நாட்டாண்மை முறைகளும், எஜமான் ஸ்தானமும், கார்பார் ஸ்தானமும் தற்கால நாகரீகத்திற்கும், செல்வாக்கிற்கும் பொறுத்தமுள்ளவைகளல்ல வென்பதை உணர்ந்து, நம் நாட்டுத் தொழிலாளர்கள்—நெய்தற் தொழிலாளர்களாயினும்சரி—கம்மியர்களாயினும் சரி,—காலந்தாழ்க் காது தங்களுள் சபைகளையும், சங்கங்களையும் முக்கியமாய் தொழில் கில்டுகளையும் இந்தியன் டிரேட் யூனியன்கள் ஆக்டின் மூலமாகப் பதிவு செய்து கொண்டு இனி தொழில் நன்மைகளையும், அரசியல் சுதந் திரங்களையும் அடைவார்களாயின், அவைகளின் வழியே நாட்டுக் கைத்தொழிலபிவிருத்தி மிகப் பிரபல்லியமடையுமென்பது ஒருதலை. இஃதில்லையாயின் கிராமக் கைத்தொழில் புனருத்தாரணமென்பது அர்த்தமற்றதாகவும், பொய்யாகவும் முடியும். எனவே, நமது நாட்டுக் கைத்தொழிலபிவிருத்தி என்னும் தொழுவம், நொண்டி ஆடு

கள் வந்து சேரும் வரையில் மூடப்படாமல் திறந்திருந்தால், ஓநாய்களாகிய உரிமையற்ற அந்நியர்கள் உட்புகுந்து நமது தொழில்களைக் கொள்ளை கொண்டு, பூர்வத் தொழிலாளர்களை நிர்மூலப் படுத்துவார்களென்பது நிச்சயம்.

இனி நாட்டுக் கைத்தொழிலபிவிருத்தியில் பொதுமக்களின் கடமையைப்பற்றி சிறிது பிரஸ்தாபிப்போம். பொதுமக்களை மூன்று கூறுக்கினுல் அவர்களை தேசத்தலைவர்களெனவும், சமூகத் தலைவர் களெனவும், சாதாரண பொதுமக்களெனவும் ஆவார்கள். நமது நாட்டுத் தேசத் தலைவர்கள் பொதுமக்களை சமூகாபிவிருத்தியிலும், தேசாபிவிருத்தித் துறைகளிலும் நல்வழிப்படுத்த கங்கணம் பூண்டவர்களாவர். இவர்களில் ஒரு சிறு பகுதியரை, கைவிரலில் எண்ணிவிடக்கூடியவர்களைத் தவிர்த்து மற்றவர்களனை வரும் இரண்டுவித வாழ்க்கை கொண்டவர்களாக யிருக்கின்றனர். குடும்ப வாழ்க்கையில், சாதி முறையில் ஒரு சிறிதும் தவராது காலங்கழிப்பது ஒருவிதமான வாழ்க்கை. இதில் சாதிக்குரிய ஆச்சாரங்கள், அணிகள் முதலியவைக்ள் கைவிடப்படுவதில்லை. மற்றொரு வாழ்க்கை பொதுமேடை வாழ்க்கையாகும். இஃது சாதி, மதபேதத்தை வெறுத்து, இந்தியர் ஒரே சமூகமாக விளங்கவேண்டுமென்று, வாசா மனோசரமாகப் பேசிவருவது மற்றொருவிதமான வாழ்க்கை. பின்னுல் கூறிய போலி வாழ்க்கையை விடுத்து முன்னுல் கூறிய சாதி வாழ்க்கையை அநுசரித்து, எல்லா சமூகாபிவிருத்தியை நாடி அந்தந்த சமூகங்களின். தலை ஸ்தாபனங்களுடன் ஒத்துழைத்தால் சமூக முன்னேற்றத்தின் வழியே தேச முன்னேற்றம் வெகு விரைவில் ஏற்படும். இந்தியர், மகம்மதியர், சீக்கியர் கிருஸ்தவர்கள், ஹரிஜனங்கள் என்னும் சமூகப்பிரிவினையை ஒப்புக்கொண்டிருக்கும் ராஜீய பொது ஸ்தாபனங்கள், சாதி ஸ்தாபனங்களையும், தொழிலாளர் பிரிவினைகளையும் ஒப்புக்கொள்ள வேண்டுவது மிக அவசியமாகும். மேற்றிசை நாடுகளை யொத்து தொழிலாளர்களுக்கு சுயேச்சையும், அரசாங்க ஆதிக்கமும் கொடுக்காமல், காங்கிரஸ் ஆட்சிக்குள் அடக்கி வைக்கப் பார்ப்பதையும், அவர்களுக்கு யாதொரு சுதந்திரமும் கொடாமல் ஏமாற்றப்பட்டிருப்பதையும், இந்நாட்டு நெசவுத் தொழிலாளர்களும், கம்மியர்களுமுணர்ந்து தங்கள் ஸ்தாபனங்களைப் பெருக்கிக்கொண்டு காங்கிரஸின் தொழிற் பகுதியாராக விளங்க முற்படவேண்டும். இவ்வித வசதிகளை காங்கிரஸ் ஆட்சியில் ஈடுபட்டிருக்கும் தலைவர்கள் மனச்சாட்சியுடன் செய்து கொடுக்க

வேண்டும். ஹரிஜனங்களின் க்ஷேமைஸ்வர்யத்தில் பரிந்து மிகப் பரிவு காட்டுமிவர்கள், நாட்டுத் தொழிலாளர்களிடம் தயவுகாட்டாதிருப் பதின் காரணம் யாது? இவ்வித விலங்குகளை கைத்தொழிலாளர்கள் முறித்தெறிந்து இனி விடுதலையடைய முயலாவிட்டால், இதுவரை யில் தொழிலாளர் மற்றவர்க்கு அடிமைப்பட்டிருந்தது போதாமல், நாட்டுக்கு நன்மை செய்வதாகச் சொல்லிக்கொள்ளும் ஸ்தாபனங்களுக் கும் மீளா அடிமைகளாகி உயிர் வாழவேண்டி வரும்.

சமூகத் தலைவர்களெனப்படும் சாதித் தலைவர்களின் கடமை மிகப் பெரிதாகும். போலித் தலைவர்களையும், ஸ்தாபனங்களையும், பத்திரிகைகளையும், சுயநல விஷமிகளையும், சாம, தான, பேதங்களால் களையெடுத்தல் வேண்டும். பின்னர் சமூக மக்களை சீர்படுத்துதல் சுலபமாகும். தங்கள் தங்கள் சமூகத்தில் தற்காலப் போக்கை அநுசரித்த சீரிய முறையில், தக்க அஸ்திவாரங்கொண்ட ஸ்தாபனங் களை அமைத்தல் வேண்டும். இவ்வித ஸ்தாபனங்களின் பொருளா தாரத்தை முதலில் பெருக்க வேண்டும். சமூக ஸ்தாபனங்களாகிய பெருஞ்சகடம் ஓர் ர்ஜபாட்டையை கடைபிடித்துச் செல்லும்போது, எதிரிடையாகத் தோன்றும் ஞாளிகளின் உறுமலையும், கிடாக்களின் தாக்கலையும் உண்மைச் சமூகத் தலைவர்கள் ஓர் சிறிதும் பொருட் படுத்தலாகாது. சமூகச் சிறிய காரியங்களுக்கு அந்நியர் உதவியையும், அரசாங்கத்தார் ஆதரவையும் எதிர்நோக்கி காலங்கழிப்பது குல சுயமரியாதைக்கு ஓர் பெருத்த இழிவைக் கற்பிப்பதாகும்.

நம் நாட்டுக் கைத்தொழிலபிவிருத்தியில் பொது மக்களின் கடமை அபரிமிதமாக யிருக்கின்றது. பொதுமக்கள் நமது நாட்டு நெய்தற் தொழிலாளர்களிடத்தும், விஸ்வகர்ம வகுப்பினரிடத்தும் இன்று செய்ந்நன்றி மறந்தவர்களாகவே யிருந்து வருகின்றனர். தங்க ளுடைய மான சம்ரக்ஷணையை காத்துவரும் ஓர் வகுப்பாரையும், தாய், தந்தை, மனைவி, மக்கள், குரு, தெய்வம் என்ற பேதாபேதங்களையும் நாட்டிற்குச் செய்துதவிய பேருபகாரிகளான கம்மியரையும் கை தூக்கிவிட நினையாது காலங்கடத்துகின்றனர். ஏனைய நாட்டாரின் நாக ரீகத்திலும், இந்தியரின் நாகரீகமும், மத உன்னதமும் சிறந்து விளங் கும் காரணத்தை இவர்கள் ஊன்றி நோக்கினரில்லை. இவைகளுக்கு முக்கிய காரணம், நம்நாட்டு நெய்தற் தொழிலாளர், கம்மியர் இருவர் களின் கையற்புதங்களும் பின்னவரின் மனோவன்மையாலான ஆலய நிர்மாணமும், தெய்வ வழிபாடும், மநுநீதி முறையுமன்றோ? எனவே, இவர்கள் தாழ்ந்தவிடத்து பொதுமக்கள் இவர்களுடைய இடுக்கண்

களை களைவதிலும், பிரதி உபகாரம் புரிவதிலும் சிந்தை காட்டாது வாளாயிருந்து வருவார்களாயின் அவர்களை செய்ந்நன்றி மறந்தவர்களெனக் கூறுது வேறு எப்பதத்தால் அழைப்பது?

மதாபிமானம், குடும்பாபிமானம், சமூகாபிமானம் மூன்றும் நிறைந்தவிடத்து தேசாபிமானம் உண்டாகின்றது. தற்காலம் பொதுமக்கள் குடும்பாபிமானத்தையும், தேசாபிமானத்தையுமே பெரிதாகக் கருதுகின்றனர். இவ்வழி சாதிப்பிரிவினையும், மதவேறுபாடுமில்லாத மேல்நாடுகளுக்கும், ஜப்பான் தேசத்திற்கும் மிகப் பொருந்துமென்றாலும், தொழில் பேதத்தால் பல சாதிபேதமும், மதபேதமும் நிறைந்த நப் நாட்டில் தேசாபிமானத்தை மட்டும் பெருக்க நினைந்து முனைதல் பெரும்பயனளிக்கமாட்டாது. மதத்தின் வழியே குடும்பத்தையும், குடும்பங்களின் வழியே சமூகங்களையும், சமூகங்களின் வழியே தேசத்தையும் சீர்திருத்துவது சிறந்த முறையாகும். இதுவே இந்தியாவிற்கேற்ற அரசியல் சோபானுக்கிரமமாகும். இப்பொழுது முறைபிறழ்ந்து தேசாபிமானத்தில் மட்டும் பொதுமக்கள் முனைந்து முயல்வதால் சமூகத் தொழில்களாயுள்ள நம்நாட்டுக் கைத்தொழில்கள் நசித்தும், தலையெடுக்காமலும் இருந்து வருகின்றன. உண்மையான தேசாபிமானமென்பது, நம் நாட்டுக் கைதொழிலபிவிருத்தியில் மட்டுமே ஆரம்பிக்கின்றது. நமது நாட்டுக் குடிசைத்தொழில்களை ஆதரிப்பதால் அஃது அபிவிருத்தியடைகின்றது. முதல் முதலாவதாக நாட்டுப் பூர்வீகக் கைத் தொழிலாளர்களுக்குச் செய்யப்படும் உதவிகள் நாட்டின் க்ஷேமத்தையே கோரிச்செய்யப்படுவதாக பொதுமக்கள் திடமாக மனதில் கொள்ளவேண்டும். இவ்விதமாகக் கருதப்பட்டு ஜப்பான் தேசத்தில் தொழில் வர்க்கத்தினர் பிரதமத்தில் உபகாரம் செய்யப்படாவிட்டால், அத்தேசம் இற்றைய தொழிலுன்னதத்தையும், அரசியல் உச்சத்தையும் அடைந்திருக்க மாட்டாது. நம் நாட்டுக் கைத்தொழிலபிவிருத்தியில் பொதுமக்கள் அக்கரை கொண்டவர்களென்றுவது, தேசாபிமானம் மிகுந்தவர்களென்றுவது நிரூபிக்க வேண்டுமாயின் அதற்கேற்ற சமயம் இதுவேயாகும். இவ்வரிய சமயத்தை பொதுமக்கள் பயன்படுத்திக்கொண்டு தேசத்திற்கும், தேசக் கைத்தொழிலாளர்களுக்கும் நன்மைபுரிவதே தங்கள் கடமையாகக் கொள்ளல் வேண்டும்.

நம் நாட்டின் உற்பத்திச் சரக்குகளை பொதுமக்கள் இயன்றவரையில் வாங்கி உபயோகித்தல் வேண்டும். முதலில் நமது நாட்டுச்

சாமான்கள் சிறிது விலையதிகம் கொண்டதாக விருந்தபோதிலும் அவைகளையே வாங்கி ஆதரிக்க முற்படவேண்டும். பொதுமக்களின் தேசாபிமானம் செயலளவில் இவ்வழியே நிதர்சனப்படுத்தப்படல் வேண்டும். தங்கள் இல்லங்களிலும், காரியாலயங்களிலுமுள்ள அந்நிய நாட்டுச் சாமான்களை காலக்கிரமத்தில் ஒவ்வொன்றாக, அவசியமானால், அழித்துவிட்டு, அவைகளுக்குப் பிரதியாக நாட்டுஉற்பத்திச் சாமான்களைக்கொண்டு ஈடு செய்விப்பது உண்மை தேசாபிமானமாகலாம். அந்நிய நாட்டுச் சாமான்களை காணவும் பொதுமக்களின் கண்கள் கூச வேண்டும். இது சம்பந்தமாக ஆங்கிலேய நண்பர் ஒருவர் சொல்லியது இப்பொழுது ஞாபகத்திற்கு வருகின்றது. அவர் மோட்டார்கார் ஒன்றை வாங்கியபோது சொல்லியதாவது: "நான் ஒரு பிரிட்டிஷ் மோட்டார்காரை வாங்குவேன்: இல்லையேல், இந்தியாவில் செய்யப்பட்ட கார் ஒன்று கிடைக்குமாயின் அதை வாங்குவேன். இஃது இரண்டையும்விட்டு அந்நிய நாடுகளில் செய்யப்படும் மோட்டார் கார்களை வாங்குவதில் ஒரு தம்படியும் செலவழிக்கமாட்டேன். என் பணம் நான் பிறந்த நாட்டிற்காயினும், என்னை போஷிக்கும் நாட்டிற்காயினும் போய்ச்சேருவதே நியாயம்" என்றார். இதன் படிப்பினையை நம்நாட்டின் பொதுமக்கள் நன்குணர்ந்து, திடச்சித்தங் கொண்டு அந்நிய நாட்டுப் பொருள்களை நிராகரித்து, உள்நாட்டு உற்பத்திப் பொருள்களையும், பூர்வீகத் தொழிலாளர்களையும் கைதூக்கி விடுவார்களாயின், இந்தியதேசக் கைத்தொழிலபிவிருத்தி வெகு விரைவில் கைக்கூடி இந்தியா, ஏகாதிபத்தியத்தில் பூர்ண சுயேச்சையையும், செல்வச் செழிப்பையும், சுபிட்ச நிலைமையையும் உலகமே அதிசயிக்கும் வகையில் பெறுமென்பது திண்ணம்.

கேசரி அச்சுக்கூடம், சென்னை.

அநுபந்தம் A.

1936—37-ம் வருடத்தில் இம்மாகாணத்தின் ஏற்றுமதி, இறக்குமதிகளின் விவரம். (1935—36 விட)

ஏற்றுமதி அதிகம்	மதிப்பு	ஏற்றுமதி குறைவு	மதிப்பு	இறக்குமதி அதிகம்	மதிப்பு	இறக்குமதி குறைவு	மதிப்பு
	லட்சம் ரூ.		லட்சம் ரூ.		லட்சம் ரூ.		லட்சம் ரூ.
				பழைய நியூஸ்பேப்பர்	9½		
பசுத் தோல்கள்	249	காப்பிக்கொட்டை	1,589	மெஷின்கள், மில்கள்	3642	நொய்க்குறுணை	25
				மோட்டார் கார்கள்	7		
ஆட்டுத் தோல்	1,64,84	ரப்பர்	1,001	சைக்கிள்கள்	438	சர்க்கரை	12
				இலக்டிரிக் சாமான்கள்	6¼		
மணிலாக்கொட்டை	1,03,86	முந்திரிப்பருப்பு	100	ஜெர்மன் மெஷின்கள்	28	சோப்புகள்	3
				பெல்ஜியம் இரும்புகள்	7½		
பஞ்சு	3577	வெங்காயம்	18	ஜப்பான் துணிமணிகள்	26	பருத்தி துணிமணிகள்	28
				இலக்டிரிக் மெஷின்கள்			
கொட்டை முத்து	2427			இங்கிலாந்து ...	33½		
				ஜெர்மனி ...	9½		
				அமெரிக்கா ...	6½	பித்தளை சாமான்கள்	4
				ஜப்பான் ...	4½		
				பெல்ஜியம் ...	2		
ஜப்பான் வாங்கியிருக்கும் பழைய இரும்புகள் நூதன வேலைக்காக.	9¼			போட்டோ சாமான்கள்	2	இரும்பு எஃகு கட்டிகள்	7
				இலக்டிரிக் விசிறிகள்	3		
				ஜப்பான் செம்புக்கம்பிகள்	2½		
				பிரிட்டிஷ் செம்புக்கம்பிகள்	1		
				ஜர்மன் பித்தளைதகடுகள்	13¼		
				பிரிட்டிஷ் தகடுகள் ...	6		

குறிப்பு :—மேற்குறித்த புள்ளிகள் சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் ஆட்சி ஏற்படுவதற்கு முன் நிகழ்ந்தவைகளைக் குறிக்கும்.

"விஸ்வகலாநிதி"

சிற்பம், சித்திரம், கைத்தொழில் சம்பந்தமான
ஓர் சிறந்த மாதப் பத்திரிகை.

இஃது

விஸ்வகர்மரின் பண்டையத்தொழில்கள், ஆச்சாரம், குல முன்னேற்றம் முதலிய துறைகளில் முயன்றுழைக்கும், தமிழ் நாட்டின் தனித்த ஓர் குலப் பத்திரிகையாகும்.

அநுபவமிகுந்த பல குலத்தலைவர்களால், குலோத்தாரணம் ஒன்றையே எண்ணி யாதொரு பிரதிப் பிரயோசனம் கருதாது, தென்னிந்திய விஸ்வகர்ம மகாஜன மத்திய போர்டின் நேரான ஆதரவில் இஃது நடத்தப் பெறுகின்றது.

இதன்

வருடசந்தா

ரூபாய் ஒன்றே!

மானேஜர்,

விஸ்வகலாநிதி,

22-9, பிராட்வே,

சென்னை.